# தண்ணீருக்குள் தாகமா?



இறைவனின் இனிய இயல்புகள்
(ஓர் விவிலியக் கண்ணோட்டம்)

The Sweet Natures of God
(A Biblical Point of View)

தமிழ் நேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னா வெளியீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்ணீருக்குள் தாகமா?

## இறைவனின் இனிய இயல்புகள்

(ஓர் விவிலியக் கண்ணோட்டம்)

## The Sweet Natures of God

(A Biblical Point of View)

### தமிழ் நேசன்

மன்னா பதிப்பகம்

மறைக்கல்வி நிலையம்,
புனித செபஸ்தியார் பேராலய வீதி,
மன்னார், இலங்கை.

மன்னா வெளியீடு 1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் முகம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தண்ணீருக்குள் தாகமா? |
| ஆசிரியர் | : | தமிழ் நேசன் |
| மொழி | : | தமிழ் |
| பொருள் | : | ஆன்மீகம் |
| முதற் பதிப்பு | : | 2007 ஜனவரி |
| அச்சு எழுத்து | : | 11 |
| பக்கங்கள் | : | 103 + XVIII = 121 |
| உரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு | : | மன்னா பதிப்பகம் |
| அட்டைப் படம் | : | தமிழ் நேசன் |
| அச்சகம் | : | நந்தா அச்சகம், |
| | : | புளுமண்டல் றோட், கொழும்பு -13. |
| விலை | : | இலங்கை ரூபா 100.00 |
| தொடர்புகளுக்கு: | | அருட்பணி. பா. தமிழ் நேசன்<br>மறைக்கல்வி நிலையம்,<br>புனித செபஸ்தியார் பேராலய வீதி, மன்னார்.<br>தொலைபேசி இல. 023 - 2232377<br>செல்லிடத் தொலைபேசி இல. 0776943145 |

| | | |
|---|---|---|
| **Title** | : | **Thanneerukkul Thahama?** |
| **Author** | : | **Thamil Nesan** |
| **Language** | : | **Tamil** |
| **First Edition** | : | **20067 January** |
| **Pages** | : | **105 + XV = 120** |
| **Copy Rights** | : | **Author** |
| **Publishers** | : | **Manna Pablications** |
| **Cover Page** | : | **Thamil Nesan** |
| **Priters** | : | **Nantha Printers,** |
| **Prize** | : | **Sri Lankan Rs. 100. 00** |
| **Contact** | : | **Rev. Fr. Thamil Nesan<br>Catechetical Centre, St. Sebestian's Street,<br>Mannar, Sri Lanka** |
| **ISBN** | : | **955-1627-00-8** |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



**எம் அன்புக்குரிய இனிய தந்தை**

**திருமிகு**

## சந்தான் பாவிலு

**(நாட்டுக்கூத்துப் புலவர் - முருங்கன்)**

விலையில்லாக் கலைஞானம் எனக்குத் தந்தாய்
வித்தான கவிகளைக் கொத்தாகக் காட்டினாய்
சிலையாக நீ இன்று நிலைபெற்று நின்றாலும்
சிந்தை உன் நினைவினில் விந்தையாய் விரையுதே!

அலையாகத் துன்பங்கள் அடுக்கடுக்காய் வந்தாலும்
தலையான உன் வார்த்தை தத்துவமாய் ஒலிக்கிறதே
நிலைவாழ்வு பற்றியே நித்தமும் பேசினாய்
நின்பதம் இந்நூலினை சமர்ப்பணம் செய்கின்றேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்நூல் கிடைக்குமிடங்கள்

**மன்னார்**

- வளனகம், மறைக்கல்வி நிலையம், மன்னார்.

**வவுனியா**

- ஆவே மரியா, அந்தோனியார் ஆலயம், இறம்பைக்குளம், வவுனியா

**யாழ்ப்பாணம்**

- புனித வளனார் கத்தோலிக்க அச்சகம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
- மறைக்கல்வி நிலையம், பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**கொழும்பு**

- தேசிய மறைக்கல்வி நிலையம், 19, பல்கம் பிளேஸ், கொழும்பு 08.
- றண்ஸ்கா, 142,144, சென். அன்ரனிஸ் மாவத்தை, கொழும்பு 13.

**மட்டக்களப்பு**

- மறைக்கல்வி நடுநிலையம், மட்டக்களப்பு

**திருகோணமலை**

- மறைக்கல்வி நிலையம், திருகோணமலை

**கண்டி**

- மறைக்கல்வி நிலையம், கண்டி

**ஜேர்மனி**

- ஜேர்மன் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**பிரான்ஸ்**

- பிரான்ஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**சுவிஸ்**

- சுவிஸ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**இங்கிலாந்து**

- இங்கிலாந்து கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**கனடா**

- கனடா கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்

**நோர்வே**

- நோர்வே கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மறைமாவட்ட ஆயர்
# மேதகு தோமஸ் சௌந்தரநாயகம்
# ஆண்டகையின்
# ஆசியுரை



மன்னார் மறைமாவட்டத்தைச் சேர்ந்த அருட்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசரட்னம் அடிகளாருடைய "தண்ணீருக்குள் தாகமா?" என்ற நூலுக்கு ஆசியுரை எழுதுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.

மிக நீண்ட காலமாக *'தமிழ் நேசன்'* என்ற பெயரில் எழுத்துலகில் வலம் வந்த இவரின் இந்த முயற்சியை தமிழ்கூறும் நல்லுலகம் பாராட்டி வரவேற்கும் என்பதில் ஐயமில்லை.

இவர் சிறிய கதைகளுடன் சிந்தனைகளையும் இறைவார்த்தைகளையும் அழகுற இணைத்து இறைவனின் இனிய இயல்புகளை மகிழ்வாகவே சுவைக்க இந்த நூலில் வழிசெய்திருக்கின்றார். மறையுரைகளைத் தயார் செய்யவும் சிறு தியானங்களை நடத்தவும் பெரும் துணைபுரியும் இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என அழைப்புவிடுக்கின்றோம்.

இன்று வாசிப்புப் பழக்கம் மிகவும் அருகி வருகின்ற வேளையில், கதைகள் - சம்பவங்கள் - சிறுதுணுக்குகள் என்பவற்றோடு எழுத்து விடயங்களையும் மறையுரைகளையும் ஆரம்பிப்பது கசப்பு மாத்திரைகளை இனிப்புடன் கலந்து கொடுப்பது போன்றது. நீண்ட நேர வாசிப்பிற்கு நேரம் இல்லாத வேளைகளில் நிமிட நேரத்திற்கு வாசிப்பு விடையத்தை சுருக்கிக் கொடுப்பது வாசிக்க அழைக்கும் ஒரு யுத்தியாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய நவீன யுகத்தில் எல்லாமே வேகமாக சுருக்கமாக நடைபெறுகின்றபோது வாசிப்பு விடையங்களும் சுவையாக சுருக்கமாக எழுதப்படுவது வரவேற்கத்தக்கதாகும். இந்த விடையங்கள் இந்நூலில் கவனிக்கப்பட்டுள்ளன.

கவனத்தைக் கவர்ந்து சிந்திக்கத் தூண்டும் சிறிய கதைகளின் தெரிவு - அவற்றிற்கு மிகவும் பொருத்தமான தலைப்பு என்பவற்றோடு கதையோடே கலந்த சிந்தனை - அவற்றிற்குத் துணையான இறைவார்த்தை - என்பன இந்நூலின் தரத்தை மேலும் உறுதிப்படுத்தியுள்ளன.

இயேசுசபைக் குரவரான அருட்பணியாளர் அன்ரனி டிமெல்லோ அடிகளாருடைய *தவளையின் பிரார்த்தனை* - (The Prayer of the Frog) *நொடிப்பொழுதில் ஞானம்* - (One Minute Wisdom) *பறவையின் கீதம்* - (Song of the Bird) போன்ற நிமிடக் கதைகளைப் படித்து பலர் பயன்பெற்றுள்ளார்கள். இதே பாணியிலான கதைகளும் - சிந்தனைகளும் - சுவையாக சுருக்கமாக தரப்படும்போது பெரும் வரவேற்பைப் பெறும் என்பதில் ஐயமில்லை.

நேசன் அடிகளாருடைய இந்நூல் நல்வரவேற்பைப் பெற வாழ்த்துக்களையும், ஆசீரையும் தெரிவிக்கின்றோம்.

*மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை*
*யாழ் ஆயர்*
*யாழ் மறைமாவட்டம்.*


*ஆயர் இல்லம்,*
*யாழ்ப்பாணம்*

*05. 01. 2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர்
# அ. விக்ரர் சோசை அடிகளாரின்
# வாழ்த்துரை



எமது மன்னார் மறைமாவட்டக் குரு அருட்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசரெட்னம் அவர்களது படைப்பாகிய "தண்ணீருக்குள் தாகமா?" என்னும் நூலுக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

*'தமிழ் நேசன்'* என்னும் பெயரில் பத்திரிகை மற்றும் இலக்கியத் துறைகளுக்குப் பெரும் பங்காற்றியுள்ள அடிகளாரின் இம்முயற்சியும் பாராட்டுதற்குரியது.

இறைவனின் இனிய இயல்புகளை விவிலியக் கண்ணோட்டத்தில் வெளிக்கொணர முற்பட்டுள்ள நூலாசிரியர் நேசனின் இறையனுபவம் எமக்கோர் எடுத்துக்காட்டாக அமைகின்றது. இறைவனை அறிந்து, இறைவார்த்தையில் மறைந்துள்ள மறையுண்மைகளைக் கற்று, நமது வாழ்வை இறைவழியில், இறைப்பிரசன்னத்தில் இட்டுச்செல்ல இந்நூல் சிறப்பான ஓர் வழிகாட்டியாக அமையும் என நான் உளமார நம்புகின்றேன்.

இறைவனின் இனிய இயல்புகளைத் தம் வாழ்வில் அனுபவித்த இறையடியார்கள், புனிதர்கள், சாதாரண மனிதர்களின் வாழ்வு கலங்கரைத் தீபமாக நம்முன் விளங்குவதைப் பார்க்கின்றோம். வாழ்வின் நிலையாமையையும், சவால்களையும் இறைவனின் இனிய இயல்புகளுக்குட்படுத்தி தமது வாழ்வை மகிழ்ச்சிகரமாக, நிறைவுள்ளதாக, அர்த்தம் நிறைந்ததாக, அமைதியானதாக மாற்றியுள்ள இவர்களின் எடுத்துக்காட்டு, மேலும் நாம் அந்த இயல்புகளைப் பின்பற்ற நம்மையும் தூண்டி நிற்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவனின் இனிய இயல்புகளை இறைவார்த்தை ஊடாக நமக்கு விளக்கும் இந்நூல் ஆசிரியர் நேசனின் முயற்சி, இவ்வனுபவத்தின் நிலையான தன்மையை நமக்கு எடுத்துக்காட்டி நிற்கின்றது. "விண்ணும் மண்ணும் ஒழிந்துபோகும் ஆனால் என் வார்த்தைகளோ ஒழியவே மாட்டா" (மத்தேயு 24:35) என்ற இறைவார்த்தை இதை மேலும் மெருகூட்டி நிற்கின்றது.

இந்நூலை நமது இறைமக்கள் சிறப்பான விதத்தில் பயன்படுத்தி இறையனுபவம் பெற்றிட, அன்றாட வாழ்வின் அனுபவமாக இந்நூல் மாறிட எனது செபங்களும் வாழ்த்துக்களும்.

அருட்பணியாளர் நேசன் அவர்கள் இதுபோன்று இன்னும் பல ஆன்மீக, இறையியல், இலக்கியப் படைப்புக்களை வெளிக்கொணர்ந்து தமிழ்க் கிறிஸ்தவ உலகைத் தழைக்கச் செய்ய வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்து அவரை வாழ்த்திப் பாராட்டி அவருக்கு எனது நல்லாசிகளைக் கூறிநிற்கின்றேன்.

*அருட்பணியாளர் அ. விக்ரர் சோசை,*
*குருமுதல்வர்,*
*மன்னார் மறைமாவட்டம்.*

*ஆயர் இல்லம்,*
*பட்டித்தோட்டம்,*
*மன்னார்.*

*05. 01. 2007*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த பொதுநிலை இறைபணியாளர்

## திரு. ஜேக்கப் பெஞ்சமின் அவர்களின்

# பாராட்டுரை



இறைநூலின் கண்ணோட்டத்தில் இன்றைய இயல்பு வாழ்வை இணைத்துப் பார்ப்பது இயலுமானதா? என்ற மனிதனின் கேள்விக்கான பதிலே "தண்ணீருக்குள் தாகமா?" என்னும் இந்நூல்.

தனது பல்வேறுபட்ட ஆன்மீகப் பணிகள் மத்தியிலும், சமூக வாழ்வையும், ஆன்மீக வாழ்வையும் ஒருங்கே சீர்தூக்கி சிந்திக்கத் தூண்டிய இந்நூலின் ஆசிரியர் அருட்பணியாளர் நேசன் அவர்களை பொதுநிலைப்பணியாளர் சார்பிலே நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

இந்நூலானது ஆன்மீகப் பணிபுரியும் அனைத்துப் பணியாளர்களுக்கும் கைநூலாகப் பயன்படக்கூடியதான கையடக்க ஔடதமாகும் என்று கூறுவது மிகையானதல்ல.

இவர் ஓர் கலைக்குடும்பத்தில் விளைந்த வித்து என்பதால் இவரது முத்தான சிந்தனை எழுத்திலும் செயலிலும் முனைந்து வெளிப்படுகிறது. தனது எழுத்தாற்றலை கடந்த 20 வருடங்களாக பல்வேறு வடிவங்களில் மக்கள் சிந்தனைக்கும், சமூக முன்னேற்றத்திற்குமாக இவர் பயன்படுத்தி வந்தமை யாவரும் அறிந்ததே.

அதுமாத்திரமன்றி **'மன்னா'** என்ற மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராக கடந்த 2000 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பணியாற்றி வரும் இவர், இறைமக்கள் மத்தியில் ஆன்மீக வளர்ச்சிக்கு தனது பேனாவை பெரிதும் பயன்படுத்துகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகையின் ஊடாக சமாதானத்திற்கு இவர் வழங்கிய பங்களிப்பைப் பாராட்டி சர்வதேச சமாதான அமைப்பும் (Universal Peace Federation) மற்றும் உலக சமாதானத்திற்கான சர்வதேச அமைப்பும் (Interreligious and International Federation for World Peace) 'சமாதானத் தூதுவர்' (Ambassador For Peace) என்ற விருது வழங்கி கௌரவித்தமையை இவ்விடத்தே சுட்டிக்காட்டுவது பொருத்தமானதெனக் கருதுகிறேன்.

'தமிழ் நேசன்' என்ற புனைபெயரில் அச்சு ஊடகத்துறையில் உலாவி வரும் இவர் மன்னார் மண்ணின் கலைகள் மிளிரும் கிராமமான முருங்கனைச் சேர்ந்தவர். இதனால்தானோ என்னவோ இவரது எழுத்துக்களில் மண்ணின் வாடையும், சமூகப்பற்றும் விரவிக்காணப்படுகின்றது.

மக்கள் அரசியல் சூறாவளியில் அல்லலுற்று அகதிகளாகி ஆதங்கப்பட்டு வாழும் இக்காலத்திலே ஆண்டவர் தமது மக்களை இன்றும் கைவிடவில்லை என்கிற நம்பிக்கை ஒளி இந்நூலைப் படிப்பவரிடத்தே நிச்சயமாகத் தோன்றும் என்பது என் எண்ணம்.

காலத்தின் தேவையறிந்து சமூகப்பற்றோடு சமயப்பற்றையும் வளர்க்க இந்நூலாசிரியர் நேசன் அடிகளார் மேற்கொண்டுள்ள இம்முயற்சிக்கு ஆதரவளிப்பது நம்மவர் கடனே. தொடர்ந்தும் இவரது எழுத்துப்பணி சிறக்க இறைவனை வேண்டுகின்றேன்.

**அன்புடன்,**
**ஜே. பெஞ்சமின்**
**பொதுநிலை இறைபணியாளர்.**

**எமில் நகர்,**
**வைத்தியசாலைச் சந்தி,**
**மன்னார்.**

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னார் வலயக் கல்விப் பணிமனையின்

## தமிழ்மொழிப் பாட ஆசிரிய ஆலோசகர்

## திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின்

# அணிந்துரை



அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளார் கடந்த 20 வருடங்களாக கட்டுரை, கவிதை, சிறுகதை மற்றும் ஆய்வுக்கட்டுரைகளை பல்வேறு தொடர்பாடல் ஊடகங்களில் வழங்கிவந்தபோதிலும் முதன் முறையாக நூல் ஒன்றை இன்றைய காலகட்டத்தில் வெளியீடு செய்வது இவரது கன்னி முயற்சி என்று குறிப்பிடலாம்.

கணனித் தொழில்நுட்ப அறிவும், இணையத்தளத்தின் வேகமான வளர்ச்சியும், பல்வேறு சமூகத்தொடர்பாடல் ஊடகங்களும் மலிந்து மனிதர்களை திசைதிருப்பி பலதடவைகளில் மனித மாண்பினை இழக்கச் செய்கின்ற நிலையில், 'இறைவனின் இனிய இயல்புகளை" தாங்கிய பேழையாகிய இந்நூல் நம்மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன். மனிதம் புனிதம் பெற, நம்பிக்கை இழந்தவர்கள் நல்வாழ்வும் நம்பிக்கையும் பெற விவிலியக் கண்ணோட்டத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலாசிரியரான அருட்பணியாளர் நேசன் அடிகளார் 1997ல் வங்காலையின் உதவிப் பங்குத் தந்தையாக இருந்தவேளையில்தான் எனக்கு அறிமுகமானார். இவரின் ஞாயிறு மறையுரைகள் மற்றும் இயேசுவின் திருப்பாடுகளின் காட்சிகளை இனிய செந்தமிழில் எளிய வசன நடைகளில் கையாண்ட பாங்கு என்பன அடிகளாரின் எதிர்காலப் போக்கினை அவ்வேளையில் புடமிட்டுக்காட்டின.

குருத்துவ நிலைக்கு உயர்த்தப்பட்டு 9 ஆண்டு நிறைவிற்குள் பங்குத்தந்தையாக, மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையான **மன்னா** பத்திரிகையின் ஆசிரியராக, மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனராக, இன்னும் மறைத்தூதுப் பணிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழுவின் இயக்குனராக, சமாதானத் தூதுவராகப் பல முனைகளில் பணியாற்றிவருகின்ற அடிகளாரின் கடின உழைப்பும் அரியபெரும் பணிகளும் பாராட்டுதற்குரியன.

இனிய புன்முறுவலுடன் வந்த விருந்தினரை உபசரித்து, வரவேற்று, தமிழர் தம் பண்பாடு பேணிக்காக்கும் அடிகளாரின் செயற்திறன், சீரிய சிந்தனை, நேர்கொண்ட பார்வை, தூரநோக்கு, ஆளுமை அனைத்தும் இந்நூல் வெளியீடு செய்யக் காரணிகளாக அமைந்தன என்று கூறலாம்.

குருக்களுள் முதன் முதலாக, எம் மன்னார் மண்ணின் மைந்தன் நேசன் அடிகளார் விவிலியக் கண்ணோட்டத்தில், இறைவனின் இனிய இயல்புகளை *தண்ணீருக்குள் தாகமா?* என்ற நூலாக வெளியீடு செய்வதை எண்ணிப் பெருமிதம் அடைகின்றேன்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதும்போது மன்னாரிலும் ஏன் ஒரு தனிநாயகம் அடிகள் உருவாக முடியாது? என்ற வினா என்னுள்ளத்தில் எழுகின்றது. "கடுகு சிறிதென்றாலும் காரம் பெரிது" என்பார்கள். "நட்டுவப் பிள்ளைக்கு நொட்டியா காட்டவேண்டும்" என்ற பழமொழிகளுக்கு ஏற்ப பெற்றோர் உறவினர்களின் மரபுவழி ரீதியான கலை இலக்கிய உணர்வுகள் - திறமைகள் அடிகளாரின் வாழ்வில் - எழுத்தில் இழையோடி இருப்பதனை நன்கு அவதானிக்க முடிகின்றது.

*"இறைவன் என்னை நன்றாய்ப் படைத்தனன்"*
*தன்னை நன்றே தமிழ் செய்யுமாறு"*

என்ற திருமூலரின் மந்திரத்திற்கேற்ப இறைவனின் இனிய இயல்புகளை அழகு தமிழில் அழகாக எடுத்துரைக்கும் விதம் சிறப்பானது.

***"இறைவன் எவ்வளவு நல்லவர் என்று சுவைத்துப் பாருங்கள்"*** என திருப்பாடலில் கூறப்பட்டுள்ளதுபோல் இந்நூலாசிரியர், தான் இறைவனைச் சுவைத்த அனுபவத்தை தனது வாசகர்களுக்கு எடுத்து இயம்புகின்றார்.

தண்ணீருக்குள் தாகமா? தண்ணீருக்குள் இருப்பவனுக்கு தாகம் ஏற்படாது. அதைப்போன்று இறைவன் நம்முடன் இருப்பவர், நன்மை செய்பவர், தக்கவேளையில் பதிலளிப்பவர் என்று நாம் கற்றுக், கேட்டு, உணர்ந்தும் ஏன் கவலைப்படுகின்றோம்? இந்த மனிதனின் முரண்பட்ட நிலையைத் தண்ணீருக்குள் தாகமா? என்று உவமானம் உவமேயத்துடன் உவமித்துக் காட்டி வினாவாக எழுப்புகின்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலாசிரியர் என்னுரையில் குறிப்பிடும் வரிகள் நம் கவனத்திற்குரியது. *"அன்பு நிறைந்த ஆண்டவரை அண்டிவந்து வாழ்வுபெற விரும்பாமல் தூரத்தே நிற்கின்றோம். துயரத்தால் வாடுகின்றோம். இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம் தேடி அலைகின்றோம்"* என்று வாழ்வியலைத் துல்லியமாக எடுத்து இயம்புகின்றார்.

இந்நூலில் 25 இயல்களிலும் கதை, கருத்து, இறைவார்த்தை ஆகியன ஒரே ஒழுங்குமுறையில் அமைக்கப்பட்டிருப்பது நூலாசிரியர் ஒரே ஒழுங்குமுறையில் ஒழுகும் பண்பினை காட்டுவதாக உள்ளது.

இயல் - 1ல் மனிதர்களின் உடனிருப்பின் மகிழ்ச்சியைவிட நம்மைப் படைத்தவரின் உடனிருப்பு நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தரும் என்று கூறுகின்றார்.

இயல் - 2ல் *நன்மையே செய்பவர்* என்ற இறைவனின் குணவியல்புகளில் "நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையாவது செய்யாமலிரு" என்ற விவேகானந்தரின் வரிகளை மேற்கோள் காட்டுகின்றார். நமது ஆண்டவர் நன்மையின் ஊற்றும் உறைவிடமுமானவர் என்று 16 தடவைகளில் இறைவார்த்தைகளை எடுத்துக்காட்டியுள்ளார்.

இயல் - 3ல் ***கைவிடாதவர்*** என்ற இறை நிலையில் - வாழ்வியலில் நடப்புச் செய்திகள் தரப்பட்டுள்ளது. கைவிடப்பட்ட நிலமைகளை சுட்டிக்காட்டி, "வற்றாத நதிகள்கூட வரண்டு போகலாம். ஆனால் ஆண்டவரின் அன்பு ஒருநாளும் அகன்று போகாது" எனக் கூறி 12 தடவைகளில் விவிலியத்தில் இறைவார்த்தையினைச் சுட்டிக்காட்டுகிறார்.

இயல் - 4ல் ***பாதுகாப்பவர்*** என்ற குணவியல்பு கூறப்பட்டுள்ளது. வெறும் வெளித்தோற்றத்தை மட்டும் மாற்றினால் எல்லாம் மாறிவிடும் என்பது பொருளல்ல உள்ளத்தின் மாற்றம்தான் முக்கியமானது என்று கூறி, "கர்த்தர் நகரைக் காக்காவிட்டால் அதைக் காப்பவன் கண்விழிப்பது வீண்" என்ற இறைவார்த்தையை எடுத்தாண்டு, ஆண்டவர் பாதுகாப்பவர் என்பதைப் பற்றி 18 தடவைகள் விவிலியத்தில் இறைவார்த்தையினை எடுத்துக்காட்டியுள்ளார்.

இயல் - 5ல் ***வழிநடத்துபவா*** என்ற நிலையில் நம்மைப் படைத்த ஆண்டவர் நம்மை வழிநடத்த வருகின்றார் எனக் கூறுகின்றார். இங்கே 23 தடவைகள் விவிலியத்தில் இறைவார்த்தையினைச் சுட்டிக்காட்டியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறாக இந்நூலைத் தொகுத்து நோக்கின், இயல் 6இல் வெற்றிபெறச் செய்பவராகவும், இயல் 7இல் திட்டமிடுபவராகவும் இயல் 8இல் கண்ணீரைத் துடைப்பவராகவும், இயல் 9இல் ஆறுதல் தருபவராகவும், இயல் 10இல் நம்பிக்கைக்கு உரியவர் என்றும், இயல் 11இல் மன்னிப்பவர் என்றும், இயல் 12இல் ஆசிவழங்குபவர் என்றும், இயல் 13இல் நல்லாயனாக நடத்துபவர் என்றும், இயல் 14இல் அமைதி அருள்பவராகவும், இயல் 15இல் வாழ்வு தருபவராகவும், இயல் 16இல் வெட்கமுறாதபடி செய்பராகவும், இயல் 17இல் தாழ்ந்தோரை உயர்த்துகிறவராயும், இயல் 18இல் நமக்காகப் போராடுபவராகவும், இயல் 19இல் புடமிட்டுப் பரிசோதிப்பவராகவும், இயல் 20இல் துன்பங்களைத் துடைப்பவராகவும், இயல் 21இல் குணம் அளிப்பவராகவும், இயல் 22இல் துயரத்தை மகிழ்ச்சியாக்குபவராகவும், இயல் 23இல் ஒடுக்கப்பட்டவர்களை விடுவிப்பவராகவும், இயல் 24இல் தக்கவேளையில் பதிலளிப்பவராகவும், இயல் 25இல் வியத்தகு செயல்கள் செய்பவராகவும் இறைவனைப் பல்வேறு கோணங்களில் விவிலியக் கண்ணோட்டத்தில் ஒரே ஒழுங்கில் படம்பிடித்துக் காட்டியுள்ளமை உண்மையில் பாராட்டுதற்குரியது.

இந்நூல் பாடசாலையில் க.பொ.த சாதாரண, உயர்தர, மாணவர்கள், மறைவாழ்வுக்கல்வி கற்பவர்கள், பொதுநிலையினர், தன்னார்வ இறைவார்த்தைப்பணியாளர்கள், ஆசிரியர்கள் போன்றோர் அனைவருக்கும் மிகமிகப் பயன்படக்கூடிய நூலாக நான் கருதுகின்றேன்.

இந்நூலாசிரியரின் நோக்கம் இந்நூலை அனைவரும் படித்துப் பயன் பெறவேண்டும் என்பதாகும். அந்தவகையில் இந்நூல் விரைவாக வாசகர் கையில் தவழும் என்பதை ஆணித்தரமாகக் கூறுகின்றேன். நூலாசிரியர் அருட்பணியாளர் தமிழ் நேசன் அடிகளாரின் உயர்ந்த இலட்சியங்கள் விரைவில் நிறைவேற நான் வாழ்த்துகின்றேன்.

எமது மன்னார் மண்ணில் ஈழத் திருச்சபை வரலாற்றில் புகழ் பூத்த சமய, கலை, இலக்கியப் படைப்பாளிகள் வரிசையில் இடம்பிடித்திருப்பவர் தமிழ் நேசன் அடிகளார். மன்னாப் பத்திரிகைப் பணியுடன் அவருடைய நூல் வெளியீட்டுப் பணிகளும் சிறக்க அவரை வாழ்த்தி இந்த அணிந்துரையை நிறைவுசெய்கின்றேன்.

*திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட்,*
*தமிழ் மொழிப்பாட ஆசிரிய ஆலோசகர்,*
*வலயக்கல்விப் பணிமனை, மன்னார்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாசலில் வணங்குகிறேன்

நான் நீர் நிறைந்த நதியின் நடுவே நின்றுகொண்டு, "தாகம், தாகம்" என்று கத்தினால் நீங்கள் என்னைப் பற்றி என்ன நினைப்பீர்கள்? இறைவனின் இனிய இயல்புகள் விவிலியம் எங்கும் விரவிக்கிடக்கின்றன. அவற்றை அறியாமல், தெரியாமல், அனுபவிக்காமல் வாழ்வில் வரட்சியை, விரக்தியை, நாம் அனுபவிக்கின்றோம்.

"யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்ற அடிப்படையில் நான் சுவைத்த இறைவார்த்தையின் இனிய புதையல்களை மற்றவர்களோடும் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற எனது பலநாள் எண்ணத்தின் வெளிப்பாடே இந்நூல்.

"தாகமாய் இருப்பவர்களே! நீங்கள் அனைவரும் நீர் நிலைகளுக்கு வாருங்கள். கையில் பணம் இல்லாதவர்களே நீங்களும் வாருங்கள். தானியத்தை வாங்கி உண்ணுங்கள். வாருங்கள் காசு பணம் இன்றி திராட்சை இரசமும், பாலும் வாங்குங்கள். ..... எனக்குச் செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள்; கேளுங்கள்; அப்பொழுது நீங்கள் வாழ்வு அடைவீர்கள்."(எசாயா 55: 1 - 3) என ஆண்டவர் நம்மை அழைக்கின்றார்.

ஆண்டவரின் இனிய இயல்புகளை இறைவார்த்தையில் இருந்து அறிந்து தெளிந்து வாழ்வில் அனுபவிப்பதே நமது வாழ்வின் அமைதிக்கும் மகிழ்ச்சிக்குமான ஒரே வழி! ஆனால் நாம் மருத்துவரை நிராகரிக்கும் நோயாளிகளைப்போல அன்புநிறைந்த ஆண்டவரை அண்டிவந்து வாழ்வுபெற விரும்பாமல் தூரத்தே நிற்கின்றோம், துயரத்தில் வாடுகின்றோம்.

"இருக்கும் இடத்தைவிட்டு இல்லாத இடம்தேடி எங்கெங்கோ அலைகின்றார் ஞானத் தங்கமே" என்று பாடினார் கவிஞர் கண்ணதாசன். இது நம்முடைய ஆன்மீக வாழ்விற்கும் பொருந்தும். அமைதி, மகிழ்ச்சி, நிறைவு இருக்கும் இடம் நமது ஆண்டவர். அவரை விட்டுவிட்டு இந்த உலகம் தருகின்ற சில்லறைச் சந்தோசத்தில் திருப்திகாண முனைகின்றோம். அதன் விளைவு : நோய், ஏமாற்றம், விரக்தி, பயம், பதட்டம் ......!

எனவே நமது கிறிஸ்தவ வாழ்வுப் பயணத்தில் ஆண்டவரைப் பற்றிக்கொண்டு அவரது இயல்புகளை அறிந்து, அனுபவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவரும் மகிழ்வோடும் நிறைவோடும் வாழவேண்டும் என்பதே இந்த நூலின் நோக்கம் ஆகும்.

இந்நூலிற்கு பெரு மகிழ்ச்சியோடு ஆசியுரை வழங்கிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களுக்கு என் இதயம் நிறைந்த நன்றிகள். இந்நூலுக்கு வாழ்த்துரை வழங்கி அச்சிட அனுமதியளித்திருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் புதிய குருமுதல்வரும் எனது அன்புக்குரிய நண்பருமான அருட்பணியாளர் ஏ. விக்ரர் சோசை அடிகளாருக்கும், அணிந்துரை வழங்கி வாழ்த்தி இருக்கும் மன்னார் வலயக் கல்விப் பணிமனையின் தமிழ் பாட ஆசிரிய ஆலோசகரும், ஆர்வம் மிக்க இறைபணியாளருமான திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களுக்கும், பாராட்டுரை வழங்கி மகிழ்ந்திருக்கும் மன்னார் மறைமாவட்டத்தின் மூத்த பொதுநிலை இறைபணியாளர் திரு. ஜே. பெஞ்சமின் அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இந்நூலை சிறப்பான முறையில் கணனியில் எழுத்துருவாக்கிய எனது அன்புக்குரிய மன்னா பத்திரிகைப் பணியகப் பணியாளர்கள் செல்விகள். அ. டொமிற்றா, அ. தர்ஷினி, செல்வன் அலெக்ஸ் லவ்சன் ஆகியோருக்கும், தமிழ்த் திருத்தம் செய்து உதவிய செல்விகள் சி. கொன்சி குரூஸ், மற்றும் அ. ரேகா, ஆகியோருக்கும் என் இதய நன்றிகள். இந்நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த கொழும்பு - கொட்டாஞ்சேனை நந்தா பிறின்ரஸ் அச்சகத்தினருக்கும் என் நன்றிகள்.

இறுதியாக எனது எழுத்துப் பணியில் என்னை ஊக்குவித்து வழிநடத்திவரும் எமது ஆயர் மேதகு இரா. யோசேப்பு ஆண்டகைக்கும் முன்னாள் குருமுதல்வர் அருட்பணியாளர் ஏ. சேவியர் குரூஸ் அடிகளாருக்கும் எனக்குத் திரைமறைவில் இருந்து என்னை உற்சாகப்படுத்தும் என் சகோதர சகோதரிகளுக்கும் என்னைப் பாராட்டி ஊக்குவிக்கும் எனது குருத்துவ, துறவற நண்பர்கள் அனைவருக்கும் மற்றும் பொதுநிலையினர் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

**இந்நூலை வாசித்து, யோசித்து, சுவாசித்து**
**வாழ்வுபெற வாழ்த்துகள்!**

நிறைந்த அன்புடன்,
அருட்பணியாளர் தமிழ் நேசன்,
மறைக்கல்வி நிலையம்,
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 1

# நம்முடன் இருப்பவர்!

**கதை**

## தண்ணீர் இருக்கத் தாகம் எதற்கு?

*தென் அமெரிக்கக் கடலில் ஒரு பெரிய கப்பல் நிறைந்த மக்களோடு போய்க்கொண்டிருந்தது. திடீரென்று அக்கப்பலுக்கு அபாயச் செய்தி அனுப்பப்பட்டது. இதை அறிந்த கப்பலோட்டி கப்பலை நிறுத்தினார். ஏனெனில் கப்பலில் குடிக்கத் தண்ணீர் தட்டுப்பாடாகி விட்டது. எல்லோருமே தாகத்தால் வாடினார்கள். அபாயச் செய்தியைப் பெற்றுக்கொண்டு மற்றொரு கப்பலில் இருந்து செய்தி வந்தது.*

*"உங்கள் கப்பலைச் சுற்றிலும் குடி நீர் இருக்கிறது. அதிலிருந்து தண்ணீர் எடுத்து ஏன் பருகக்கூடாது?" என்பதே அச்செய்தி!*

*ஆம்! அவர்களைச் சுற்றிலும் நன்னீர் - குடிநீர் இருந்தது. அமேசன் நதியின் முகத்துவாரத்தில் கப்பல் நின்றுகொண்டிருந்தது. முகத்துவாரம் மிகப் பெரியதாய் இருந்ததால் தாங்கள் இன்னும் கடலில் இருப்பதாகவே கப்பல் மாலுமி உட்பட கப்பலில் இருந்தவர்கள் அனைவரும் நினைத்துக்கொண்டார்கள்.*

**கருத்து**

## உடனிருத்தல் உன்னதமான அனுபவம்!

உடனிருத்தல் உன்னதமான ஓர் அனுபவம்! உற்சாகம் தரும் அனுபவம்! சேயின் அருகில் தாய் இருப்பது – குழந்தைக்குப் பாதுகாப்பு உணர்வைத் தருகின்றது. நோயாளரை, வயோதிபரை, சிறைப்பட்டவர்களைச் சென்று சந்திப்பது - அவர்களோடு உடனிருப்பது அவர்களுக்கு ஆறுதலை, அக்கறையை, கரிசனையை வழங்கும் அனுபவமாக இருக்கின்றது. கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், நண்பன் - நண்பி, காதலன் - காதலி இவர்கள் ஒருவருக்கு அருகில் ஒருவர் இருப்பது அற்புதமான, ஆறுதலான, இனிய அனுபவமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதர்களின் உடனிருப்பு இத்தனை மகிழ்வையும் நிறைவையும் தருகின்றதென்றால் நம்மைப் படைத்த இறைவனின் உடனிருப்பு நமக்கு எத்தகைய உற்சாகத்தை, மகிழ்ச்சியைத் தரவேண்டும்?

கடவுள் இரண்டு தன்மைகளைக் கொண்டவர் என தத்துவம் விளக்குகின்றது. 1. கடந்தவர் (Trancendent) 2. கலந்தவர் (Immanent). கடவுள் என்றாலே கடந்தவர் என்றுதான் நாம் நினைக்கின்றோம். இது பழைய சித்தாந்தம். ஆனால் தற்கால இறையியலின்படி கடவுள் என்றால் கடந்து நிற்பவர் மட்டுமல்ல, கலந்து நிற்பவரும் ஆவார். மக்கள் துன்பப்படும்போது, தேவையில் துடிக்கின்றபோது, அடிமைத்தனத்தில் சிக்குண்டு தவிக்கும்போது நம்மோடு கலந்துவிடுகின்றார். ஆம். நம் கடவுள் கடந்தவர் மட்டுமல்ல. நம்மில் கலந்தவரும் ஆவார். அவரே இம்மானுவேல்! (மத்தேயு 1: 23)

நற்செய்தியாளர் புனித யோவான் நம்மோடு கலந்த கடவுளை நமக்கு இப்படிக் காட்டுகின்றார். "வாக்கு மனிதர் ஆனார் நம்மிடையே குடிகொண்டார்." (யோவான் 1 : 14)

நிழலாக நம்மைத் தொடர்பவர் நம் ஆண்டவர். அதனால்தான் திருப்பாடலின் ஆசிரியர் "உமது பிரசன்னத்தைவிட்டு நான் எங்கே செல்லக்கூடும்?" என வினவுகின்றார். "எங்களோடு தங்கும்" என்று எம்மாவுஸ் சீடர்கள் ஆண்டவரை வற்புறுத்திக் கேட்டுக்கொண்டபோது அவரும் அவர்களோடு தங்கினார். (லூக்.24:29)

இயேசுவின் ஐந்து காய வரம்பெற்ற நம் காலத்துப் புனிதர் ***தந்தை பியோ*** அவர்கள் நற்கருணை பெற்ற பிற்பாடு சொல்லப்படுவதற்காக தான் ஆக்கிய செபத்தில் **"என்னோடு தங்கும் ஆண்டவரே"** என்றுதான் கூறுகின்றார்.

கப்பலில் இருந்தவர்கள் தங்களைச் சுற்றிலும் குடி நீர் இருந்தும் அதனை அறியாமல் தாகத்தால் வாடினார்கள். பின் தண்ணீர் இருப்பதை அறிந்ததும் அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. இதன் மூலம் குறை நீங்கி நிறைவுபெற்று தம் பயணத்தை இனிதே தொடர்ந்தனர்.

பல்வேறு சமயங்களில் நமது நிலையும் இவ்வாறே உள்ளது. தம்மைச் சூழ்ந்திருந்த குடிநீரை அறியாமல் இருந்த அந்த மக்களைப் போன்றே நாமும் நம்மோடு இருக்கும் - நம்மைச் சூழ்ந்திருக்கும் ஆண்டவரின் பிரசன்னத்தை அறியாமல் - தெரியாமல் தனிமையில், வெறுமையில், விரக்தியில் வாழ்கின்றோம்.

**இதோ உடனிருப்பை உறுதிப்படுத்தும் ஆண்டவரின் வார்த்தைகள்!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவார்த்தை

– ***(ஆகாய் 2:4 (ஆ)*** “நாட்டிலுள்ள அனைத்து மக்களே, ஊக்கம் கொள்ளுங்கள்; பணியைத் தொடருங்கள்; ஏனெனில் **நான் உங்களோடு இருக்கிறேன்**” என்கிறார் படைகளின் ஆண்டவர்.

– ***(ஆகாய் 1:13)*** அப்போது ஆண்டவரின் தூதரான ஆகாய் மக்களிடம, **“நான் உங்களோடு இருக்கிறேன் என்கிறார் ஆண்டவர்”** என்னும் ஆண்டவரின் அருட்செய்தியை அவர்களுக்கு அறிவித்தார்.

– ***(எரேமியா 1:19)*** அவர்கள் உனக்கு எதிராகப் போராடுவார்கள். எனினும் உன்மேல் வெற்றி கொள்ள அவர்களால் இயலாது. ஏனெனில் உன்னை விடுவிக்க **நான் உன்னோடு இருக்கிறேன்”** என்கிறார் ஆண்டவர்.

– ***(எரேமியா 15:20)*** நான் உன்னை அவர்கள்முன் வலிமை வாய்ந்த வெண்கலச் சுவராக்குவேன்; அவர்கள் உனக்கு எதிராய்ப் போராடுவார்கள்; ஆனால், உன்மேல் வெற்றிகொள்ள மாட்டார்கள்; ஏனெனில் உன்னை விடுவிக்கவும் காக்கவும் **நான் உன்னோடு இருக்கிறேன்** என்கிறார் ஆண்டவர்.

– ***(இணைச் சட்டம் 7:21)*** அவர்களுக்கு அஞ்சவேண்டாம்; ஏனெனில் உங்கள் கடவுளாகிய **ஆண்டவர் உங்களிடையே உள்ளார்**; அஞ்சுதற்குரிய ஆற்றல்மிகு கடவுள் அவரே.

– ***(யோசுவா 1:9)*** நான் உனக்குக் கட்டளையிடவில்லையா? வீறுகொள்! துணிந்து நில்! அஞ்சாதே! கவலைப்படாதே! ஏனெனில் உன் கடவுளும் ஆண்டவருமான நான் நீ செல்லும் இடமெல்லாம் **உன்னோடு இருப்பேன்.”**

– ***(செப்பனியா 3:15)*** ஆண்டவர் உன் தண்டனைத் தீர்ப்பைத் தள்ளிவிட்டார்; உன் பகைவர்களை அப்புறப்படுத்தினார்; இஸ்ரயேலின் அரசராகிய **ஆண்டவர் உன் நடுவில் இருக்கின்றார்**; நீ இனி எந்தத் தீங்கிற்கும் அஞ்சமாட்டாய்.

– ***(செக்கரியா 2:10)*** மகளே, சீயோன்! அகமகிழ்ந்து ஆர்ப்பரி; இதோ நான் வருகிறேன்; வந்து **உன் நடுவில் குடிகொள்வேன்** என்கிறார் ஆண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*(ஆகாய் 2:5)* நீங்கள் எகிப்தினின்று புறப்பட்டு வந்த போது உங்களுக்கு நான் அளித்த வாக்குறுதியின்படி உங்கள் நடுவில் எனது ஆவி நிலை கொண்டிருக்கிறது; அஞ்சாதீர்கள்.

– *(இணைச் சட்டம் 4:7)* நாம் குரல் எழுப்பும் போதெல்லாம் நம் கடவுளாகிய ஆண்டவர் நம்மோடு உள்ளார். அவரைப்போல், மக்களுக்கு மிகவும் நெருங்கிய கடவுளைக்கொண்ட வேறு பேரினம் ஏதாகிலும் உண்டா?

– *(தொடக்க நூல் 21:22)* அக்காலத்தில் அபிமெலக்கு தன் படைத்தலைவன் பிக்கோலோடு வந்து ஆபிரகாமை நோக்கி, 'நீர் செய்கிற யாவற்றிலும் கடவுள் உம்முடனே இருக்கிறார்' என்றார்.

– *(தொடக்க நூல் 26:28)* அவர்கள் மறுமொழியாக, ஆண்டவர் உம்மோடு இருக்கிறாரென்று தெளிவாகக் கண்டோம் என்றார்கள்.

– *(தொடக்க நூல். 31:5ஆ)* என் தந்தையின் கடவுளோ என்னோடு இருந்து வருகிறார்.

– *(விடுதலைப் பயணம் 3:12)* அப்போது கடவுள், "நான் உன்னோடு இருப்பேன். மேலும் இம்மக்களை எகிப்திலிருந்து அழைத்துச் செல்லும்போது நீங்கள் இம்மலையில் கடவுளை வழிபடுவீர்கள். நானே உன்னை அனுப்பினேன் என்பதற்கு அடையாளம் இதுவே."

– *(திருப்பாடல் 23:4)* மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.

– *(யுதித்து 5:17)* அவர்கள் தங்கள் கடவுள் முன்னிலையில் பாவம் செய்யாதவரையில் வளமுடன் வாழ்ந்தார்கள்; ஏனெனில், அநீதியை வெறுக்கும் கடவுள் அவர்கள் நடுவே இருக்கிறார்.

– *(யுதித்து 13:11ஆ)* "திறங்கள், வாயிலைத் திறங்கள். கடவுள், நம் கடவுள் நம்மோடு இருக்கிறார்; அவர் இஸ்ரயேலருக்குத் தம் வலிமையையும் நம் பகைவர்களுக்கு எதிராய்த் தம் ஆற்றலையும் இன்று வெளிப்படுத்தியுள்ளார்" என்று கத்தினார்.

– *(எரேமியா 1:8)* அவர்கள்முன் அஞ்சாதே. ஏனெனில், உன்னை விடுவிக்க நான் உன்னோடு இருக்கின்றேன், என்கிறார் ஆண்டவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(செக்கரியா 2:11)*** அந்நாளில், வேற்றினத்தார் பலர் ஆண்டவரிடம் வந்து சேர்வார்கள்; அவர்கள் அவருடைய மக்களாய் இருப்பார்கள், **அவர் உன் நடுவில் தங்கியிருப்பார்**; நீங்களும், படைகளின் ஆண்டவரே என அறிந்துகொள்வீர்கள்.

– ***(யோவான் 14:23)*** அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார்; என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்புகொள்வார். நாங்கள் அவரிடம் வந்து **அவருடன் குடிகொள்வோம்.**

– **(திருப்பாடல் 125:2)** எருசலேமைச் சுற்றிலும் மலைகள் இருப்பதுபோல, ஆண்டவர் இப்போதும் **எப்போதும் தம் மக்களைச் சுற்றிலும் இருப்பார்.**

– ***(மத்தேயு 1:22,23)*** இதோ! கன்னி கருவுற்று ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார். அக்குழந்தைக்கு இம்மானுவேல் எனப் பெயரிடுவர் என்று இறைவாக்கினர் வாயிலாக ஆண்டவர் உரைத்தது நிறைவேறவே இவை யாவும் நிகழ்ந்தன. இம்மானுவேல் என்றால் **'கடவுள் நம்முடன் இருக்கிறார்'** என்பது பொருள்.

– ***(மத்தேயு 18:20)*** ஏனெனில் இரண்டு அல்லது மூன்று பேர் என் பெயரின் பொருட்டு எங்கே ஒன்றாகக் கூடியிருக்கின்றார்களோ அங்கே **அவர்களிடையே நான் இருக்கிறேன்** என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

– ***(மத்தேயு 28:20)*** "நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை **எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்**" என்று கூறினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்




# நன்மையே செய்பவர்

**கதை**

## ஒரு செருப்பால் யாருக்கும் பயன் இல்லை

*காந்தியடிகள் ஒருமுறை இரயிலில் ஏறும்போது ரயில் நகர்ந்துகொண்டிருந்ததால் அவசரத்தில் தடுமாறிய அவருடைய ஒரு காலில் இருந்த செருப்பு நழுவி பிளட் பார்க்கில் விழுந்துவிட்டது.*

*காந்தியடிகள் உடனடியாக அடுத்த காலில் உள்ள செருப்பையும் கழற்றி கீழே போட்டுவிட்டு ரயிலில் தொற்றிக்கொண்டார்.*

*"நழுவிய செருப்பை எடுக்காமல் ஏன் அடுத்த செருப்பையும் அதனருகில் தூக்கி வீசினீர்கள்?" என ரயிலில் நண்பர்கள் கேட்டபோது, "ஒரு செருப்பை போட்டால் அதை யாரும் பயன்படுத்த முடியாது. இரண்டையும் சேர்த்துப் போட்டால் யாராவது பயன்படுத்தலாம் அல்லவா" என்றாராம்.*

**கருத்து**

## இன்று நன்மைக்குக் காலமில்லை!

"நன்மைக்குக் காலமில்லை" என நம்மில் சிலர் அலுத்துக்கொள்வதைக் கேட்டிருக்கின்றோம். இன்றைய உலகில் தீமைகள் மலிந்துவிட்டன. போட்டி நிறைந்த உலகில் தீமையான வழிமுறைகள் மூலம் செல்வத்தையும் செல்வாக்கையும் பெருக்கிக்கொள்ள மனிதன் நாயாய், பேயாய் அலைகிறான். அந்த அலைச்சல் முடிவின்றி தொடர்கதையாகத் தொடர்கிறது.

இன்று தொலைக்காட்சி, இன்ரநெற், செல்லிடத் தொலைபேசி எனத் தீமைகளை ஊக்குவிக்கும் சாதனங்கள் மலிந்துள்ளன. (இவற்றின் தீமையான பக்கங்கள் மட்டுமே இங்கே சுட்டிக்காட்டப்படுகின்றது)

கடவுள் நாசரேத்து யேசுவின்மேல் தூய ஆவியாரின் வல்லமையைப் பொழிந்தருளினார். கடவுள் அவரோடு இருந்ததால் அலகையின் கொடுமைக்கு உட்பட்டிருந்த அனைவரையும் அவர் விடுவித்து எங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நன்மை செய்து கொண்டே சென்றார்.** (திருத்தூதர் பணி 10: 38) என இயேசுவின் நன்மைத்தனத்தை விவிலியம் விபரிக்கின்றது.
நன்மை செய்யும் ஆண்டவர், நாமும் நன்மை செய்ய வேண்டும் என்றே எதிர்பார்க்கின்றார்.
"நீங்கள் யாவரும் உங்களைச் சார்ந்தவற்றில் அல்ல, பிறரைச் சார்ந்தவற்றிலே அக்கறை கொள்ள வேண்டும். கிறிஸ்து இயேசுவில் இருந்த மனநிலையே உங்களிலும் இருப்பதாக." (பிலிப்பியர் 2: 4 -5).
"உங்களுக்குப் பிறர் என்னென்ன செய்ய வேண்டும் என்று விரும்புகிறீர்களோ, அவற்றையெல்லாம் நீங்களும் அவர்களுக்குச் செய்யுங்கள்" (மத். 7: 12) என விவிலியம் நமக்குப் படிப்பிக்கின்றது.
ஆனால் நமது மனித இயல்பு இதற்கு முரணாகச் செயலாற்றுவதையே நாம் காணுகின்றோம். இதோ இந்த் உண்மையை பவுலடியார் உணர்ந்து உரைக்கின்றார்.
"நன்மை செய்யும் விருப்பம் என்னிடம் இல்லாமல் இல்லை, அதைச் செய்யத்தான் முடியவில்லை. நான் விரும்பும் நன்மையைச் செய்வதில்லை; விரும்பாத தீமையையே செய்கின்றேன்." (உரோமர் 7:18-19) என அவர் அங்கலாய்க்கின்றார்.

இந்த அங்கலாய்ப்பும் ஆதங்கமும் பவுலடியாரின் அனுபவம் மட்டுமல்ல, நம் ஒவ்வொருவரின் அனுபவமும்தான் என்பதை நாம் அறிவோம். "நன்மை செய்யப் பிறந்த நீ நன்மை செய்யாவிட்டாலும் தீமையையாவது செய்யாமலிரு" என்கிறார் விவேகானந்தர்.
ஆனால் நமது ஆண்டவர் நன்மையின் ஊற்றும் உறைவிடமும் ஆனவர்.
நன்மைகள் நல்கும் நாயகன் நவின்ற வார்த்தைகள் இதோ;



## இறைவார்த்தை

**– *(திருப்பாடல் 119:68)*** நீர் நல்லவர்! நன்மையே செய்பவர்; எனக்கு உம் விதிமுறைகளைக் கற்பியும்.

**– (திருப்பாடல் 145:9)** ஆண்டவர் எல்லாருக்கும் நன்மை செய்பவர்; தாம் உண்டாக்கிய அனைத்தின்மீதும் இரக்கம் காட்டுபவர்.

**– *(திருப்பாடல் 85:12)*** நல்லதையே ஆண்டவர் அருள்வார்; நல்விளைவை நம்நாடு நல்கும்.

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(செக்கரியா 8:15)*** அவ்வாறே இந்நாள்களில் மீண்டும் எருசலேமுக்கும் யூதாவின் குடும்பத்தாருக்கும் **நன்மை செய்யத் திட்டமிட்டுள்ளேன்;** ஆகையால் அஞ்சாதீர்கள்.

– ***(செக்கரியா 9:12)*** நம்பிக்கையுடன் காத்திருக்கும் சிறைக் கைதிகளே, உங்கள் அரணுக்குத் திரும்பி வாருங்கள்; **இருமடங்கு நன்மைகள் நான் உங்களுக்குத் தருவேன்** என்று நான் இன்று உங்களுக்கு அறிவிக்கிறேன்.

– ***(எசாயா 61:7)*** அவமானத்திற்குப் பதிலாக நீங்கள் **இருபங்கு நன்மை அடைவீர்கள்;** அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள்; ஆதலால், நாட்டில் உங்கள் செல்வம் இருமடங்காகும் முடிவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகும்.

– ***(எரேமியா 32:40)*** நான் அவர்களோடு என்றும் நிலைத்திருக்கும் உடன்படிக்கை ஒன்றைச் செய்துகொள்வேன். எனவே அவர்களுக்கு **நன்மை செய்ய நான் தவறமாட்டேன்.** என்னைப் பற்றிய அச்சத்தை அவர்களது இதயத்தில் பதியவைப்பேன். இதனால் அவர்கள் என்னைவிட்டு விலகிச்செல்லமாட்டார்கள்.

– ***(எரேமியா 32:41)*** அவர்களுக்கு நன்மை புரிவதில் நான் மகிழ்ச்சி அடைவேன்; என் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் அவர்களை நான் இந்நாட்டில் உறுதியாக நிலைநாட்டுவேன்.

– ***(2 சாமுவேல் 16:12)*** ஒருவேளை ஆண்டவர் என் துயரத்தை காண்பார். இன்று அவன் பழித்துப் பேசியதற்காக ,எனக்கு அவர் **நன்மை செய்வார்.**

– ***(எசாயா 63:7)*** ஆண்டவரின் பேரன்புச் செயல்களை எடுத்துரைத்து அவருக்குப் புகழ்சாற்றுவேன்; ஏனெனில், ஆண்டவர் நமக்கு நன்மைகள் செய்துள்ளார்; தம் இரக்கத்தையும் பேரன்பையும் முன்னிட்டு இஸ்ரயேல் குடும்பத்தாருக்கு **மாபெரும் நன்மை செய்துள்ளார்.**

– ***(திருப்பாடல் 65:4)*** நீர் தேர்ந்தெடுத்து உம்மருகில் வைத்துக்கொள்ளும் மனிதர் பேறுபெற்றோர்; உம் கோவிலின் முற்றங்களில் அவர்கள் உறைந்திடுவர்; உமது இல்லத்தில், உமது திருமிகு கோவிலில் கிடைக்கும் **நன்மைகளால் நாங்கள் நிறைவு பெறுவோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


– *(திருப்பாடல் 125:4)* ஆண்டவரே! நல்லவர்களுக்கும் நேரிய இதயமுள்ளவர்களுக்கும் நீர் நன்மை செய்தருளும்.

– *(திருப்பாடல். 13:6)* *நான் ஆண்டவரைப் போற்றிப் பாடுவேன்;* ஏனெனில், அவர் எனக்கு நன்மை பல செய்துள்ளார்.

– *(திருப்பாடல் 86:17)* நன்மைத்தனத்தின் அடையாளம் ஒன்றை எனக்கு அருளும்; என் எதிரிகள் அதைக் கண்டு நாணுவர்; ஏனெனில், ஆண்டவராகிய நீர்தாமே எனக்குத் துணைசெய்து ஆறுதல் அளித்துள்ளீர்.

– *(திருப்பாடல். 116:12)* ஆண்டவர் எனக்குச் செய்த எல்லா நன்மைகளுக்காகவும் நான் அவருக்கு என்ன கைம்மாறு செய்வேன்?

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கைவிடாதவர்

கதை

## சனியன் ஒழியட்டும்!

ஒரு தடவை என்னுடைய நண்பர் ஒருவருடைய வீட்டிற்குப் போயிருந்தேன். அவருக்கு ஒரு மகனும், ஒரு மகளும் உண்டு! இருவரும் வெளியூரில் இருக்கிறார்கள். ஆனால், அவரது வீட்டில் புதிய ஒரு இளம் பெண் இருந்தாள். அவள்தான் ஓடோடிச் சென்று தேனீர், மற்றும் தின்பண்டங்களை கொண்டுவந்தாள். மிகுந்த புன்சிரிப்போடு சுறுசுறுப்பாக வேலைகளைச் செய்துகொண்டிருந்தாள்.

நான் என் நண்பரிடம், "யார் இந்தப் பெண்? நான் இதுவரையிலும் உங்கள் வீட்டில் இவளைப் பார்த்ததில்லையே!" என்று கேட்டேன்.

அப்பொழுது அவர் என்னிடம் அவளைக் குறித்து இவ்வாறு சொன்னார். "அண்மையில் எங்கள் உறவினர் ஒருவரின் வீட்டிற்கு நாங்கள் போயிருந்தபொழுது, அங்கே இந்தப் பெண்ணைப் பார்த்து, இவளது பரிதாப நிலையைக்கண்டு கலங்கினோம்.

காரணம், எங்கள் உறவினருக்கு இருந்த மற்றப் பிள்ளைகளைவிட இவள் கொஞ்சம் கறுப்பு நிறமாகப் பிறந்துவிட்டாள். எனவே தாய்க்கும், தகப்பனுக்கும் அவளைக் கண்டால் ஒரே வெறுப்பு. நன்றாக அடிப்பார்கள். ஒழுங்காக பள்ளிக்கூடம் அனுப்பமாட்டார்கள். வீட்டு வேலைகளையெல்லாம் பலவந்தம்பண்ணி செய்ய வைப்பார்கள். இந்தக் கொடூரக் காட்சியை நேரடியாகக் கண்டபொழுது, எங்கள் உள்ளமே உருகிப் போய்விட்டது. தன் சொந்தப்பிள்ளை கறுப்பாக இருக்கிறாள் என்பதற்காக, இப்படி பாடுபடுத்துகிறார்களே என்று வெதும்பினோம்.

வீடு திரும்பும்போது, "நாங்கள் இந்தப் பிள்ளையை எங்கள் வீட்டிற்கு கூட்டிக்கொண்டு போகிறோம்" என்று சொன்னபொழுது, கொஞ்சம்கூட உணர்வின்றி, 'கூட்டிக்கொண்டு போகிறீர்களா? சனியன் ஒழியட்டும்' என்றே சொன்னார்கள்.

மிகுந்த வேதனையோடு, இவளைக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டோம். இங்கு இவள் வந்ததிலிருந்து, சந்தோஷமாகவே இருக்கிறாள்" என்று கண்ணீரோடு சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து

## கவலையளிக்கும் கைவிடப்பட்ட நிலை

பெற்றோரால் கைவிடப்பட்ட பிள்ளைகள், பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெற்றோர்கள், காதலனால் கைவிடப்பட்ட காதலி, காதலியால் கைவிடப்பட்ட காதலன் .... என பட்டியல் நீண்டு செல்லும். கைவிடப்பட்ட நிலை ...... ! நிர்க்கதிக்குள்ளான நிலை .......! நினைக்கவே நெஞ்சம் நடுங்கும் பயங்கரமான வாழ்வின் அனுபவமாகும். வாழ்க்கையின் சில கட்டத்தில் மனிதன் இதனை அனுபவிக்க வேண்டிய நிலைக்கு உள்ளாகின்றான், உள்ளாக்கப்படுகின்றான்.

பெற்றோர் உற்றார் அற்ற பிள்ளைகளுக்கு என இல்லங்களை அமைத்து அவர்களைப் பராமரிப்பதுகூட அவர்கள் கைவிடப்பட்டவர்கள் அல்ல என்ற உணர்வை அவர்கள் உள்ளத்தில் பதிய வைப்பதற்காகவே.

அனைவராலும் கைவிடப்பட்ட நிலை சிலவேளை தற்கொலைக்குக்கூட மனிதனை இட்டுச்செல்லும். உலகில் அதிக தற்கொலை நடக்கும் நாடுகளின் பட்டியலில் இலங்கை முதலிடம் வகிப்பதாக சில ஆண்டுகளுக்கு முன்னர் வெளியிடப்பட்ட புள்ளிவிபரச் செய்தி ஒன்று கூறுகின்றது.

கடைசிவரை கைவிடமாட்டேன் என்று கூறி கழுத்தில் தாலி கட்டும் கணவன்கூட தான் தொட்டுத் தாலி கட்டிய மனைவியையும் அருமையான அழகான குழந்தைகளையும் கைவிட்டுவிட்டு 'கண்டதே காதல் கொண்டதே கோலம்' என இன்னொருத்தியோடு வாழ ஓடி விடுகின்றான். கைவிடப்பட்ட நிலையில் மனைவியும் பிள்ளைகளும் வாழ்வோடு போராடுகின்ற அவலங்களை நாம் நாளாந்தம் சந்திக்கின்றோம்.

யோசேப்பு தன் சகோதரர்களால் கைவிடப்பட்டார். ஆனால் ஆண்டவர் அவரைக் கைவிடவில்லை. ஒடுக்கப்பட்டவராக திக்கற்றவராக தன் சகோதரர்களாலேயே யோசேப்பு தண்ணீரில்லாத ஆழ்குழியில் போடப்பட்டபோதும் பின்னர் யூதாவின் ஆலோசனையின் பேரில் இஸ்ராயேலருக்கு 20 வெள்ளிக்காசுக்கு விற்று விடுகின்றபோதும் யோசேப்பை ஆண்டவர் கைவிடவில்லை. மாறாக ஆண்டவர் அவருக்கென ஒரு சிறப்பான திட்டத்தை வைத்திருந்தார்.


மிதியானியர் எகிப்தில் உள்ள பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவனும் மெய்க்காப்பாளர் தலைவனுமான போத்திபாரிடம் யோசேப்பை விற்றனர். புத்திபாரின் இடத்தில் யோசேப்பிற்க்கு நல்வாழ்வு காத்திருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*ஆம், மனிதர்கள் நடுவழியில் கைவிடுவர். எதிர்பாராத நேரத்தில் கழுத்தறுப்பர். ஆனால் ஆண்டவர் ஒருபோதும் நம்மைக் கைவிடமாட்டார். அதற்கான உறுதிமொழியை ஆண்டவர் தருகின்றார்.*

***வற்றாத நதிகள்கூட ஒரு நாள் வறண்டு போகலாம்.***
***ஆனால் ஆண்டவரின் அன்பு ஒருநாளும் அகன்று போகாது!***



## இறைவார்த்தை

– ***(தொடக்க நூல் 28:15)*** நான் உன்னோடு இருப்பேன். நீ எங்கு சென்றாலும் உனக்கு நான் காவலாயிருந்து இந்நாட்டிற்கு உன்னைத் திரும்பி வரச்செய்வேன். ஏனெனில், நான் உனக்கு வாக்களித்ததை நிறைவேற்றுமளவும் **உன்னைக் கைவிடமாட்டேன்** என்றார்.

– ***(திருப்பாடல் 27:10)*** என் தந்தையும் தாயும் என்னைக் கைவிட்டாலும் ஆண்டவர் **என்னை ஏற்றுக்கொள்வார்.**

– ***(யோசுவா 1:5)*** உன் வாழ்நாள் முழுவதும் எந்த மனிதனும் உன்னை எதிர்த்து நிற்கமாட்டான். மோசேயுடன் நான் இருந்ததுபோல் உன்னோடும் இருப்பேன். **உன்னைக் கைநெகிழ மாட்டேன்; கைவிடவும் மாட்டேன்.**

– ***(1 அரசர் 6:13)*** இஸ்ரயேல் மக்களிடையே குடியிருப்பேன்; என் மக்களாகிய **இஸ்ரயேலரைக் கைவிடமாட்டேன்** என்றார்.

– ***(இணைச்சட்டம் 31:6)*** (இ), 8 (இ) உன் கடவுளாகிய ஆண்டவரே உனக்குமுன் செல்பவர்! அவர் உன்னை விட்டு விலக மாட்டார்; **உன்னைக் கைவிடவும் மாட்டார்.** அஞ்சாதே, திகைக்காதே!

– ***(1 குறிப்பேடு. 28:20)*** தாவீது தம் மகன் சாலமோனை நோக்கி, 'நீ மன வலிமை கொள்! திடம் கொள்! உறுதியாயிரு! அஞ்சாதே! கலங்காதே! செயல்படு! கடவுளாகிய ஆண்டவர், என் கடவுள் உன்னோடும் இருக்கிறார். ஆண்டவரின் இல்லப்பணி அனைத்தும் நிறைவு பெறும்வரை அவர் உன்னைவிட்டு விலகார்; **உன்னைக் கைவிடார்'.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(இணைச் சட்டம். 4:31)*** ஏனெனில், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் இரக்கம்மிகு இறைவன். **அவர் உங்களைக் கைவிடமாட்டார்,** அழிக்கவும் மாட்டார். உங்கள் மூதாதையரோடு அவர் ஆணையிட்டுச் செய்த உடன்படிக்கையை மறக்கவும் மாட்டார்.

– ***(எசாயா. 41:17)*** ஏழைகளும் வறியோரும் நீரைத் தேடுகின்றனர்; அது கிடைக்கவில்லை. அவர்கள் தாகத்தால் நா வறண்டு போகின்றனர்; ஆண்டவராகிய நான் அவர்களுக்குப் பதிலளிப்பேன்; இஸ்ரயேலின் கடவுளாகிய நான **அவர்களைக் கைவிடமாட்டேன்.**

– ***(எசாயா. 42:16)*** பார்வையற்றோரை அவர்கள் அறியாத பாதையில் நடத்திச் செல்வேன்; அவர்கள் பழகாத சாலைகளில் வழிநடத்துவேன்; அவர்கள்முன் இருளை ஒளியாக்குவேன்; கரடுமுரடான இடங்களைச் சமதளமாக்குவேன்; இவை நான் அவர்களுக்காகச் செய்யவிருப்பன; நான் **அவர்களைக் கைநெகிழ மாட்டேன்.**

– ***(புலம்பல் .3:31)*** என் தலைவர் என்றுமே **கைவிட மாட்டார்!**

– ***(சீராக்கின் ஞானம். 17:21)*** ஆண்டவர் நல்லவர்; அவர் தம் படைப்புகளை அறிவார். அவற்றை அவர் விட்டுவிடவில்லை, **கைவிடவுமில்லை;** மாறாகப் பாதுகாத்தார்.

– ***(எபிரேயர். 13:5)*** நான் ஒருபோதும் **உன்னைக் கைவிடமாட்டேன!** உன்னை விட்டு விலகமாட்டேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 4

# பாதுகாப்பவர்

கதை

## உள்ளத்தில் நீ இன்னும் எலிதான்

*துறவி ஒருவர் தவம் செய்துகொண்டிருந்தார். அப்பொழுது ஒரு எலி அவரிடம் வந்து வணங்கி கவலையோடு நின்றது. துறவி எலியிடம் "உனக்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார். அதற்கு எலி கூறியது, "ஐயா! எனக்கு பூனையைக் கண்டால் பயமாக இருக்கிறது. உடல் எல்லாம் நடுங்குகிறது. என்னால் நிம்மதியாகவே வாழ முடியவில்லை. எனவே தயவுசெய்து என்னைப் பூனையாக மாற்றிவிடுங்கள்' என்று கூறியது. அந்தத் துறவியும் சரி என்று கூறி, அந்த எலியை பூனையாக மாற்றி அனுப்பிவிட்டார்.*

*சிறிது நாட்கள் சென்றன. அந்தப் பூனை மீண்டும் துறவியைத் தேடிவந்தது. "ஐயா! எனக்கு நாயைக் கண்டால் பயமாக இருக்கிறது. எனவே என்னை நாயாக மாற்றிவிடுங்கள். நானும் சந்தோஷமாக இருப்பேன்" என்றது. உடனே துறவியும் அந்த பூனையை நாயாக மாற்றினார்.*

*சில நாட்கள் சென்றபின், அந்த நாய் மீண்டும் துறவியிடம் வந்து, பணிவோடு கேட்டது, "ஐயா! ஓநாய் என்னைத் துரத்துகிறது. அதனிடமிருந்து தப்பிக்கவே கஷ்டமாக உள்ளது. எனவே, தயவுசெய்து என்னை ஓநாயாக மாற்றிவிடுங்கள்" என்று கேட்டது. அந்த துறவியும் சரி எனக்கூறி அந்த நாயை ஓநாயாக மாற்றி அனுப்பிவிட்டார்.*

*காட்டிற்குள் சென்றதும் ஓநாய் அங்கு நடமாடிக்கொண்டிருந்த சிங்கத்தைப் பார்க்க, சிங்கம் ஓநாயைப் பார்க்க, துரத்திச் சென்றதும் ஓநாய் பயந்து நடுங்கிக்கொண்டே, 'தப்பித்தோம் பிழைத்தோம்' என்று ஓடி, மூச்சு வாங்க துறவியின் முன்வந்து நின்றது. துறவி ஓநாயிடம் "என்ன நடந்தது? ஏன் உன் உடல் இப்படி நடுங்குகிறது" எனக் கேட்டார்.*

*அதற்கு ஓநாய், "ஐயா நான் காட்டிற்குள் சென்றதும், ஒரு சிங்கம் என்னைத் துரத்தியது. எங்கே, என்னைப் பிடித்து தின்றுவிடுமோ என்று பயத்தில் இங்கு உங்களிடம் வந்திருக்கின்றேன். எனவே ஐயா!*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*என்னை ஒரு சிங் ....'' "போதும்! போதும்! நிறுத்து! நீ என்ன சொல்லப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். நீ என்னவாக மாறினாலும், உன் மனதில் பயம் இருக்கும்வரை நீ எலியாகத்தான் இருக்க முடியும்.*

*வெறும் வெளித்தோற்றத்தில் மட்டும் மாறினால் எல்லாம் மாறிவிடும் என்பது பொருளல்ல. உள்ளத்தின் மாற்றம்தான் முக்கியமானது. உள்ளத்தில் நீ இன்னும் எலியாகத்தான் இருக்கிறாய். எனவே, உன்னை திரும்பவும் எலியாகவே மாற்றிவிடுகின்றேன்' எனக்கூறி, அந்த ஓநாயை மீண்டும் எலியாகவே மாற்றிவிட்டார் அந்தத் துறவி.*

**கருத்து**

## பாதுகாப்பு! ஓர் பரபரப்பான சமாச்சாரம்!

பாதுகாப்பு இன்று பரவலாக - அதேவேளை பலமாகப் பேசப்படுகின்ற ஓர் விடயமாகி விட்டது. அரசியல் ரீதியான பாதுகாப்பு, சமூகப் பாதுகாப்பு, பொருளாதாரப் பாதுகாப்பு என இதன் பட்டியல் நீளும்.

இரண்டு உலகப் போர்களில் இருந்து பாடம் படித்த அரசியல் தலைவர்கள் மீண்டும் ஓர் உலக யுத்தம் ஏற்படக்கூடாது என்பதற்காக ஓர் உலக அமைப்பை ஏற்படுத்தினார்கள். அதுதான் ஐக்கிய நாடுகள் சபை! உலக அரங்கில் போர்களைத் தடுத்து மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த ஏற்படுத்தப்பட்ட இந்த உலக அமைப்பினையும் மீறி இன்று போர்கள் நடந்துகொண்டே இருக்கின்றன.

மக்களின் சமூகப் பாதுகாப்பை, பொருளாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்த இன்று பல்வேறு காப்புறுதிக் கொள்கைகள் கவர்ச்சியான சலுகைகளோடு அறிமுகப்படுத்தப்படுகின்றன.

இன்றைய நமது மண்ணின் சூழலில் உயிருக்கு உத்தரவாதம் இல்லாத பாதுகாப்பற்ற நிலையை மிகுந்த பதட்டத்தோடு எதிர்கொள்ளுகின்றோம். ஆறிலும் சாவு நூறிலும் சாவு என்ற நிலை! வீதியில், வீட்டில், காட்டில் என எங்கும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை! கடத்தல்களும், கொலைகளும் சாதாரண செய்திகளாகிவிட்டன. ஆம் மரணங்கள் மலிந்த பூமி இது!

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிடில் அதை காக்கிறவர் கண்விழிப்பது வீண்." மனித பாதுகாப்புகள் பலமிழக்கும் வேளையில் ஆண்டவர்தாமே நமது பாதுகாப்பு அரணாய் எழுந்து வருகிறார்.

இதோ அவருடைய பாதுகாப்பு வழங்கும் வார்த்தைகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(திருப்பாடல். 121:7–8)*** ஆண்டவர் உம்மை **எல்லாத் தீமையினின்றும் பாதுகாப்பார்**; அவர் உம் உயிரைக் காத்திடுவார். நீர் போகும்போதும் உள்ளே வரும்போதும் இப்போதும் எப்போதும் ஆண்டவர் உம்மைக் காத்தருள்வார்.

– ***(திருப்பாடல். 5:11–12)*** ஆனால், உம்மிடம் அடைக்கலம் புகுவோர் அனைவரும் மகிழ்வர்; அவர்கள் எந்நாளும் களித்து ஆர்ப்பரிப்பர்; நீர் **அவர்களைப் பாதுகாப்பீர்** .....

– ***(திருவெளிப்பாடு. 7:15)*** இதனால்தான் கடவுளது அரியணைமுன் நின்றுகொண்டு அவரது கோவிலில் அல்லும் பகலும் அவரை வழிபட்டுவருகிறார்கள்; அரியணையில் வீற்றிருப்பவர் அவர்களிடையே குடிகொண்டு **அவர்களைப் பாதுகாப்பார்.**

– ***(திருப்பாடல். 33:18–19)*** தமக்கு அஞ்சி நடப்போரையும் தம் பேரன்புக்காகக் காத்திருப்போரையும் ஆண்டவர் கண்ணோக்குகின்றார். அவர்கள் உயிரைச் **சாவினின்று காக்கின்றார்**; அவர்களைப் பஞ்சத்திலும் வாழ்விக்கின்றார்.

– ***(திருப்பாடல். 41:2)*** ஆண்டவர் **அவரைப் பாதுகாப்பார்**; நெடுங்காலம் வாழவைப்பார்.

– ***(திருப்பாடல். 18:35)*** (அ) ஆண்டவரே, **பாதுகாக்கும் உம் கேடயத்தை** நீர் எனக்கு வழங்கினீர்;

– ***(திருப்பாடல்.12:5)*** "எளியோரின் புலம்பலையும் வறியோரின் பெருமூச்சையும் கேட்டு இப்பொழுதே எழுந்து வருகின்றேன்; அவர்கள் ஏங்குகின்றபடி **அவர்களைப் பாதுகாப்பில் வைப்பேன்**" என்கின்றார் ஆண்டவர்.

– ***(திருப்பாடல். 27:5)*** ஏனெனில், கேடுவரும் நாளில் அவர் என்னைத் தம் கூடாரத்தில் மறைத்து வைப்பார்; தம் கூடாரத்தினுள்ளே என்னை ஒளித்து வைப்பார்; குன்றின்மேல் **என்னை பாதுகாப்பாய் வைப்பார்.**

– ***(திருப்பாடல். 91:1, 14)*** **உன்னதரின்** பாதுகாப்பில் வாழ்பவர், எல்லாம் வல்லவரின் நிழலில் தங்கியிருப்பவர். "அவர்கள் என்மீது அன்புகூர்ந்ததால், அவர்களை விடுவிப்பேன்; அவர்கள் என் பெயரை அறிந்துள்ளதால், அவர்களைப் பாதுகாப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– *(1 சாமுவேல். 2:9)*** தம்மில் பற்றுக்கொண்டோர் காலடிகளை அவர் காப்பார்! தீயோர், இருளுக்கு இரையாவர்! ஏனெனில் ஆற்றலால் எவரும் வலியவர் ஆவதில்லை!

**– *(திருப்பாடல். 31:23)*** ஆண்டவரின் அடியார்களே, அவரிடம் அன்புகொள்ளுங்கள்; ஆண்டவர் பற்றுறுதியுடையோரைப் பாதுகாக்கின்றார்; ஆனால், இறுமாப்புடன் நடப்போர்க்கு அவர் முழுமையாய்ப் பதிலடி கொடுக்கின்றார்.

**– *(திருப்பாடல். 32:7)*** நீரே எனக்குப் புகலிடம்; இன்னலினின்று என்னை நீர் பாதுகாக்கின்றீர்; உம் மீட்பினால் எழும் ஆரவாரம் என்னைச் சூழ்ந்தொலிக்கச் செய்கின்றீர்.

**– *(திருப்பாடல். 34:7)*** ஆண்டவருக்கு அஞ்சி வாழ்வோரை அவர்தம் தூதர் சூழ்ந்து நின்று காத்திடுவர்.

**– *(யூதித்து. 6:2)*** இஸ்ரயேல் இனத்தாரோடு போரிட வேண்டாம்; ஏனெனில், அவர்களின் கடவுள் அவர்களைப் பாதுகாப்பார்.

**– *(எசாயா. 32:18)*** என் மக்கள் அமைதிசூழ் வீடுகளிலும் பாதுகாப்பான கூடாரங்களிலும் தொல்லையற்ற தங்குமிடங்களிலும் குடியிருப்பர்.

**– *(திருப்பாடல். 31:2)*** உம் செவிகளை என் பக்கம் திருப்பியருளும்; விரைவில் என்னை மீட்டருளும்; எனக்கு அடைக்கலம் தரும் கற்பாறையாய் இரும்; என்னைப் பாதுகாக்கும் வலிமைமிகு கோட்டையாய் இரும்.

**– *(திருப்பாடல். 4:8)*** இனி, நான் மன அமைதியுடன் படுத்துறங்குவேன்; ஏனெனில், ஆண்டவரே, நான் தனிமையாயிருந்தாலும் நீரே என்னைப் பாதுகாப்புடன் வாழச் செய்கின்றீர்.

**– *(சங்கீதம் 70:6)*** (பழைய மொழி பெயர்ப்பு) பிறப்பிலிருந்து நீரே எனக்கு ஆதாரம். தாயின் வயிற்றிலிருந்து நீரே என் பாதுகாப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 5

# வழிநடத்துபவர்

**கதை**

## தொடர்ந்து பயிற்சி பெறப்போகிறாயா?

*ஒரு நகரத்தின் விமான நிலையத்திற்கு அருகே பதினைந்து வயது இளைஞன் தன் தந்தையோடு காரில் போய்க்கொண்டிருந்தான். அவனுடைய இலட்சியம் ஒரு விமான ஓட்டி ஆகவேண்டும் என்பது. அந்தக் கனவிலே அவன் மிதந்து - வளர்ந்துகொண்டிருந்தான்.*

*திடீரென ஒரு சிறிய பயிற்சி விமானம், கட்டுப்பாடு இழந்து தலைகீழாக வந்து தரையில் மோதி நொருங்கி விட்டது. உடனே காரை நிறுத்தச் சொல்லி வெளியே குதித்து அந்த விமானத்தை நோக்கி ஓடினான். விமான ஓட்டியை வெளியே இழுத்தான்.*

அந்த விமான ஓட்டி அந்த இளைஞனோடு பயிற்சி பெறுபவன். ஆனால் அவனுடைய கைகளில் இருக்கும்போது அவனுடைய உயிர் பிரிந்துவிட்டது. அளவில்லாத் துயரில் வாடினான். அன்று இரவு சரியாக உணவு அருந்தவில்லை, உறங்கவுமில்லை.

*ஓரிரு நாட்கள் சென்றபின் அவனது தாயார், "நீ விமானம் ஓட்டும் பணிக்கு தொடர்ந்து பயிற்சி பெறப்போகிறாயா? அல்லது உன் இலட்சியத்தை மாற்றிக்கொள்ளப்போகிறாயா?" என்று அவனிடம் வினவினார்.*

*உடனே அவன் தன் நாட்குறிப்பேட்டைக் காட்டுகிறான். "இயேசு துன்பத்தில் என்னோடு இருக்கிறார். என்னை வழிநடத்துகிறார். என் சவாலை சந்திக்க திடம் அளிக்கின்றார். நான் ஓர் விமான ஓட்டுநர் ஆவேன்" என்று எழுதியிருந்தான்.*

*இப்படியாக இயேசுவின் வழிநடத்தலில் நம்பிக்கை வைத்த அச்சிறுவன்தான் யார் தெரியுமா? அவன்தான் பிற்காலத்தில் நிலவில் காலடி வைத்து உலகையே அதிசயத்தில் ஆழ்த்தி உலகப் புகழ்பெற்ற 'நீல் ஆம்ஸ்ரோங்' என்ற அமெரிக்க விண்வெளி வீரன்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து**

## வாழும் வழி தெரியவில்லையே

வாழ்வின் பல சந்தர்ப்பங்களில் வழிதெரியாது தவிக்கின்றோம், தத்தளிக்கின்றோம், தடுமாறுகின்றோம்.

அறிமுகமற்ற ஓர் இடத்திற்குச் செல்கிறோம். ஒரு வீட்டை போய்ச் சேரவேண்டும், வழி தெரியாது. ஒரு நபரிடம் விசாரிக்கிறோம். "நீங்கள் இந்த வழியால் போய்.... திரும்பி வலப்பக்கம் போய் ..... அங்கு இருக்கின்ற அரச மரத்தடியினால் திரும்பி .... அதற்கு அருகே உள்ள ஒற்றையடிப் பாதையில் போய் ...." என அவர் வழியைச் சொல்லிக்கொண்டே போகிறார்.

இன்னொருவரிடம் வழியைக் கேட்கிறோம். அவர் "இதோ நான் வருகிறேன்" என்று நம்முடன் வந்து நாம் சேர வேண்டிய இடத்திற்கு நம்மை அழைத்து வந்து, "இதுதான் இடம்" என்று சொல்கிறார்.

நம்மை வழிநடத்திய இருவரில் நாம் வழியைக் கண்டு பிடிக்க நமக்கு அதிகம் உதவியவர் யார்? முன்னையவரா? பின்னையவரா? இயேசு "இதுதான் வழி" என்று காட்டியவர் மட்டுமல்ல. "நானே வழி" என்றும் கூறியிருக்கின்றார்.

நமது வாழ்வின் வழி நமக்குத் தெரியாத நிலையில் நம் எதிர்காலப் பாதை நமக்குப் புரியாத நிலையில் இதோ நம்மைப் படைத்த ஆண்டவர் நம்மை வழிநடத்த வருகின்றார்.



## இறைவார்த்தை

– ***(எசாயா. 55:12)*** மகிழ்ச்சியுடன் நீங்கள் புறப்பட்டுச் செல்வீர்கள்; அமைதியுடன் நடத்திச் செல்லப்படுவீர்கள்; மலைகளும் குன்றுகளும் உங்கள்முன் முழங்கி மகிழ்ந்து பாடும்; காட்டு மரங்கள் கைகொட்டி ஆர்ப்பரிக்கும்.

– ***(திருப்பாடல். 23:2, 3)*** பசும்புல் வெளிமீது எனை அவர் இளைப்பாறச் செய்வார்; அமைதியான நீர் நிலைகளுக்கு எனை அழைத்துச் செல்வார். அவர் எனக்குப் புத்துயிர் அளிப்பார்; தம் பெயர்க்கேற்ப எனை நீதிவழி நடத்திடுவார்;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(எசாயா. 30:21)*** நீங்கள் வலப்புறமோ, இடப்புறமோ எப்பக்கம் சென்றாலும **'இதுதான் வழி, இதில் நடந்து செல்லுங்கள்'** என்னும் வார்த்தை பின்னிருந்து உங்கள் செவிகளில் ஒலிக்கும்.

– ***(திருப்பாடல். 18:32)*** (ஆ) **என் வழியைப் பாதுகாப்பானதாய்ச்** செய்தவரும் அவரே.

– ***(திருப்பாடல். 18:36)*** நான் நடக்கும **வழியை அகலமாக்கினீர்;** என்கால்கள் தடுமாறவில்லை.

– ***(திருப்பாடல். 18:30)*** **இந்த இறைவனின் வழி நிறைவானது:** ஆண்டவரின் வாக்கு நம்பத்தக்கது; அவரிடம் அடைக்கலம் புகும் அனைவர்க்கும் அவரே கேடயமாய் இருக்கின்றார்.

– ***(திருப்பாடல். 31:3)*** ஆம், என் கற்பாறையும் கோட்டையும் நீரே; உமது பெயரின் பொருட்டு **எனக்கு வழிகாட்டி என்னை நடத்தியருளும்.**

– ***(யோபு. 31:18)*** ஏனெனில், குழந்தைப் பருவமுதல் அவர் என்னைத் தந்தைபோல் வளர்த்தார்; என் தாய்வயிற்றிலிருந்து என்னை **வழி நடத்தினார்.**

– ***(திருப்பாடல். 5:8)*** ஆண்டவரே, எனக்குப் பகைவர் பலர் இருப்பதால், உமது நீதியின் பாதையில் **என்னை நடத்தும்;** உமது செம்மையான வழியை எனக்குக் காட்டியருளும்.

– ***(எசாயா. 49:10)*** அவர்கள் பசியடையார்; தாகமுறார்; வெப்பக் காற்றோ, வெயிலோ அவர்களை வாட்டுவதில்லை. ஏனெனில் அவர்கள்மேல் கருணை காட்டுபவர் அவர்களை நடத்திச் செல்வார்; அவர் அவர்களை நீரூற்றுகள் அருகே **வழிநடத்துவார்.**

– ***(மீக்கா. 2:13)*** அவர்களின் அரசர் அவர்களுக்கு முன்னால் கடந்து செல்வார்; ஆண்டவரே அவர்களை **வழிநடத்திப் போவார்.**

– ***(எசாயா. 63:14)*** கால்நடை பள்ளத்தாக்கினுள் இறங்கிச் செல்வதுபோல் அவர்களும் இளைப்பாற ஆண்டவரின் ஆவி அவர்களை நடத்தியது. இவ்வாறு, உமது பெயர் சிறப்புறுமாறு நீர் உம் மக்களை நடத்திவந்தீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(நீதிமொழி. 16:9)*** மனிதர் தம் வழியை வகுத்தமைக்கின்றார்; ஆனால் அதில் அவரை வழிநடத்துபவரோ ஆண்டவர்.

– ***(எரேமியா. 21:8)*** இம்மக்களுக்கு நீ கூற வேண்டியது; ஆண்டவர் கூறுவது இதுவே; இதோ, வாழ்வின் வழியையும சாவின் வழியையும் உங்கள்முன் வைக்கிறேன்.

– ***(திருப்பாடல். 78:72)*** அவரும் நேரிய உள்ளத்தோடு அவர்களைப் பேணினார்; கைவன்மையாலும் அறிவுத்திறனாலும் அவர்களை வழிநடத்தினார்.

- ***(திருப்பாடல். 139:24)*** உம்மை வருத்தும் வழியில் நான் செல்கின்றேனோ என்று பாரும்; என்றுமுள வழியில் என்னை நடத்தியருளும்.

– ***(திருப்பாடல். 25:9)*** எளியோரை நேரிய வழியில் அவர் நடத்துகின்றார்; எளியோருக்குத் தமது வழியைக் கற்பிக்கின்றார்.

– ***(எசாயா. 58:11)*** (அ) ஆண்டவர் தொடர்ந்து உன்னை வழிநடத்துவார்; வறண்ட சூழலில் உனக்கு நிறைவளிப்பார்;

– ***(திருப்பாடல். 27:11)*** ஆண்டவரே, உமது வழியை எனக்குக் கற்பித்தருளும்; என் எதிரிகளை முன்னிட்டு, என்னைச் செம்மையான பாதையில் நடத்தும்.

– ***(திருப்பாடல். 86:11)*** ஆண்டவரே, உமது உண்மைக்கேற்ப நான் நடக்குமாறு உமது வழியை எனக்குக் கற்பியும், உமது பெயருக்கு அஞ்சுமாறு என் உள்ளத்தை ஒருமுகப்படுத்தும்.

– ***(மீக்கா. 4:2)*** வேற்றினத்தார் பலர் அங்கு வந்து சேர்ந்து, 'புறப்படுங்கள், ஆண்டவரின் மலைக்குச் செல்வோம்; யாக்கோபின் கடவுளது கோவிலுக்குப் போவோம்; அவர் தம் வழிகளை நமக்குக் கற்பிப்பார்.

***(திருப்பாடல். 25:12)*** ஆண்டவருக்கு அஞ்சி நடப்பவர் எவரோ அவருக்குத தாம் தேர்ந்து கொள்ளும் வழியை அவர் கற்பிப்பார்.

***(திருப்பாடல். 25:8–9)*** ஆண்டவர் நல்லவர்; நேர்மையுள்ளவர்; ஆகையால், அவர் பாவிகளுக்கு நல்வழியைக் கற்பிக்கின்றார். எளியோரை நேரிய வழியில் அவர் நடத்துகின்றார்; எளியோருக்குத் தமது வழியைக் கற்பிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 6

# வெற்றிபெறச் செய்பவர்

**கதை**

## என்னையே சுட்டுக்கொள்கிறேன்

*புகழ் பெற்ற ரொக் பாடகர் (Rock Star) ஒருவர் இருந்தார்! 1994 ம் ஆண்டில் அவரைக் குறித்து பத்திரிகை தலையங்கத்தில், "நிர்வானா என்ற ராக் இசைக்குழுவில் மிகவும் பிரசித்தி பெற்ற பாடகர் கர்ட் கொபெய்ன். இந்த ஆண்டிலே அதிகமான இசைத்தட்டுக்களை விற்பனை செய்திருக்கிறார்! இதன் மூலம் அவர் ஒரு கோடீஸ்வரராக, மிகப் பெரிய பணக்காரனாக மாறி, புகழின் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டார்." என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.*

*அவரை பேட்டி கண்ட பத்திரிகை நிருபர்கள், பின்வருமாறு அவர் கூறியதாக குறிப்பிட்டிருந்தனர்.*
*"இவ்வுலகில் என் ஆசைகள் இரண்டுதான். முதலாவது ெ மகள். இரண்டாவது போதைவஸ்துக்கள்"*

*இரண்டு வாரங்கள் கடந்தன! அதே ரொக் பாடகரைக் குறித்து, உயர்வாக எழுதியிருந்த அதே பத்திரிகைகளின் முதல் பக்கத்தில் "கர்ட் கொபெய்ன், தன்னையே துப்பாக்கியினால் தலையில் சுட்டுத் தற்கொலை செய்துகொண்டார்" என்ற அதிர்ச்சியுறும் செய்தியினை வெளியிட்டிருந்தன!*
*அவரது தலையடையாளமே கண்டுகொள்ளமுடியாத வண்ணம் சுக்கு நூறாக சிதறிப்போய், பரிதாபமாக சாவைத் தழுவிக்கொண்டார்.*

*அவரது கரத்தில் இருந்த துண்டுக் காகிதத்தில் தனது தற்கொலைக்கான காரணத்தை எழுதி வைத்திருந்தார்.*
*("Its better to get burnt than to fade away") "புகழின் உச்சியிலிருந்து குறைந்து, குறைந்து தெரியாமல் மறைந்து போவதைவிட, நான் என்னையே சுட்டெரித்துக்கொள்வது நல்லது எனக் கருதுகின்றேன். எனவே என்னையே நான் சுட்டுக்கொள்கிறேன். எனது சாவுக்கு நான் மட்டுமே பொறுப்பு"*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து**

## வெற்றி பெற்றுக்கொள்ள தோல்வி கற்றுக்கொள்ள

இது போட்டி உலகம். கல்வியில் போட்டி, விளையாட்டில் போட்டி, வியாபாரத்தில் போட்டி, அதிகாரத்தில் போட்டி!
இப்போட்டி உலகத்தில் மனிதன் போராடித்தான் பொருளையும் புகழையும் சேர்க்க வேண்டி உள்ளது. இப்போட்டி உலகத்தில் வெற்றி வாகை சூடுபவர்களும் உண்டு. தோல்வியில் துவண்டு விடுபவர்களும் உண்டு.


*வாழ்க்கையில் வெற்றி பெறுவது எப்படி?* என்று கற்றுத்தர பல நூல்கள் இன்று எழுதப்படுகின்றன. இவை எல்லாமே வெற்றி என்ற இலக்கை அடைவதற்கான வழிகளைக் காட்டுகின்றன. வெற்றியின் விலை மிகப் பெரிது என்பதால் பல தடவைகளில் மனிதன் சோர்ந்து போகிறான். வெற்றிபெற முயற்சி அவசியம் என்ற கருத்தை இந்தக் கவிதை இப்படிச் சொல்கிறது.

*"இயலாமையால் தோற்றவர்களைவிட*
*முயலாமையால் தோற்றவர்களே இங்கு அதிகம்*
*பொன்னை இழந்தால் பெற்றுக்கொள்ளலாம் - ஆனால்*
*உன்னை இழந்தால் பெற முடியாது. கற்றுக்கொள்."*

வெற்றிபெறவேண்டும் என்ற வெறியோடு வாழ்க்கையில் உழைப்பவர்கள் சிலவேளைகளில் வெற்றி இலக்கை அடையாமல் விரக்தி அடைந்துபோவதுமுண்டு.
"வெற்றி என்பது பெற்றுக்கொள்ள, தோல்வி என்பது கற்றுக்கொள்ள என்பதை பலதடவைகளில் நாம் மறந்து விடுகின்றோம்."
"சுடும்வரைதான் நெருப்பு. சுற்றும்வரைதான் பூமி, போராடும் வரைதான் மனிதன்." என்கிறார் கவிஞர் வைரமுத்து.
உழைத்துக் களைத்து சோர்ந்து போயிருக்கும் மனிதன் தோல்வியில் துவண்டு விடுகிறான். தோல்வியை ஏற்றுக்கொள்ள மனிதனால் முடிவதில்லை. மனிதன் தோல்வியில் துவண்டு போகின்றபோது வாழ்வே சூனியமாகத் தோன்றுகிறது.
ஆண்டவர் வெற்றி தருபவர் என்பதை விவிலியம் விளக்குகிறது. எனவே வெற்றிதரும் ஆண்டவரைப் பற்றிக்கொள்வோம். மனித முயற்சிகள் தோற்றுப்போகும்போது இதோ ஆண்டவர் வெற்றியளிப்பவராக நம் வாழ்வில் வருகின்றார்.

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறைவார்த்தை

– ***(திருப்பாடல். 44:3–4)*** அவர்கள் தங்கள் வாளால் நாட்டை உடைமையாக்கிக் கொள்ளவில்லை; அவர்கள் தங்கள் புயத்தால் வெற்றி பெறவில்லை. நீர் அவர்களில் மகிழ்ச்சியுற்றதால் உமது வலக்கையும் உமது புயமும் உமது முகத்தின் ஒளியுமே அவர்களுக்கு வெற்றியளித்தன. நீரே என் அரசர்; நீரே என் கடவுள்! யாக்கோபுக்கு வெற்றி அளிப்பவர் நீரே.

– ***(திருப்பாடல். 98:1)*** ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்; ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார். அவருடைய வலக்கரமும் புனிதமிகு புயமும் அவருக்கு வெற்றியை அளித்துள்ளன.

– ***(எசாயா. 59:16)*** (ஆ) அவரது கையே அவருக்கு வெற்றி கொணர்ந்தது; அவரது நேர்மையே அவரைத் தாங்கி நின்றது.

– ***(எசாயா. 62:1–2)*** (அ) சீயோனின் வெற்றி வைகறை ஒளியெனவும், அதன் மீட்பு சுடர் விளக்கெனவும் வெளிப்படும்வரை, அதனை முன்னிட்டு மௌனமாயிரேன்; எருசலேம் பொருட்டு செயலற்று அமைதியாயிரேன். பிற இனத்தார் உன் வெற்றியைக் காண்பர்.

– ***(எசாயா. 62:11)*** உலகின் கடைக்கோடிவரை ஆண்டவர் பறைசாற்றியது; மகள் சீயோனிடம் சொல்லுங்கள்; இதோ, உன் மீட்பு வருகின்றது, அவரது வெற்றிப்பரிசு அவருடன் உள்ளது; அவரது செயலின் பயன் அவர் முன்னே உள்ளது.

– ***(எசாயா. 63:5)*** சுற்றுமுற்றும் பார்த்தேன்; துணைபுரிவார் எவருமில்லை; திகைப்புற்று நின்றேன்; தாங்குவார் யாருமில்லை; என் புயமே எனக்கு வெற்றி கொணர்ந்தது; என் சினமே எனக்கு ஊக்கமளித்தது.

– ***(நீதிமொழிகள். 21:31)*** போர் நாளுக்கென்று குதிரையை ஆயத்தமாக வைத்திருக்கலாம்; ஆனால் வெற்றி கிடைப்பது ஆண்டவராலேயே.

– ***(உரோமையர். 8:37)*** நம்மேல் அன்பு கூர்ந்தவரின் செயலால் மேற்கூறியவை அனைத்திலும் நாம் வெற்றிமேல் வெற்றி அடைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


– ***(திருப்பாடல். 21:5)*** நீர் அவருக்கு வெற்றியளித்ததால் அவரது மாட்சிமை பெரிதாயிற்று; மேன்மையையும் மாண்பையும் அவருக்கு அருளினீர்.

– ***(எசாயா. 56:1)*** ஆண்டவர் கூறுவது இதுவே; நீதியை நிலைநாட்டுங்கள், நேர்மையைக் கடைபிடியுங்கள்; நான் வழங்கும் விடுதலை அண்மையில் உள்ளது: **நான் அளிக்கும் வெற்றி விரைவில் வெளிப்படும்.**

– ***(எசாயா. 54:17)*** உன்னைத் தாக்குமாறு உருவாக்கப்பட்ட எந்தப் போர்க்கருவியும் நிலைத்திராது. உன்மேல் குற்றஞ்சாட்டித் தீர்ப்புச் சொல்ல எழும் எந்த நாவையும் நீ அடக்கிவிடுவாய்; இவையே ஆண்டவரின் ஊழியர்களது உரிமைச்சொத்தும். நான் அவர்களுக்கு **அளிக்கும் வெற்றியுமாய் இருக்கின்றன,** என்கிறார் ஆண்டவர்.

– ***(2 கொரிந்தியர். 2:14)*** கிறிஸ்துவோடு இணைந்து வாழும் எங்களைக் கடவுள் கிறிஸ்துவின் வெற்றிப் பவனியில் பங்குகொள்ளச் செய்து எங்கள் வழியாய்த் தம்மைப்பற்றி யாவரும் அறியச் செய்கிறார்.

– ***(யோவான். 16:33)*** என் வழியாய் நீங்கள் அமைதி காணும் பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன். உலகில் உங்களுக்குத் துன்பம் உண்டு, எனினும் துணிவுடன் இருங்கள். **நான் உலகின்மீது வெற்றி கொண்டுவிட்டேன்** என்றார் இயேசு.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# திட்டமிடுபவர்

**கதை**

## நான்கு மணி நேரம் தாமதம்

அன்னை திரேசா! உலகமே உற்றுப் பார்த்த ஓர் உன்னத பெண்! சாதாரண கத்தோலிக்க கன்னியாஸ்திரியான அவர் சமாதானத்திற்கான நோபல் பரிசைப் பெறும் அளவுக்கு உயர்ந்தது எப்படி? மனிதரால் கற்பனை செய்யக்கூட முடியாத கடினமான ஆதரவற்றோருக்கு துயர் துடைக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்த முடிந்தது எப்படி? அவருடைய ஆச்சரியமான, அதிசயிக்கத்தக்க பணிகளுக்குக் காரணம் ஆண்டவருடய திட்டமிடலில் அவர் கொண்டிருந்த அளவிடமுடியாத நம்பிக்கைதான்.

ஆய்லின் ஈகன் என்ற பெண்மணி சுமார் 30 ஆண்டுகளாக அன்னை தெரேசாவோடு நெருங்கிப் பழகி பணியாற்றி வந்தார். அவர் எழுதிய நூலில் ஒரு நிகழ்ச்சியை வாசிக்கின்றோம்.

ஒருநாள் ஒன்றன்பின் ஒன்றாக பல பிரச்சினைகள் எதிர்ப்பட்டன. அப்போது அன்னை தெரேசா, "எல்லாமே பிரச்சினைகள்தானா? பிரச்சினைகளை ஏன் இறைவனின் கொடைகளாகக் கருதக்கூடாது? இனிமேல் ஒவ்வொரு பிரச்சினைகளையும் ஒரு கொடையாகக் கருதுவோம்" என்றார்.

அதைத் தொடர்ந்து சில நாட்களுக்குப்பின் நியூயோர்க் விமான நிலையத்தில் அன்னை திரேசா காத்திருந்தார். "விமானம் தாமதமாகப் புறப்படும்" என்ற செய்தி அறிவிப்புப் பலகையில் காணப்பட்டது.

அப்போது இந்தப் பெண்மணி அன்னை திரேசாவிடம் சென்று, "அன்னையே கடவுள் இப்போது நமக்கு ஒரு கொடை கொடுத்துள்ளார். நமது விமானம் 4 மணி நேரம் தாமதமாகப் புறப்படும்." என்று கூறினார். அப்போது அன்னை திரேசா சிரித்துக்கொண்டே, "செபிக்க கடவுள் நமக்கு நேரத்தைக் கொடுத்திருக்கிறார். அவருடைய திட்டத்தில் 4 மணி நேரம் நாம் தாமதமாகப் புறப்படவேண்டும் என உள்ளது. அவர்தானே நமது பயணத்தைத் திட்டமிடுபவர்." என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து

## திட்டமில்லா வாழ்க்கை கெட்டழிந்து போகும்!

திட்டமில்லா வாழ்க்கை கெட்டழிந்து போய்விடும். இன்று திட்டமிடுவது மனித வாழ்வில் முக்கியமான ஓர் அம்சமாகத் திகழ்கின்றது. சாதாரண குடும்ப அலகில் இருந்து சர்வதேச அமைப்புக்கள் வரை திட்டமிடல் முக்கியமான விடயமாகி விட்டது.

அரசாங்க அமைச்சுகளில்கூட *திட்டமிடல் அமைச்சு* என்ற ஒரு அமைச்சும் உள்ளது. பிரதேச செயலகங்களோடு இணைந்ததாக திட்டமிடல் அலுவலகங்கள் உள்ளூர் அபிவிருத்திக்கான திட்டமிடலை மேற்கொள்ளுகின்றன.

எவ்வளவு பணத்தை நாம் செலவழித்து காரியங்களை ஆற்றினாலும் சரியான திட்டமிடல் இன்றேல் அவை வெற்றிபெறாத திட்டங்களாகி விடும். திட்டமிடலின் முக்கியத்துவத்தை விவிலியமே தெளிவாக விளக்குகிறது.

"உங்களுள் யாராவது ஒருவர் கோபுரம் கட்ட விரும்பினால் முதலில் உட்கார்ந்து அதைக் கட்டி முடிக்க ஆகும் செலவைக் கணித்து அதற்கான பொருள் வசதி தம்மிடம் இருக்கிறதா எனப் பார்க்க மாட்டாரா, இல்லாவிட்டால் அதற்கு அடித்தளமிட்ட பிறகு அவர் கட்டி முடிக்க இயலாமல் இருப்பதைப் பார்க்கும் யாவரும் ஏளனமாக, 'இம்மனிதன் கட்டத்தொடங்கினான். ஆனால் முடிக்க இயலவில்லை' என்பார்களே" (லூக்காஸ் 14: 28-30)

நமது திட்டங்கள் சிலவேளைகளில் சிதறிப் போகின்றன. அதற்குக் காரணம் நமது திட்டங்கள் ஆண்டவரின் திட்டத்தோடு இணைந்து போகாமைதான்.

ஆண்டவரே கூறுகின்றார், "மண்ணுலகில் இருந்து விண்ணுலகம் மிக உயர்ந்து இருப்பதுபோல உங்கள் வழிமுறைகளைவிட என் வழிமுறைகளும் உங்கள் எண்ணங்களைவிட என் எண்ணங்களும் மிக உயர்ந்திருக்கின்றன" (எசாயா 55:9)

புனித பெர்னாது அக்கடி தன்னையே பார்த்து, "நான் எங்கே இருக்கிறேன்? நான் ஏன் இங்கே இருக்கிறேன்? நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டுக்கொள்வார். அதன் பயனாகத்தான் இன்று அவர் மாபெரும் புனிதராக விளங்குகிறார்.

ஆண்டவரின் திட்டத்திற்கு நாம் நம்மையே விட்டுக்கொடுப்போம்.

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவார்த்தை

– ***(எசாயா. 28:29)*** படைகளின் ஆண்டவரிடமிருந்து இந்த அறிவு வருகின்றது; அவர் திட்டமிடுவதில் வியப்புக்குரியவர்; செயற்படுத்தும் அறிவில் சிறப்புக்குரியவர்.

– ***(எரேமியா. 32:19)*** நீர் திட்டமிடுவதில் பெரியவர்; செயலில் வல்லவர். மானிடரின் வழிகள் எல்லாம் உமது கண்முன்னே உள்ளன. எனவே, அவரவருடைய வழிகளுக்கும் செயல்களின் விளைவுகளுக்கும் ஏற்றவாறு நீர் கைம்மாறு அளிக்கிறீர்.

– ***(நீதிமொழிகள். 8:14)*** திட்டம் இடுவதும் நானே; இட்டதைச் செய்வதும் நானே. உணர்வும் நானே, வலிமையும் எனதே.

– ***(எரேமியா. 29:11)*** ஏனெனில் உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான நல்வாழ்வின் திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல என்கிறார் ஆண்டவர்.

– ***(யூதித்து. 9:5–6)*** அப்போது நடந்தவை, அதற்கு முன்னும் பின்னும் நடந்தவை ஆகிய அனைத்தையும் செய்தவர் நீரே; இப்போது நிகழ்வனவற்றையும் இனி நிகழ விருப்பனவற்றையும் நீரே திட்டமிட்டுள்ளீர். நீர் திட்டமிட்டவையெல்லாம் நிறைவேறின. நீர் திட்டமிட்டவை அனைத்தும் உம்முன் நின்று, இதோ உள்ளோம் என்றன; உம் வழிகளெல்லாம் ஆயத்தமாய் உள்ளன; உம் தீர்ப்பு முன்னறிவு மிக்கது.

– ***(எசாயா. 14:26–27)*** மண்ணுலகம் முழுவதையும்பற்றி நான் தீட்டிய திட்டம் இதுவே; பிற இனத்தார் அனைவருக்கும் எதிராக நான் ஓங்கியுள்ள கையும் இதுவே. படைகளின் ஆண்டவர் தீட்டிய திட்டத்தைச் சீர்குலைக்க வல்லவன் எவன்? அவர் தம் கையை ஓங்கியிருக்க அதை மடக்கக்கூடியவன் எவன்?

– ***(எசாயா. 25:1)*** ஆண்டவரே, நீரே என் கடவுள்; நான் உம்மை மேன்மைப்படுத்துவேன்; உம் பெயரைப் போற்றுவேன்; நீர் வியத்தகு செயல் புரிந்துள்ளீர்; நெடுநாளாய் நீர் தீட்டியுள்ள திட்டத்தைத் துல்லியமாகவும் உறுதியாகவும் நிறைவேற்றியுள்ளீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(உரோமையர். 8:28)*** மேலும், கடவுளிடம் அன்புகூர்பவர்களோடு, **அதாவது அவரது திட்டத்திற்கேற்ப** அழைக்கப்பட்டவர்களோடு, அவர்கள் நன்மைக்காகவே ஆவியார் அனைத்திலும் ஒத்துழைக்கிறார் என்பது நமக்குத் தெரியும்.

– ***(திருப்பாடல். 33:11)*** ஆண்டவரின் எண்ணங்களோ என்றென்றும் நிலைத்திருக்கும்; **அவரது உள்ளத்தின் திட்டங்கள்** தலைமுறை தலைமுறையாய் நீடித்திருக்கும்.

– ***(திருப்பாடல். 40:5)*** ஆண்டவரே! எண்ணிறந்தவற்றை நீர் எமக்கெனச் செய்துள்ளீர்; உமக்கு நிகரானவர் எவரும் இலர்; என் கடவுளே! உம் அருஞ்செயல்களும் **திட்டங்களும்** எங்களுக்காகவே; அவற்றை நான் எடுத்துரைக்க விரும்புவேனாகில் அவை எண்ணிலடங்கா.

– ***(நீதிமொழிகள். 19:21)*** மனிதர் மனத்தில் எழும் எண்ணங்கள் ஏராளம்; ஆனால் **ஆண்டவரது திட்டமே நிலைத்து நிற்கும்.**

– ***(எசாயா. 46:10)*** பின் நிகழவிருப்பதைத் தொடக்கத்திலே நான் அறிவித்தேன்; இனி நடப்பனவற்றை பண்டைக் காலத்திலேயே முன்னுரைத்தேன்; **'என் திட்டம் நிலைத்திருக்கும்**; என் விருப்பத்தை நிறைவேற்றுவேன்' என்றுரைத்தேன்.

– ***(புலம்பல். 2:17)*** ஆண்டவர் தாம் **திட்டமிட்டபடியே** செய்தார்; நெடுநாள்களுக்குமுன் தாம் முன்னெச்சரிக்கை செய்தவாறு செயல்பட்டார்.

– ***(எசாயா. 37:26)*** நானே தொடக்கத்திலிருந்து முடிவெடுத்து செயல்படுகிறேன் என்று நீ கேள்விப்பட்டதில்லையா? முற்காலம் தொட்டுத் **திட்டமிட்டதை** இன்று நான் செயல்படுத்துகிறேன்; அதனால்தான் அரண்சூழ் நகர்களை நீ பாழடைந்த மண் மேடுகளாகச் செய்தாய்.

– ***(யோபு. 27:11)*** இறைவனின் கைத்திறனை நான் உங்களுக்குக் கற்பிப்பேன்; எல்லாம் வல்லவரின் **திட்டங்களை** மறைக்கமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இயல் 8

# கண்ணீரைத் துடைப்பார்

### கதை

ஜோன் நியூட்டன் என்பவர் ஒரு கப்பல் ஓட்டும் ஆங்கில மாலுமியின் மகன். பத்து வயது நடக்கும்போது அவர் தம் தாயாரை இழந்துவிட்டார். தன் தந்தையோடு கப்பலில் பல இடங்களுக்கும் சென்றார். விரைவில் அவரே ஒரு கப்பலோட்டியாகத் தேர்ச்சி பெற்றுவிட்டார். ஆனால் இறை நம்பிக்கை இன்றி மூர்க்க குணத்தோடு நடந்துகொள்வார். அவரது பதினேழாவது வயதில் தம் தந்தையோடு சண்டையிட்டு அவரைவிட்டுப் பிரிந்து தம் விருப்பம்போல வாழ ஆரம்பித்தார்.

அவர் தந்தையை விட்டுப் பிரிந்த நாளன்று அவருடைய தந்தை கப்பலின் மேல் தளத்தில் நின்றுகொண்டு தன் மகனுக்காக மன்றாடினார். "இறைவா மண்ணகத் தந்தையாகிய என்னுடைய அன்பையும் விண்ணகத் தந்தையாகிய உம்முடைய அன்பையும் ஜோன் உதறித் தள்ளிவிட்டுப் போய்விட்டான். நம் இருவரையும் அவன் புறக்கணித்தாலும் நம் இருவருக்காகவும் அவனைக் காப்பாற்றி வழிநடத்தும்" என்று செபித்தார்.

மனிதர்களை ஆபிரிக்காவில் இருந்து அமெரிக்காவிற்கு ஏற்றிக்கொண்டுபோய் அடிமைகளாக வியாபாரம் செய்யும் கப்பல் ஒன்றில் ஜோன் பணியாற்றினார். வெகு விரைவில் அக்கப்பலின் தளபதியானார். மனிதர்களை அடிமைகளாக விற்று பணம் சேர்ப்பது பாவம் என்று அவர் உணரவில்லை. அவருக்கு வேண்டியதெல்லாம் பணம் ஒன்றே.

ஒருநாள் கடலில் பயணம்செய்தபோது மாபெரும் கடல் கொந்தளிப்பு ஏற்பட்டது. மலைபோல் அலை எழுந்து கப்பலைக் காகித ஓடத்தைப்போல் தூக்கி எறிந்தது. அப்போது, "என் தந்தையே இறைவா, என்னைக் காப்பாற்றினால் நான் என்னையே உமக்கு அடிமை ஆக்குகிறேன். என்று கதறி அழுது கண்ணீர்விட்டுச் செபித்தார். கடல் ஓய்ந்தது. அமைதி ஏற்பட்டது.

பின்னர் அவர் ஒரு குருமடத்தில் சேர்ந்து இங்கிலாந்து நாட்டில் இறைபணி ஆற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து**

## பிறக்கும்போதும் அழுகின்றான் இறக்கும்போதும் அழுகின்றான்

மனித வாழ்வின் பெரும்பகுதி கண்ணீரோடுதான் கரைந்துசெல்கிறது. அழுவதும் கண்ணீர் சிந்துவதும் மனித வாழ்வோடு பின்னிப்பிணைந்த யதார்த்தமாக உள்ளது.

"பிறக்கும்போதும் அழுகின்றான், இறக்கும்போதும் அழுகின்றான் ஒரு நாளேனும் கவலையில்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே" என்று பாடுகின்றான் கவிஞன்.

ஏக்கப் பெருமூச்சும், அழுகையும், கண்ணீரும் மனித வாழ்வின் துயரங்களை வெளிப்படுத்தும் கண்ணாடியாக உள்ளன.

வாழ்வின் பல்வேறு கட்டங்களில் மனிதன் கண்ணீர் சிந்துகின்ற நிலைக்கு உள்ளாகின்றான். உலகில் யார் யாரெல்லாம் கவலையே இல்லாமல் சந்தோசமாக இருக்கின்றார்கள் என்று நாம் நினைக்கின்றோமோ அவர்களுடைய வாழ்விலும் கவலை உண்டு, கண்ணீர் உண்டு, வேதனை உண்டு, விரக்தி உண்டு. "வீட்டுக்கு வீடு வாசல் படி" என்று சும்மாவா சொல்லிவைத்தார்கள்?

இயேசுகூட தன் வாழ்வில் கண்ணீர் சிந்தி அழுதார் என நற்செய்தியாளர்கள் எழுதி வைத்துள்ளனர்.

"இலாசர் இறந்த பின்னர் மார்த்தா மரியா வீட்டிற்குச் சென்ற இயேசு துன்பம் தாளாதவராக **கண்ணீர் விட்டு அழுதார்.**" (யோவா. 11:35)

"அவர் இவ்வுலகில் வாழ்ந்த காலத்தில், தம்மைச் சாவிலிருந்து காப்பாற்ற வல்லவரை நோக்கி உரத்த குரல் எழுப்பி, **கண்ணீர் சிந்தி** மன்றாடி வேண்டினார்" (எபிரேயர் 5:7)

பலருக்கு மனித வாழ்வு கண்ணீரில் கரைந்துபோகும் வாழ்வாகத்தான் இருக்கிறது. கண்ணீர் சிந்தி அழுவதும் உடல் நலத்திற்கு நல்லது என மருத்துவர்கள் பரிந்துரைக்கின்றனர். அதற்காக கண்ணீர் சிந்துவதற்கும் அளவு வேண்டாமா?

கண்ணீரில் நமது வாழ்வு கரைந்துபோகும் நிலையில் இதோ நம்மைப் படைத்த ஆண்டவர் நம் கண்ணீரைத் துடைக்கின்றவராக நம் வாழ்வில் வருகின்றார். வாழ்வில் புதிய நம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் தருகின்றவராக வருகின்றார். அவருடைய ஆறுதலின் வார்த்தைகளுக்குள் அடைக்கலம் புகுவோம்.

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை

– ***(எசாயா. 25:8)*** என்றுமே இல்லாதவாறு சாவை ஒழித்துவிடுவார்; என் தலைவராகிய ஆண்டவர் எல்லா முகங்களிலிருந்தும் **கண்ணீரைத் துடைத்து** விடுவார்; தம்மக்களுக்கு ஏற்பட்ட நிந்தையை இம்மண்ணுலகில் அகற்றிவிடுவார்; ஏனெனில், ஆண்டவரே இதை உரைத்தார்.

– ***(திருவெளிப்பாடு. 7:17)*** ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி அவர்களை மேய்க்கும்; வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும். **கடவுள் அவர்களின் கண்ணீர்** அனைத்தையும் துடைத்து விடுவார்.

– ***(திருவெளிப்பாடு. 21:4)*** அவர்களுடைய **கண்ணீர் அனைத்தையும் அவர் துடைத்து விடுவார்.** இனிமேல் சாவு இராது. துயரம் இராது, அழுகை இராது, துன்பம் இராது; முன்பு இருந்தவையெல்லாம் மறைந்து விட்டன' என்றது.

– ***(2 அரசர்கள். 20:5)*** 'நீ திரும்பிப்போய் என் மக்களின் தலைவனான எசேக்கியாவை நோக்கி, 'உன் தந்தை தாவீதின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே: உன் மன்றாட்டைக் கேட்டேன். **உன் கண்ணீரையும் கண்டேன்.** இதோ உன்னைக் குணப்படுத்துவேன். இன்றைக்கு மூன்றாம் நாள் நீ ஆண்டவராகிய எனது இல்லத்துக்குச் செல்வாய்.

– ***(எசாயா. 60:20)*** உன் கதிரவன் ஒருபோதும் மறையான்; உன் நிலா இனித் தேய்ந்து போகாள்: ஆண்டவரே உனக்கு என்றுமுள ஒளியாக இருப்பார்: **உன் கண்ணீரின் நாள்கள் ஒழிந்துபோம்.**

– ***(எசாயா. 65:19)*** நானும் எருசலேமை முன்னிட்டு மகிழ்ச்சியடைவேன்; என் மக்களைக் குறித்துப் பூரிப்படைவேன்; **இனி அங்கே அழுகையும் கூக்குரலும் ஒருபோதும் கேட்கப்படா.**

– ***(திருப்பாடல். 56:8)*** என் துன்பங்களின் எண்ணிக்கையை நீர் அறிவீர்; உமது தோற்பையில் **என் கண்ணீரைச் சேர்த்து வைத்துள்ளீர்;** இவையெல்லாம் உம் குறிப்பேட்டில் உள்ளன அல்லவா?

– ***(எரேமியா. 31:13)*** (a) அவர்களுடைய **அழுகையை** நான் மகிழ்ச்சியாக மாற்றுவேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– *(எசாயா. 38:5)*** 'நீ எசேக்கியாவிடம் சென்று கூறவேண்டியது; உன் தந்தை தாவீதின் கடவுளாகிய ஆண்டவர் கூறுவது இதுவே; **உன் கண்ணீரைக் கண்டேன்.** இதோ நீ வாழும் காலத்தை இன்னும் பதினைந்து ஆண்டு மிகுதியாக்குவேன்.

**– *(எரேமியா. 31:16)*** ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்; நீ **அழுகையை நிறுத்து; கண்ணீர் வடிக்காதே;** ஏனெனில் உனது உழைப்புக்குப் பயன் கிடைக்கும், என்கிறார் ஆண்டவர்.

**– *(திருப்பாடல். 126:5–6)* கண்ணீரோடு விதைப்பவர்கள் அக்களிப்போடு அறுவடை செய்வார்கள்.** விதை எடுத்துச் செல்லும்போது அழுகையோடு செல்கின்றார்கள்; அரிகளைச் சுமந்து வரும்போது அக்களிப்போடு வருவார்கள்.

**– *(திருப்பாடல். 116:8)*** என் உயிரைச் சாவினின்று விடுவித்தார்; **என் கண் கலங்காதபடியும்** என் கால் இடறாதபடியும் செய்தார்.

**– *(திருப்பாடல். 39:12)*** ஆண்டவரே, என் விண்ணப்பத்தைக் கேட்டருளும்; என்னுடைய மன்றாட்டுக்குச் செவிசாய்த்தருளும்; என் **கண்ணீரைக் கண்டும்** மௌனமாய் இராதேயும்:

**– *(எஸ்தர் (கி) 4:17)*** (h) என் மன்றாட்டைக் கேட்டருளும்; உமது மரபுரிமைமீது இரக்கங்கொள்ளும். ஆண்டவரே, நாங்கள் உயிர்வாழ்ந்து உமது பெயரைப் புகழ்ந்து பாடும்பொருட்டு, எங்கள் **அழுகையை மகிழ்ச்சியாக மாற்றுவீர்;** உம்மைப் புகழ்ந்தேத்தும் வாயை அடைத்துவிடாதீர்.

**– *(எசாயா. 30:19)*** சீயோன்வாழ் மக்களே, எருசலேமில் குடியிருப்போரே, நீங்கள் **இனி ஒருபோதும் அழமாட்டீர்கள்;** அவர் உங்கள்மேல் திண்ணமாய் அருள்கூர்வார். நீங்கள் கூப்பிடும் குரலுக்குச் செவிசாய்த்து உங்களுக்கு மறுமொழி அளிப்பார்.

**– *(யோவான். 16:20)*** உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்; நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள்; அப்போது உலகம் மகிழும். நீங்கள் துயருறுவீர்கள்: **ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 9

# ஆறுதல் தருபவர்

கதை

## தெரியாத தேவதையைவிட, தெரிந்த பூதமே மேல்

மனிதர்களில் சிலர் ஒருநாள் ஒன்றுசேர்ந்து கூட்டம் நடாத்தினார்கள். அதில் "நமது கஸ்ரங்கள் துன்பங்கள் எல்லாம் அளவுக்கு அதிமாகி விட்டது. எனவே கடவுளிடம் சென்று முறையிடுவோம்" என்று தீர்மானம் நிறைவேற்றினார்கள்.

அதன்படி அவர்கள் கடவுளிடம் போய் இப்படியாக தமது விண்ணப்பத்தை முன்வைத்தார்கள், "கடவுளே நாங்கள் ஒவ்வொருவரும் படுகின்ற கஷ்டம் தாங்க முடியவில்லை. எப்படியாவது எங்கள் கஷ்டத்தை நீங்கதான் தீர்க்க வேண்டும்" என்று அழுதார்கள். அவர்களின் அழுகுரலைக் கேட்ட கடவுள், "சரி உங்கள் கஷ்டத்தையெல்லாம் கொண்டுவந்து கொட்டுங்க" என்று கனிவோடு சொன்னார். எல்லாரும் தங்கள் கஸ்ரங்களை மூட்டை மூட்டையாகக் கொண்டுவந்து வைத்தார்கள்.

"சரி, இதுல உங்களுக்கு எந்த மூட்டை அதிக பாரமில்லை என்று தெரியுதோ, அதை எடுத்துக்கொண்டு போங்கள்" என்றார் கடவுள். ஒவ்வொருவரும் அங்கிருந்த மற்றவர்களின் மூட்டைகளைத் தூக்கித் தூக்கிப் பார்த்தார்கள். தன்னுடைய கஸ்ர மூட்டையைவிட மற்ற மூட்டையெல்லாம் இன்னும் கடுமையாகவும், கொடுமையாகவும் இருப்பதை உணர்ந்தார்கள். எனவே விழுந்தடித்துக்கொண்டு தங்கள் தங்கள் மூட்டையே பாரம் குறைவானதென எண்ணி எடுத்துக்கொண்டு விரைவாக வீட்டுக்குப் போனார்கள்.

"தெரியாத தேவதையைவிட, தெரிந்த பூதமே மேல்" என அவர்களில் ஒருவர் முணுமுணுத்துக்கொண்டு சென்றார்.

"உனக்கு கீழே உள்ளவர் கோடி நினைத்துப் பார்த்து நிம்மதி தேடு" என்ற கண்ணதாசனின் வரிகளை களைக்காமல் - சளைக்காமல் பாடிக்கொண்டு ஜாலியாகச் சென்றார் இன்னொருவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து

## நமது சோகம் மிகப்பெரியதுதான்!

அமைதி இழந்த ஆன்மாக்களாக இன்றைய மனிதர் அலைந்துகொண்டிருக்கின்றனர். ஆறுதலும் அமைதியும் இன்றைய மனிதரின் அடிப்படைத் தேவைகளாகி விட்டன.

மேலை நாடுகளில் உள்ள மக்கள், மாளிகை போன்ற வீடுகளில் நவீன தொழில் நுட்ப வசதிகளோடு வாழ்ந்தாலும் அவற்றில் ஆறுதலைப் பெற்றுக்கொள்ள முடியாதவர்களாக ஆறுதல் தேடி இந்தியாவுக்கு வந்து இமய மலைச் சாரலில் குடிசைகளில் தங்கி இருந்து அங்குள்ள முனிவர்களிடம் தியானம் கற்கின்றார்கள்.

நடந்துமுடிந்த துக்கமான நிகழ்வுகளின் நினைவுகளிலிருந்து மீள முடியாமல் - ஆறுதல் பெறமுடியாதவர்களாக பலர் தத்தளிக்கின்றார்கள்.

"எங்கே நிம்மதி எங்கே நிம்மதி அங்கே எனக்கோர் இடம் வேண்டும்" என்பதே இன்றை மனிதனின் இதய ஓலமாக இருக்கின்றது. "ஓடிக்கொண்டிருக்கும் நதியை நம்மால் பின்னோக்கி ஓடச்செய்ய முடியாது. அதுபோலத்தான் நடந்துமுடிந்துவிட்ட விடயங்களை நம்மால் மாற்ற முடியாது."

நமது சோகம் மிகப்பெரியதுதான். ஆனால் நாம் நம்பிக்கை இழக்கக்கூடாது. விதை என்ற அந்தஸ்தை இழந்தால்தானே அது செடியாக மாற முடியும். செடி என்ற அந்தஸ்தை இழந்தால்தானே அது மரமாகப் பூத்துக்குலுங்க முடியும்?


ஒன்றை இழந்தால்தான் இன்னொன்று கிடைக்கும் என்பது இறைவனின் நியதிபோலும். கடிகாரத்தின் முள் இடது பக்கமும் வலது பக்கமும் மாறி மாறிச் செல்வதைப்போல வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் வெற்றியும் தோல்வியும் மாறிமாறி வரும்.

"*பழிச்சொல் என் இதயத்தைப் பிளந்துவிட்டது. நான் மிகவும் வருந்துகின்றேன். ஆறுதல் அளிப்பாருக்காகக் காத்திருந்தேன். யாரும் வரவில்லை. தேற்றுவோருக்காகத் தேடிநின்றேன்; யாரையும் காணவில்லை*" (திருப்பாடல். 69:20) எனத் திருப்பாடலின் ஆசிரியர் அங்கலாய்க்கின்றார்.

ஆறுதல் என்பது ஆண்டவர் அருளுகின்ற ஓர் அற்புதமான ஒரு கொடை. ஆண்டவர் தன் மக்களுக்கு ஆறுதல் அளிப்பதாக விவிலியத்தில் வாக்களிக்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறைவார்த்தை

– ***(எசாயா. 49:13)*** வானங்களே, மகிழ்ந்து பாடுங்கள்: மண்ணுலகே, களிகூரு; மலைகளே, அக்களித்து ஆர்ப்பரியுங்கள்; ஆண்டவர் தம் மக்களுக்கு **ஆறுதல் அளித்துள்ளார்**; சிறுமையுற்ற தம் மக்கள்மீது இரக்கம் காட்டியுள்ளார்.

– ***(எரேமியா. 31:13)*** அப்பொழுது கன்னிப்பெண்கள் நடனம் ஆடிக் களித்திருப்பர்; அவ்வாறே இளைஞரும் முதியோரும் மகிழ்ந்திருப்பர்; அவர்களுடைய அழுகையை நான் மகிழ்ச்சியாக மாற்றுவேன்; **அவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன்**; துன்பத்திற்குப் பதிலாக இன்பத்தை அருள்வேன்.

– ***(மத்தேயு. 5:4)*** துயருறுவோர் பேறுபெற்றோர்; ஏனெனில் **அவர்கள் ஆறுதல் பெறுவர்.**

– ***(எசாயா. 51:12)*** **உங்களுக்கு ஆறுதல் வழங்குபவர் நானேதான்!** மடிந்து போகும் மனிதருக்கும் புல்லென மாயும் மானிடருக்கும் நீ அஞ்சுவது ஏன்?

– ***(திருப்பாடல். 86:17)*** நன்மைத்தனத்தின் அடையாளம் ஒன்றை எனக்கு அருளும்; என் எதிரிகள் அதைக் கண்டு நாணுவர்; ஏனெனில், ஆண்டவராகிய நீர்தாமே எனக்குத் **துணைசெய்து ஆறுதல் அளித்துள்ளீர்.**

– ***(சாலமோனின் ஞானம். 8:9)*** என்னோடு கூடிவாழும் பொருட்டு ஞானத்தைத் தேர்ந்தெடுக்க முடிவு செய்தேன்; ஏனெனில் நன்மை செய்ய அது **எனக்கு ஆறுதல் தரும்** என்றும் நான் அறிவேன்.

– ***(எசாயா. 66:11)*** அப்போது அவளின் **ஆறுதல் அளிக்கும் முலைகளில் குடித்து நீங்கள் நிறைவடைவீர்கள்**; அவள் செல்வப் பெருக்கில் நிறைவாக அருந்தி இன்பம் காண்பீர்கள்.

– ***(2 கொரிந்தியர். 1:3–5)*** நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் தந்தை இரக்கம் நிறைந்த கடவுள். **அவரே ஆறுதல் அனைத்துக்கும் ஊற்று**; அவரைப் போற்றுவோம். கடவுள் எங்களுடைய இன்னல்கள் அனைத்திலும் எங்களுக்கு **ஆறுதல் அளிக்கிறார்**. நாங்களே கடவுளிடமிருந்து ஆறுதல் பெற்றுள்ளதால் பல்வேறு இன்னல்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழலும் மற்ற மக்களுக்கும் ஆறுதல் அளிக்க எங்களால் முடிகிறது. கிறிஸ்து நமக்காக மிகுதியாகத் துன்புற்றார்; அதுபோல அவர் வழியாக நாம் மிகுதியான **ஆறுதலும் பெறுகிறோம்.**


– ***(எசாயா. 57:18)*** அவன் சென்ற பாதைகளைக் கண்டேன்; ஆயினும் அவனைக் குணமாக்குவேன்; அவனை நடத்திச் சென்று அவனுக்கு **மீண்டும் ஆறுதல் அளிப்பேன்.**

– ***(எசேக்கியேல். 14:23)*** நீங்கள் அவர்களின் நடத்தையையும் செயல்களையும் பார்க்கும்போது அவர்களே **உங்களுக்கு ஆறுதலாய் இருப்பர்.** அப்போது நான் அங்கு செய்ததெல்லாம் காரணமின்றிச் செய்யவில்லை என்று நீங்கள் அறிந்துகொள்வீர்கள் என்கிறார் தலைவராகிய ஆண்டவர்.

– ***(எசாயா. 66:13)*** தாய் தன் பிள்ளையைத் தேற்றுவதுபோல் **நான் உங்களைத் தேற்றுவேன்;** எருசலேமில் நீங்கள் தேற்றப்படுவீர்கள்.

– ***(எசாயா. 40:1)*** ஆறுதல் கூறுங்கள்; என் மக்களுக்குக் கனிமொழி கூறுங்கள் என்கிறார் உங்கள் கடவுள்.

– ***(திருப்பாடல். 94:19)*** என் மனத்தில் கவலைகள் பெருகும்போது, என் உள்ளத்தை **உமது ஆறுதல் மகிழ்விக்கின்றது.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 10 நம்பிக்கைக்கு உரியவர்

**கதை**

## நம்பிக்கைக்குரியவனாக இருந்திருந்தால் ...

இங்கிலாந்து நாட்டை 16ம் நூற்றாண்டில் 8ம் கென்றி மன்னன் ஆட்சி செய்து வந்தான். அவ்வேளையில் வோல்ஷி (Wolsey) என்ற ஒருவர் கருதினாலாக இருந்தார். இவர் கடவுளுக்குப் பிரமாணிக்கமாய் இருப்பதைவிட தனது அரசனுக்கு அதிக நம்பிக்கைக்குரியவராக இருந்தார்.

ஆனால் 8ம் கென்றி மன்னன் ஒரு பெண்ணை மணப்பது சம்மந்தமான விடயத்தில் இவரது சொல் கேட்காதது மட்டுமல்ல, இவருக்கு எதிராகக் கிளம்பினான். அவருக்குத் தண்டனை கொடுக்க அவரைத் தன்னிடம் வரச்சொன்னான். கருதினால் வோல்ஷி இதைக் கேட்டு மனமுடைந்து, "நான் அரசனுக்குப் பிரமாணிக்கமாய் இருந்ததுபோல் ஒரு சிறிதளவேனும் ஆண்டவருக்கு நம்பிக்கைக்குரியவனாக இருந்திருந்தால் அவர் இன்று என்னைக் கைவிட்டிருக்க மாட்டார்" என்று கூறி உயிரை விட்டாராம்.

## கம்பளத்தை தரையில் விரித்து விடுங்கள்!

முல்லா நசுருதீன் வீடு தீப்பற்றிக்கொண்டது! அவர் தன்னைக் காத்துக்கொள்ள தன் வீட்டுக் கூரையின்மீது ஏறினார். வெப்பத்தால் தாக்கப்பட்டார். அப்போது அவர் நண்பர்கள் வீதியில் கூடி, ஒரு கம்பளத்தை விரித்துப் பிடித்துக்கொண்டு அதில் குதிக்கும்படி கத்தினார்கள்.

முல்லா மறுத்தார். "நான் குதிக்கும்போது நீங்கள் கம்பளத்தை அப்புறப்படுத்தி விடுவீர்கள். என்னை முட்டாளாக்கி விடுவீர்கள். உங்களை நான் நன்றாக அறிவேன்" என்றார்.

"இது விளையாட்டில்லை. குழந்தையைப்போல் பேசாதே. குதி" என்றார்கள். நசுருதீன் மீண்டும் மறுத்தார்.

"நான் உங்களை நம்ப மாட்டேன். அக்கம்பளத்தைத் தரையில் விரித்துவிடுங்கள், குதிக்கின்றேன்" என்றார் முல்லா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து

## நம்ப நட நம்பி நடக்காதே!

மனிதர்கள் பல வேளைகளில் நம்பிக்கையற்றவர்களாக இருக்கின்றார்கள். "நம்ப நட நம்பி நடக்காதே" என்று சொல்லக் கேட்டிருக்கின்றோம். இன்றைய மனிதனின் வாழ்வில், குறிப்பாக நுகர்வுக் கலாச்சார சூழ்நிலையில் மற்றவர்களை ஏமாற்றினால்தான் தான் வாழ முடியும், உயரமுடியும் என்று நிலை உருவாகியுள்ளது.

நம்பிக்கைத் தன்மை (Faithfulness) - இதனை ***வாக்குப்பிறழாமை*** (திருப்பாடல் 92:2) ***சொல்லுறுதி*** (சங் 88:1-2) ***உண்மை*** (திருப்பாடல் 89:1-2) ***பிரமாணிக்கம்*** (ஓசே 14:5, - பழைய மொழிபெயர்ப்பு) பற்றுறுதி (ஒசேயா 14:4) என்ற பல வார்த்தைகளால் விவிலியம் விவரிக்கின்றது. கடவுள் தன்னை நம்பிக்கைக்குரியவர் (வி.ப 34: 6) என மோசேயிடம் வெளிப்படுத்துகிறார்.

இறைவனுக்கும் இஸ்ராயல் மக்களுக்கும் இடையே சீனாய் மலையில் இடம்பெற்ற உடன்படிக்கைக்கு மோயீசன் இடைநிலையாளராக நின்று செயலாற்றினார். நான் உங்கள் இறைவனாயிருப்பேன் என்று இறைவன் வாக்களித்தார். நாங்கள் உமது மக்களாயிருப்போம் என்று இஸ்ராயல் மக்கள் வாக்களித்தார்கள். அந்த உடன்படிக்கைக்கு இறைவன் என்றென்றும் பிரமாணிக்கமாக இருந்தார். ஆனால் இஸ்ராயல் மக்கள் தாம் இறைவனோடு செய்த உடன்படிக்கையை மறந்தார்கள். வேற்றுத் தெய்வங்களை நாடினார்கள். இறைவனின் கோபத்திற்கு ஆளானார்கள். எனவே இறைவன் காலத்திற்குக் காலம் இறைவாக்கினர்களை இஸ்ராயல் மக்கள் மத்தியில் அனுப்பி அவர்கள் தாம் செய்த உடன்படிக்கையிலிருந்து விலகி பிரமாணிக்கமற்றுச் சென்றதை நினைவுபடுத்தினார். அவர்களை மனம் திரும்ப அழைத்தார்.


இரட்சணிய வரலாறு முழுவதும் இழையோடும் ஒரே கருத்து கடவுளின் பிரமாணிக்கமும் மனிதரின் பிரமாணிக்கமின்மையும்தான். ஆம் நம் கடவுள் நம்பிக்கைக்குரியவர்!

மனிதன் தவறிழைத்தாலும் கடவுள் தமது வாக்குப்பிறழாமையை உடன்படிக்கையை மறப்பதில்லை, மாற்றுவதில்லை.

மனிதன் தான் கொடுத்த வாக்கை - சொல்லை மாற்றலாம். ஆனால் கடவுள் என்றென்றும் நம்பிக்கைக்குரியவராக உள்ளார். இதை விவிலியம் நமக்கு விளக்கமாக எடுத்துக் கூறுகின்றது.

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறைவார்த்தை

– ***(எபிரேயர். 10:23)*** நமக்கு வாக்களித்தவர் **நம்பிக்கைக்கு உரியவர்.** எனவே நாம் எதிர்நோக்கியிருப்பதைப்பற்றித் தயக்கமின்றி அறிக்கையிடுவதில் நிலையாய் இருப்போமாக.

– ***(எபிரேயர். 11:11)*** ஆபிரகாம் வயது முதியவராயும் சாரா கருவுற இயலாதவராயும் இருந்தபோதிலும், அவர் ஒரு தந்தையாவதற்கான ஆற்றல் பெற்றதும் நம்பிக்கையினால்தான். ஏனெனில் வாக்களித்தவர் **நம்பிக்கைக்குரியவர்** என அவர் கருதினார்.

– ***(உரோமையர். 4:20–21)*** கடவுளின் வாக்குறுதியைப் பற்றி ஐயப்படவே இல்லை; நம்பிக்கையில் அவர் மேலும் வலுப்பெற்றார்; கடவுளைப் பெருமைப்படுத்தினார். **தாம் வாக்களித்ததைக் கடவுள் செய்ய வல்லவர்** என்பதை அவர் உறுதியாய் அறிந்திருந்தார்.

– ***(1 தெசலோனிக்கேயர். 5:24)*** உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்.

– ***(1 யோவான். 1:9)*** (இ) **அவர் நம்பிக்கைக்குரியவர்,** நேர்மையுள்ளவர்.

– ***(திருப்பாடல். 100:5)*** ஏனெனில், ஆண்டவர் நல்லவர்; என்றும் உள்ளது அவர்தம் பேரன்பு; தலைமுறைதோறும் **அவர் நம்பத்தக்கவர்.**

– ***(1 பேதுரு. 4:19)*** ஆகவே கடவுளின் திருவுளப்படி துன்பப்படுகிறவர்கள் நன்மை செய்வதில் நிலைத்திருந்து படைத்தவரிடம் தங்களை ஒப்படைப்பார்களாக! **அவர் நம்பத்தக்கவர்.**

– ***(லூக்கா. 24:49)*** இதோ, என் *தந்தை வாக்களித்த வல்லமையை* நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்கள் உன்னதத்திலிருந்து வரும் அவ்வல்லமையால் ஆட்கொள்ளப்படும்வரை இந்நகரத்திலேயே இருங்கள் என்றார்.

– ***(எபிரேயர். 11:33)*** நம்பிக்கையினாலேயே இவர்கள் அரசுகளை வென்றார்கள்; நேர்மையாகச் செயல்பட்டார்கள்; **கடவுள் வாக்களித்தவற்றைப் பெற்றார்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(1 திமொத்தேயு. 4:8)*** (ஆ) – 9 இறைப்பற்று எல்லா வகையிலும் பயன் தரும். இது இம்மையிலும் மறுமையிலும் நாம் வாழ்வு பெறுவோம் என்னும் வாக்குறுதியைக் கொண்டுள்ளது. இக்கூற்று உண்மையானது; எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத்தக்கது.

– ***(1 யோவான். 2:24–25)*** தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருக்கட்டும்; தொடக்கத்திலிருந்து நீங்கள் கேட்டறிந்தது உங்களுள் நிலைத்திருந்தால் நீங்கள் மகனுடனும் தந்தையுடனும் இணைந்திருப்பீர்கள். அவரே நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிலைவாழ்வு பற்றியதாகும்.

– ***(திருப்பாடல். 85:8)*** ஆண்டவராம் இறைவன் உரைப்பதைக் கேட்பேன்; தம் மக்களுக்கு, தம் பற்றுமிகு அடியார்க்கு நிறைவாழ்வை அவர் வாக்களிக்கின்றார்; அவர்களோ மடமைக்குத் திரும்பிச் செல்லலாகாது.

– ***(திருப்பாடல். 89:33–34)*** ஆயினும், என் பேரன்பை தாவீதைவிட்டு விலக்கமாட்டேன்; என் வாக்குப் பிறழாமையினின்று வழுவமாட்டேன். என் உடன்படிக்கையை நான் மீறமாட்டேன். என் வாக்குறுதியை நான் மாற்றமாட்டேன். என்று இறைவனே நமக்கு வாக்கு தந்துள்ளார்.

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 11

# மன்னிப்பவர்

**கதை**

## என்னைப் பொறுத்தவரை இவன் திருடவில்லை!

ஓர் ஊரில் ஒரு மடத்தில் துறவி ஒருவர் இருந்தார். ஒரு நாள் இரவு அவர் ஏதோ ஞான நூல் ஒன்றைத் தீவிரமாகப் படித்துக்கொண்டிருந்தார். அந்த நேரம் பார்த்து ஒரு திருடன் உள்ளே நுழைந்தான். அவன் கையிலே கூர்மையான கத்தி. “மரியாதையாக பணம் தந்து விடுகிறாயா? அல்லது ஒரே குத்து குத்தட்டுமா?” என்று கேட்டான். துறவி, “என்னைத் தொந்தரவு செய்யாதே அப்பா, அந்த மேசையில் பணமிருக்கிறது எடுத்துக்கொள்” என கூறிவிட்டு தன் படிப்பில் ஆழ்ந்தார்.

திருடனை ஏறெடுத்து பாராமலேயே, “எல்லாவற்றையும் எடுத்துக்கொண்டு போய்விடாதே. கொஞ்சம் மிச்சமிருக்கட்டும். நாளைக்கு வரிகட்ட வேண்டும்” எனக் கூறிய அவரின் நிதானத்தைக் கண்டு வியந்து, அவர் கூறியபடியே கொஞ்சம் பணத்தை விட்டுவிட்டு பெரும்பணத்தை எடுத்துக்கொண்டு கிளம்பினான்

அவன் கதவை நோக்கிச் செல்லும்போது, “எதை யார் கொடுத்தாலும் நன்றி சொல்ல வேண்டுமப்பா. அதுதான் நாகரீகம்” என கூறியதை மதித்து, ‘நன்றி’ எனக் கூறிவிட்டு இருளில் மறைந்தான். சில நாட்களில் பிடிபட்டான். எங்கெல்லாம் திருடினான் என்னென்ன பொருள் திருடினான் என காவல் துறையினரிடம் ஒப்புக்கொண்டதால் துறவியை அழைத்தனர். சாட்சி சொல்வதற்காக சென்ற துறவி காவல் துறையினரிடம் “என்னைப் பொறுத்தவரை இவன் திருடவில்லை. சிரமமாக இருந்ததால் என்னிடம் வந்தான் பணம் பெற்றுக்கொண்டு நன்றியும் சொன்னான்” என்று கூறினார் துறவி. சிறைவாசம் முடிந்ததும் மனம் திருந்தியவனாக அந்தத் திருடன் அந்த துறவிக்கு சீடனானான்.

## அறியாமல் செய்பவை அப்போதே மன்னிக்கப்படுகின்றன

ஒரு ஆற்றங்கரையில் இராமர் குளிக்கச் சென்றார். அக்கால வழக்கப்படி அரசர்கள் வாளைக் கீழே வைக்க மாட்டார்கள். நிலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்தியே வைப்பார்கள். இராமரும் தன் வாளை நிலத்தில் குத்திவைத்து விட்டு ஆற்றில் நீராடினார். நீராடிய பின் கரைக்கு வந்து குத்தியிருந்த வாளை எடுத்தார். அப்போதுதான் தான் குத்தியிருந்த வாளில் ஒரு தேரை குத்தப்பட்டிருப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். "ஏ தவளையே நான் இந்த வாளை நிலத்தில் குத்தும்போது நீ கத்தியிருக்கலாமே" என்றார் இராமர். தவளை சொன்னது, "எப்போதெல்லாம் எனக்குத் துன்பம் வருகிறதோ அப்போதெல்லாம் நான் இராமா... இராமா... என்றுதான் கூப்பிடுவேன். இப்போது அந்த இராமனே என்னைக் குத்தும்போது நான் யாரைச் சொல்லிக் கூப்பிடுவேன்?" என்றது.

இராமர் மிகவும் நொந்து, "தவளையே நான் தெரியாமல் செய்துவிட்டேன். மன்னித்துக்கொள்" என்றார். தவளை சொன்னது, "அறியாமல் செய்யும் குற்றங்கள் அப்போதே மன்னிக்கப்படுகின்றன என்று சொன்னதே நீதானே. உன்னை நான் அப்போதே மன்னித்துவிட்டேன்" என்று சொல்லி தன் உயிரைவிட்டது.

## கருத்து

## என்னையும் கடவுள் மன்னிப்பாரா?

பாவத்திற்கு அடிமையாகி குற்றப்பழி உணர்வோடு உள்ள மனிதன் கடவுளின் மன்னிப்பை உணரவோ ஏற்றுக்கொள்ளவோ மறுக்கிறான். "என்னையும் கடவுள் மன்னிப்பாரா?" என்று அவநம்பிக்கையோடு கேள்வி எழுப்புகிறான். கடவுளின் கருணைக்கு கணக்கே இல்லை! "நீ செய்த பாவங்களுக்காக உடனுக்குடன் கடவுள் உன்னைத் தண்டித்தால் உன்னால் ஒருநாள்கூட முழுமையாக வாழ முடியாது."

திருவிவிலியம் இறைவனை மன்னிக்கும் தந்தையாகச் சித்தரித்துக் காட்டுகின்றது. லூக்கா நற்செய்தி 15ம் அதிகாரத்தில் யேசு கூறுகின்ற **காணாமற்போன மகன்** உவமையில் தந்தையின் மன்னிக்கும் மனநிலையையும், அவருடைய அன்பான அணுகுமுறையையும் நாம் கண்டு வியக்கலாம். இந்த உவமையில் வரும் தந்தையினுடைய அன்பை, இரக்கத்தை ஆழமாகப் புரிந்துகொள்ள அன்றைய யூத சமூகப் பின்னணியை - தீண்டாமை பற்றிய நிலைப்பாட்டை நாம் அறியவேண்டும்.

யூத சமூகத்தில் இருந்து ஒருவர் விலகிப்போய் அன்னிய மக்களோடு கலப்பாராயின் அவர் மீண்டும் யூத சமூகத்திலே ஏற்றுக்கொள்ளப்பட மாட்டார். இந்த சமூக வழக்கம் அந்த இளைய மகனுக்கு நன்கு தெரிந்திருக்க வேண்டும். அதனால்தான் தந்தையிடம் திரும்பிவரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீர்மானிக்கின்றவன் தனக்குள் என்ன சொல்கின்றான்? “அப்பா கடவுளுக்கும் உமக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்; இனிமேல் உம்முடைய மகன் எனப்படத் தகுதியற்றவன்; உம்முடைய கூலியாள்களுள் ஒருவனாக என்னை வைத்துக்கொள்ளும் என்பேன்” என்று சொல்லிக்கொண்டான் (லூக்கா 15: 18).

ஆனால் இயேசு காட்டும் மன்னிக்கும் தந்தை தனது சமூகக் கட்டுப்பாடுகள், சடங்கு - சம்பிரதாயங்கள் அனைத்தையும் உடைத்து எறிந்தவராக எந்தவிதமான கேள்வியுமின்றி நிபந்தனையும் இன்றி தன் மகனை ஏற்றுக்கொள்கின்றார்.

ஊதாரியாக அலைந்த மகன் திரும்பி வந்தபோது, அவனை வரவேற்கும் தந்தையின் நிலைப்பாடு இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக இருக்கின்றது. வயது முதிர்ந்த தந்தை கண்பார்வை குறைந்தவராக இருக்க வேண்டும். ஆனால் தன் மகன் தொலைவில் வந்துகொண்டிருக்கும்போதே அவர் தந்தை அவரைக் கண்டுகொள்கிறார் (லூக்கா. 15:20) வயது முதிர்ந்த அந்தத் தந்தை நடக்கச் சிரமப்படுபவராக இருந்திருக்க வேண்டும். ஆனால் தொலையில் வந்துகொண்டிருக்கும்போதே அவர் தந்தை ஓடிப்போகிறார். (லூக். 15:20)

திருச்சபை புனிதர்களின் அருங்காட்சியகம் மட்டுமல்ல, மாறாக மனம் மாறிவரும் பாவிகளைக் குணமாக்கும் மருத்துவமனை என்பதையும் மறந்துவிடக்கூடாது.

இயேசுவின் வாழ்வில் அவர் பலரை மன்னித்து தந்தையின் அன்புக்குரியவர்களாக அவர்களை மாற்றுவதை நற்செய்தி நமக்கு நயம்பட எடுத்துரைக்கின்றது. திருவிவிலியம் முழுவதும் இறைவனின் மன்னிப்பின் மாண்பு மிளிர்வதை நாம் கண்டு மகிழலாம்.



## இறைவார்த்தை

– ***(எசாயா. 43:25)*** நான், ஆம், நானே, உன் குற்றங்களை என்பொருட்டுத் துடைத்தழிக்கின்றேன்: **உன் பாவங்களை நினைவிற் கொள்ள மாட்டேன்.**

– ***(எரேமியா. 31:34)*** அவர்களது தீச்செயலை **நான் மன்னித்துவிடுவேன்:** அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவு கூரமாட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(எபிரேயர். 8:12)*** அவர்களது தீச்செயலை நான் இரக்கத்தோடு மன்னித்துவிடுவேன். அவர்களுடைய பாவங்களை இனிமேல் நினைவுகூர மாட்டேன்.

– ***(எசாயா. 1:18)*** (ஆ) உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன; எனினும் உறைந்த பனிபோல அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன; எனினும் பஞ்சைப்போல் அவை வெண்மையாகும்.

– ***(எசாயா. 44:22)*** (அ) உன் குற்றங்களைக் கார்மேகம் போலும், உன் பாவங்களைப் பனிப்படலம் போலும் அகற்றிவிட்டேன். என்னிடம் திரும்பி வா, நான் உனக்கு மீட்பளித்துவிட்டேன்.

– ***(எசாயா. 55:7)*** (இ) அவர்கள் நம் கடவுளிடம் வரட்டும்; ஏனெனில் மன்னிப்பதில் அவர் தாராள மனத்தினர்.

– ***(திருப்பாடல். 103:3)*** அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்.

– ***(திருப்பாடல். 130:4)*** நீரோ மன்னிப்பு அளிப்பவர்:

– ***(விடுதலைப்பயணம். 34:7)*** ஆயிரம் தலைமுறைக்கும் பேரன்பு செய்பவர்; கொடுமையையும் குற்றத்தையும் பாவத்தையும் மன்னிப்பவர்.

– ***(எண்ணிக்கை. 14:18)*** ஆண்டவர் சினங்கொள்ளத் தாமதிப்பவர்; அருளிரக்கம் காட்டுவதில் அளவு கடந்தவர்; குற்றங்களையும் குறைகளையும் மன்னிப்பவர்.

– ***(சீராக்கின் ஞானம். 2:11)*** ஆண்டவர் பரிவும் இரக்கமும் உள்ளவர்; பாவங்களை மன்னிப்பவர், துன்ப வேளையில் காப்பாற்றுகிறவர்.

– ***(சீராக்கின் ஞானம். 16:11)*** இரக்கமும் சினமும் ஆண்டவரிடம் உள்ளன. அவர் மன்னிப்பதில் வல்லவர்; தம் சினத்தைக் காட்டுவதில் வல்லவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயல் 12

# ஆசி வழங்குபவர்

## கதை

### பணத்தை அறியாத பாமரத் தாய்!

ஏழை விதைவையைக் காப்பாற்ற அவளுடைய ஒரே மகன் வேலை தேடி வெளிநாடு சென்றான். அந்த ஏழைத் தாய்க்கு அக்கம் பக்கத்திலிருந்தவர் உதவி செய்தனர். "தாய்க்கு உதவி செய்யக் கூடாதா?" எனக்கேட்டு அக்கம்பக்கத்தார் மகனுக்கு கடிதம் எழுதினர். மகனும் மாதம் தவறாமல் கடிதம் எழுதினான்.

ஒருநாள் பக்கத்து வீட்டுக்காரர் "என்னம்மா மகன் கடிதம் போடுகிறானா, பணம் அனுப்புகிறானா?" எனக் கேட்க, "மாதம் தவறாமல் எழுதுகிறான். கூடவே ஒவ்வொரு மாதமும் பல படங்கள் அனுப்புகிறான். அவன் சம்பளம் அவனுக்கு சரியாயிருக்கும்போல," என்றாள் தாய். "எங்கே மகன் அனுப்பிய படத்தைக் காட்டுங்க" என்றார்.

"இதோ ஒவ்வொரு படத்தையும் இந்த புத்தகத்தில் ஒவ்வொரு பக்கத்தில் வைத்திருக்கிறேன்" என்று பெருமையுடன் காட்டினாள் அந்தத் தாய். பார்த்தவர் ஆச்சரியத்தில் திகைத்து நின்றார். மகன் அனுப்பியது படமல்ல எல்லாம் டொலர் நோட்டுக்கள்.

விதைவைக்கு அரைகுறைப் பார்வை, அத்தோடு படிக்காதவள். விபரம் புரியவில்லை. தாயின் செலவுக்கு அதிகமாகவே மாதாமாதம் மகன் பணம் அனுப்பியிருந்தான். தேவைக்கு அதிகமாகவே பணம் இருந்தும் அதை பயன்படுத்த தெரியாததால் அந்தப் பணத்தின் பெறுமதி தெரியாததால் அவள் பல நாட்கள் பட்டினி கிடந்தாள்.

## கருத்து

### ஆண்டவர் அருளால் பூமி நிறைந்துள்ளது!

நமது தமிழ் மரபிலே பெரியோர் சிறியோருக்கு ஆசி வழங்குதல் வழக்கில் இருக்கும் ஓர் நல்ல நடைமுறை. இது பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டுவரும் ஓர் பண்பட்ட செயல்முறையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுவருடம், மற்றும் முக்கிய திருவிழாக்களின்போதும் இன்னும் பிறந்தநாள், திருமணம், போன்ற விழாக்களின்போதும் பெரியோரிடம் ஆசி பெறுகின்றோம்.

அந்த ஏழைத்தாய் தனது மகன் அனுப்பும் பணத்தை அறியாதவளாக, விபரம் புரியாதவளாக இருந்தாள். பலவேளைகளில் நாமும் அப்படித்தான் இருக்கின்றோம். ஆண்டவரின் ஆசியை, நன்மைத்தனத்தை அறியாமல் இருக்கின்றோம்.

ஆண்டவர் நம்மை ஆசீர்வதிக்கின்றார்! அவருடைய அருளால் பூமி நிறைந்துள்ளது!

பெரியோரின் ஆசி நமக்கு நன்மையை, ஆசீர்வாதத்தைப் பெற்றுத்தரும் என நம்புகிறோம். மனிதர்களின் ஆசீருக்காக நாம் ஆசித்து நிற்கின்றோம் என்றால் நம்மைப் படைத்த இறைவனின் ஆசீரைப் பெற நாம் எவ்வளவுக்கு ஆசைப்பட வேண்டும்.

இதோ இலவசமாக வழங்கப்படும் ஆண்டவரின் ஆசிகள் விவிலியம் எங்கும் விரவிக் கிடக்கிறது.



## இறைவார்த்தை

– ***(இணைச்சட்டம். 15:5–6)*** (அ) நான் இன்று உனக்குக் கட்டளையிடும் எல்லாக் கட்டளைகளையும் கடைப்பிடிப்பதில் கருத்தாயிருந்து, உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடு. அப்பொழுது உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குத் தந்த வாக்குறுதியின்படி உனக்கு **ஆசி வழங்குவார்.**

– ***(தொடக்கநூல். 1:28)*** கடவுள் அவர்களுக்கு **ஆசி வழங்கி,** "பலுகிப் பெருகி மண்ணுலகை நிரப்புங்கள்; அதை உங்கள் ஆற்றலுக்கு உட்படுத்துங்கள்; கடல் மீன்கள், வானத்துப் பறவைகள், நிலத்தில் ஊர்ந்து உயிர் வாழ்வன அனைத்தையும் ஆளுங்கள்" என்றார்.

– ***(திருப்பாடல். 107:38)*** அவர் **ஆசி வழங்கினார்;** அவர்கள் மிகுதியாகப் பல்கிப் பெருகினர்; அவர்களின் கால்நடைகளைக் குறைந்துபோக விடவில்லை.

– ***(தொடக்கநூல். 12:2)*** உன்னை நான் பெரிய இனமாக்குவேன்; உனக்கு **ஆசி வழங்குவேன்.** உன் பெயரை நான் சிறப்புறச் செய்வேன்; நீயே ஆசியாக விளங்குவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(தொடக்கநூல். 12:3)*** "உனக்கு ஆசி கூறுவோர்க்கு நான் ஆசி வழங்குவேன் உன்னைச் சபிப்போரை நானும் சபிப்பேன்; உன் வழியாக மண்ணுலகின் மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும்" என்றார்.

– ***(கலாத்தியர். 3:8–9)*** நம்பிக்கை கொள்ளும் பிற இனத்தாரையும் கடவுள் தமக்கு ஏற்புடையவராக்குவார் என்பதை முன்னறிந்துதான் மறைநூல், உன் வழியாக மக்களினங்கள் அனைத்தும் ஆசி பெறும் என்னும் நற்செய்தியை ஆபிரகாமுக்கு முன்னுரைத்தது. ஆகவே நம்பிக்கைகொண்ட ஆபிரகாம் பெற்ற அதே ஆசியில் நம்பிக்கை கொள்வோரும் பங்குபெறுவர்.

– ***(ஆகாய். 2:19)*** (இ) இன்று முதல் உங்களுக்கு நான் ஆசி வழங்குவேன்.

– ***(விடுதலைப் பயணம். 20:24)*** (இ) உன்னிடம் வந்து உனக்கு ஆசி வழங்குவேன்.

– ***(1 குறிப்பேடு. 4:10)*** யாபேசு இஸ்ரயேலின் கடவுளை நோக்கி, கடவுளே, மெய்யாகவே நீர் எனக்கு ஆசி வழங்கி, என் எல்லையைப் பெரிதாக்குவீராக! உம் கை என்னோடு இருப்பதாக! தீங்கு என்னைத் துன்புறுத்தாது நீர் பாதுகாத்தருள்வீராக! என்று மன்றாடினார். கடவுளும் அவர் வேண்டியதை அருளினார்.

– ***(இணைச் சட்டம். 28:2–13)*** உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்குச் செவிகொடுத்தால், இந்த ஆசிகளெல்லாம் உன்மேல் வந்து உன்னில் நிலைக்கும். நீ நகரிலும் ஆசி பெற்றிடுவாய். வயல் வெளியிலும் ஆசிபெற்றிடுவாய். நீ வருகையிலும் செல்கையிலும் ஆசி பெற்றிடுவாய். உன் களஞ்சியங்களிலும், நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் நீ ஆசி பெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார். உன் கடவுளாகிய ஆண்டவர் உனக்குக் கொடுக்கவிருக்கும் நாட்டில் நீ ஆசி பெற்றிடுவாய். .........நீ உயர்வாயேயன்றித் தாழ்ந்து போகமாட்டாய்......

– ***(திருப்பாடல். 128:4–5)*** (அ) ஆண்டவருக்கு அஞ்சி நடக்கும் ஆடவர் இத்தகைய ஆசி பெற்றவராய் இருப்பார். ஆண்டவர் சீயோனிலிருந்து உமக்கு ஆசி வழங்குவாராக! உம் வாழ் நாளெல்லாம் நீர் எருசலேமின் நல்வாழ்வைக் காணும்படி செய்வாராக!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(நெகேமியா. 13:2)*** (ஆ) எங்கள் கடவுள் சாபத்தை ஆசியாக மாற்றிவிட்டார்.

– ***(கலாத்தியர். 3:13–14)*** மரத்தில் தொங்கவிடப்பட்டோர் சபிக்கப்பட்டோர் என்று எழுதியுள்ளவாறு நமக்காகக் கிறிஸ்து சாபத்துக்கு உள்ளாகி நம்மைச் சட்டத்தின் சாபத்தினின்று மீட்டுக்கொண்டார். ஆபிரகாமுக்குக் கிடைத்த ஆசி இயேசு கிறிஸ்துவின் வழியாய்ப் பிற இனத்தார்க்கும் கிடைக்கவும் வாக்களிக்கப்பட்ட தூய ஆவியை நாம் நம்பிக்கையின் வழியாய்ப் பெற்றுக்கொள்ளவுமே இவ்வாறு செய்தார்.

– ***(சீராக்கின் ஞானம். 33:17)*** ஆண்டவரின் ஆசியால் நான் முதன்மை நிலை பெற்றேன்:

– ***(எண்ணிக்கை. 6:27)*** அவர்கள் என் பெயரை இஸ்ரயேல் மக்களிடையே நிலைநாட்டுவர்; நானும் அவர்களுக்கு ஆசி வழங்குவேன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 13

# நல்லாயனாக நடத்துபவர்

**கதை**

## கண்ணீர் சும்மாதானே வருகின்றது?

ஒரு மனிதன் தன் நாயோடு நெடுந்தூரம் பயணம் செய்தான். வழியில் வெயிலின் கொடுமையாலும் பசி மயக்கத்தாலும் அந்த நாய் திடீரென இறந்துபோனது. அதற்காக அந்த மனிதன் அழுதுகொண்டிருந்தான். அவ்வழியே போனவர் ஒருவர் அவனிடம் வந்து, "ஏன் அழுகிறாய்?" என்று கேட்டார். அதற்கு அவன், "என் நாய் செத்துவிட்டது." என்றான். "எப்படிச் செத்தது?" என்று அந்த மனிதர் கேட்டார். "பசியின் கொடுமையால்" என்றான் அந்த மனிதன். "கையில் என்ன வைத்திருக்கின்றாய்?" என்று அவர் மீண்டும் கேட்டார். "என் சாப்பாடு" என்றான் அவன். "அதை ஏன் நீ உன் நாய்க்குப் போடவில்லை?" என்று கேட்டார் அவர். "போட்டிருந்தால் எனக்கு மீண்டும் கிடைத்திருக்காதே" என்றான் அவன். "அப்படியென்றால் நீ ஏன் நாய்க்காக அழுதுகொண்டிருக்கின்றாய்?" என்று கேட்டதற்கு அவன் சொன்னான், "கண்ணீர் சும்மாதானே வருகின்றது அதனால்தான்."

**கருத்து**

## ஆயன் எவ்வழி ஆடுகள் அவ்வழி

இன்று மேய்ப்பர்கள், தலைவர்கள் பலர் உள்ளனர். இவர்களில் உண்மையான, நம்பிக்கையான மேய்ப்பர்கள் எத்தனை பேர் என்பதுதான் கேள்வி. தாம் வாழ வேண்டும், வளர வேண்டும் என்பதற்காக தம் ஆடுகளைப் பலியிடத் தயாராக இருக்கும் மேய்ப்பர்களையும் நாம் பார்க்கிறோம். உண்மையற்ற சுயநலம் மிக்க மேய்ப்பர்களை ஆண்டவர் சாடுவதை விவிலியம் நமக்கு சொல்கிறது.

இஸ்ராயல் மக்களிடையே ஆடு மேய்த்தல் முக்கியமான ஒரு தொழில். நமது பிரதேசங்களில் ஆட்டையோ மாட்டையோ ஓட்டிச் செல்லும்போது ஆடோ மாடோ முன்னே செல்ல நாம் அவற்றிற்குப் பின்னே நடந்து சென்று ஓட்டிச் செல்வோம். ஆனால் இஸ்ராயலர் மத்தியில் அப்படியிருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேய்ப்பன் முன்னே செல்ல அவன் பின்னால் அவனைப் பின்தொடர்ந்து ஆடுகள் செல்லும். எனவே ஆயன் எவ்வழி நோக்கி நடத்துகின்றானோ அவ்வழியே ஆடுகள் செல்லும். "ஆயன் எவ்வழி ஆடுகள் அவ்வழி" என்று சொல்லலாம். ஆண்டவர் நல்ல ஆயனாக இருக்கிறார். நல்லாயனுக்குரிய அத்தனை பண்புகளையும் கொண்டவராக தந்தை இறைவனையும் இயேசு ஆண்டவரையும் விவிலியம் சித்தரிக்கின்றது. ஊர்த் தலைவரோ, பாராளுமன்ற உறுப்பினரோ ஓரளவுதான் மக்களைப் பற்றி தெரிந்து வைத்திருக்க முடியும். ஆனால் இயேசு, "என் ஆடுகளை நான் அறிவேன்" என்று கூறும்போது, அவர் முழுமையாக அறிவார் என்பதே பொருளாகும். அதாவது நம்முடைய எண்ணங்களையும், ஆசைகளையும், விருப்பு, பொறுப்புக்களையும், கவலைகளையும், துன்பங்களையும் உள்ளத்தில் ஊடாடிச் செல்லும் கருத்துக்களையும் அனைத்தையும் முழுமையாக அறிந்து வைத்துள்ளார் என்று பொருளாகும். ஏனெனில் அவருக்கு எதுவும் மறைவாய் இருக்க முடியாது. அனைத்தும் திறந்த நூல்போல அவர் முன் விரிந்து கிடக்கின்றது.

நல்லாயன் தன் ஆடுகளை நல்ல மேய்ச்சல் நிலங்களுக்கு அழைத்துச் சென்று மேயவிடுவான். குளிர்ந்த நீர் நிலைகளுக்கு இட்டுச் சென்று, தெள்ளிய நீரை அள்ளிப் பருகுமாறு செய்வான்.நல்லாயன் தவறிப் போகாத ஆடுகளை அப்படியே பாழ்வெளியில் விட்டுவிட்டு, தவறிப்போன ஆட்டைத் தேடிச் செல்வான். தேடிச் சென்று, ஆட்டைக் கண்டுபிடித்தபின், மகிழ்ச்சியடைவான். தனது மகிழ்ச்சியில் பங்குகொள்ளுமாறு அண்டை வீட்டாரை அழைப்பான். இயேசு தவறிப் போன ஆடுகளைத் தேடிச் சென்றவர்.

நல்லாயன், கால் முறிந்து போன ஆடுகளைத் தனியாகக் கவனிப்பார். காயங்களில் மருந்திட்டுக் கட்டுவார். நல்லாயனாம் இயேசுக் கிறிஸ்துவும் தவறிப் போன மனிதர்மீது பரிவுகொண்டு, பாவக் காயங்களில் இரக்கம் என்னும் மருந்தை ஊற்றி, ஆற்றுகிறார்.

தாவீது அரசர் தனது திருப்பாடலில் குறிப்பிடுகிறார். "ஆண்டவரே, என் ஆயர். எனக்கேதும் குறையில்லை. பசும்புல் வெளிமீது, என்னை அவர் இளைப்பாறச் செய்வார். அமைதியான நீர் நிலைகளுக்கு என்னை அழைத்துச் செல்வார். எனக்குப் புத்துயிர் அளிப்பார். சாவின் இருள் சூழ்பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும் நீர் என்னோடு இருப்பதால், எத்தீங்கிற்கும் அஞ்சேன். உண்மையாகவே என் வாழ்நாள் எல்லாம் உம் அருள் நலமும், பேரன்பும் எனைப் புடைசூழ்ந்து வரும்." (தி.பா.23).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை

– ***(எரேமியா. 31:10)*** மக்களினத்தாரே, ஆண்டவரின் வாக்கைக் கேளுங்கள்; தொலையிலுள்ள கடலோரப் பகுதிகளில் அதை அறிவியுங்கள்; 'இஸ்ரயேலைச் சிதறடித்தவரே அதைக் கூட்டிச் சேர்ப்பார்; **ஆயர் தம் மந்தையைக் காப்பதுபோல் அதைக் காப்பார்** என்று சொல்லுங்கள்.

– ***(திருப்பாடல். 100:3)*** ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள்! அவரே நம்மைப் படைத்தவர்! நாம் அவர் மக்கள், **அவர் மேய்க்கும் ஆடுகள்!**

– ***(திருப்பாடல். 95:7)*** அவரே நம் கடவுள்; நாமோ அவரது மேய்ச்சலின் மக்கள்; **நாம் அவர் பேணிக்காக்கும் ஆடுகள்.** இன்று நீங்கள் அவரது குரலுக்குச் செவிகொடுத்தால் எத்துணை நலம்!

– ***(எசாயா. 63:14)*** கால்நடை பள்ளத்தாக்கினுள் இறங்கிச் செல்வதுபோல் அவர்களும் இளைப்பாற ஆண்டவரின் ஆவி அவர்களை நடத்தியது. இவ்வாறு, உமது பெயர் சிறப்புறுமாறு **நீர் உம் மக்களை நடத்திவந்தீர்.**

– ***(மீக்கா. 7:14)*** ஆண்டவரே, உமது உரிமைச் சொத்தாய் இருக்கும் மந்தையாகிய உம்முடைய மக்களை **உமது கோலினால் மேய்த்தருளும்!** அவர்கள் கர்மேலின் நடுவே காட்டில் தனித்து வாழ்கின்றார்களே! முற்காலத்தில் நடந்ததுபோல அவர்கள் பாசானிலும் கிலயாதிலும் மேயட்டும்!

– ***(திருவெளிப்பாடு. 7:17)*** ஏனெனில் அரியணை நடுவில் இருக்கும் ஆட்டுக்குட்டி **அவர்களை மேய்க்கும்;** வாழ்வு அளிக்கும் நீரூற்றுகளுக்கு வழிநடத்திச் செல்லும். கடவுள் அவர்களின் கண்ணீர் அனைத்தையும் துடைத்துவிடுவார்.

– ***(மீக்கா. 2:12)*** யாக்கோபே! நான் உங்கள் அனைவரையும் ஒன்றாகக் கூட்டுவேன்; இஸ்ரயேலில் எஞ்சியயோரை ஒன்றாகத் திரட்டுவேன்; இரைச்சலிடும் அந்தக் கூட்டத்தை ஆடுகளைக் கிடையில் மடக்குவது போலவும்; **மந்தையை மேய்ச்சல் நிலத்தில் வளைப்பது போலவும் ஒன்றாகச் சேர்ப்பேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(சீராக்கின் ஞானம். 18:13)*** மனிதர் அடுத்திருப்பவருக்கே இரக்கம் காட்டுகின்றனர்; ஆண்டவர் எல்லா உயிருக்கும் இரக்கம் காட்டுகிறார்; அவற்றைக் கண்டிக்கிறார்; பயிற்றுவிக்கிறார்; அவற்றுக்குக் கற்றுக் கொடுக்கிறார்; **இடையர்கள் தங்கள் மந்தையைத் தங்களிடம் மீண்டும் அழைத்துக்கொள்வதுபோல் அவரும் செய்கிறார்.**

– ***(திருப்பாடல். 28:9)*** ஆண்டவரே, உம் மக்களுக்கு விடுதலை அளித்தருளும்; உமது உரிமைச் சொத்தான அவர்களுக்கு ஆசி வழங்கும்; **அவர்களுக்கு ஆயராக இருந்து** என்றென்றும் அவர்களைத் தாங்கிக்கொள்ளும்.

– ***(திருப்பாடல். 79:13)*** அப்பொழுது உம் மக்களும், **உமது மேய்ச்சலின் மந்தையுமான நாங்கள்** என்றென்றும் உம்மைப் போற்றிடுவோம்! தலைமுறைதோறும் உமது புகழை எடுத்துரைப்போம்.

– ***(திருப்பாடல். 23:1)*** **ஆண்டவரே என் ஆயர்; எனக்கேதும் குறையில்லை.**

– ***(திருப்பாடல். 23:4)*** மேலும், சாவின் இருள்சூழ் பள்ளத்தாக்கில் நான் நடக்க நேர்ந்தாலும், நீர் என்னோடு இருப்பதால் எத்தீங்கிற்கும் அஞ்சிடேன்; உம் கோலும் நெடுங்கழியும் என்னைத் தேற்றும்.

– ***(எசேக்கியல். 34:11,16)*** எனவே, தலைவராகிய ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்; நானே **என் மந்தையைத் தேடிச் சென்று பேணிக் காப்பேன்.** காணாமல் போனதைத் தேடுவேன் அலைந்து திரிவதைத் திரும்பக்கொண்டுவருவேன்; காயப்பட்டதற்குக் கட்டுப்போடுவேன் நலிந்தவற்றைத் திடப்படுத்துவேன்.

– ***(யோவான். 10:10–11)*** நான், ஆடுகள் வாழ்வைப் பெறும்பொருட்டு, அதுவும் நிறைவாகப் பெறும் பொருட்டு வந்துள்ளேன். **நல்ல ஆயன் நானே.** நல்ல ஆயர் ஆடுகளுக்காகத் தம் உயிரைக் கொடுப்பார்.



*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 14

# அமைதி அருள்பவர்

கதை

## சண்டைபோடக் கற்றுத் தாருங்கள்

ஒரு காட்டிலே இரண்டு துறவிகள் வாழ்ந்து வந்தார்கள். ஒருநாள் சிறிய துறவி பெரிய துறவியைப் பார்த்து "எல்லாவற்றையும் கற்றுக்கொடுத்து விட்டீர்கள். ஆனால் உலக மக்களெல்லாம் எப்படி சண்டை போடுகிறார்கள்" எனக் கற்றுக்கொடுக்கவில்லையே" என்றார்.

"சரி சண்டைபோடக் கற்றுத் தருகிறேன்" எனச் சொல்லி, பெரிய துறவி ஒரு சிறு கூழாங்கல்லை தனக்கும் சிறிய துறவிக்கும் இடையே வைத்துவிட்டு: "இதோ பாரும்! இந்தக் கல் என்னுடையது என்று நான் சொல்வேன். நீர், இல்லை இது என்னுடையது என்று சொல்லவேண்டும். இப்படிச் செய்தால் இருவருக்குமிடையே சண்டைவந்துவிடும்" என்றார்.

'சரி' எனச் சொன்னார் சிறிய துறவி. பெரிய துறவி இரண்டுமுறை "இது என்னுடையது" என்றார். மூன்றாவது முறையாக விளையாட்டாக அப்படிச் சொல்லக்கூட அவருக்கு மனமில்லை! ஆகவே சிறிய துறவியைப் பார்த்து; "இது உன்னுடையதாக இருந்தால், நீயே வைத்துக்கொள்" என்று கூறிவிட்டார். சண்டை பிறக்க வழியில்லாமல் போய்விட்டது.

**கருத்து**

## அமைதி இன்றைய அடிப்படைத் தேவை

அமைதி - சமாதானம் என்ற வார்த்தைகள் இன்றைய சூழ்நிலையில் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தனவாக இருக்கின்றன.
தனிமனித உள்ளத்தில், குடும்பத்தில், சமூகப் பங்குக் குழுக்களில் சமாதானம் இல்லாத முறுகள் நிலையைக் காணுகின்றோம். கிராமம் பிரதேசம், இனம், மதம், மொழி என்ற அடிப்படையில் இன்று சமாதானத்திற்கெதிரான சக்திகள் தலைதூக்கியுள்ளன.
உள்ளத்திலே அமைதி இல்லை, இல்லத்திலே அமைதி இல்லை. ஊரிலே, பாரிலே அமைதி இல்லை, உலக அரங்கிலே அமைதி இல்லை!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளத்தில் ஏன் அமைதி இல்லை? கொந்தளிப்பு நிறைந்த கடலிலே அமைதியைக் காணமுடியாது. கொந்தளிப்பு அடங்கினால்தான் அமைதி ஏற்படும். அதுபோல, மனித உள்ளத்திலே தீய நாட்டங்கள் தலைதூக்கும்போது, ஒருவர் தீய இச்சைகளுக்கு அடிமைப்பட்டுக் கிடக்கும்போது மனித மனம் ஒருபோதும் அமைதி காண முடியாது.

இல்லத்திலே ஏன் அமைதி இல்லை? இன்று பல குடும்பங்களிலே, பிரிவு, பிளவு, பிணக்கு, பகைமை, பொறாமை போன்ற தீமைகள் நிலைகொண்டுள்ளன. இவை இல்ல அமைதியைப் பாதிக்கின்றன.

பாரில் ஏன் அமைதி இல்லை? பயங்கரவாதம், பிரிவினைவாதம், சமயவெறி, சாதிவெறி, மொழிவெறி போன்ற தீமைகள் பாரில் புரையோடி நிற்கின்றன. நாடாளும் தலைவர்கள் அமைதிப் பேச்சுப் பேசுகிறார்கள். ஆனால் மறைமுகமாகப் படைக்கலங்களைப் பெருக்கி வருகிறார்கள். அணு ஆயுதங்கள் - இரசாயன ஆயுதங்கள் முதலியவற்றைச் செய்ய கோடிக்கணக்கான பணத்தைச் செலவு செய்கிறார்கள்.

ஆயர் புல்ட்டன் சீன் கூறுகின்றார், "சமாதானம் மனிதனால் ஆக்கப்பட்ட நிகழ்வோ அல்லது திட்டமோ அல்ல். இராஜதந்திர நடவடிக்கையால் அதை முன்வைக்க முடியாது. சர்வதேச அமைப்போ, எந்த உலக அமைப்புக்களோ அதற்கு உத்தரவிட முடியாது. கடவுளுடன் ஒரு பக்கமும் நம் நம்முடன் இன்னுமொரு பக்கமும் அயலவருடன் மறுபக்கமுமாக உருவாக்கப்பட்ட முக்கோண அடித்தளத்தைத் தவிர இராணுவம் அல்லது அரசாங்கம் இவை எதுவும் சமாதானத்தை திணிக்க முடியாது."

"அமைதியே இல்லாதபொழுது, 'அமைதி, அமைதி' என்று கூறி என் மக்களுக்கு ஏற்பட்ட காயத்தை மேலோட்டமாகவே குணப்படுத்தினர். (எரே. 6:14) என ஆண்டவர் அங்கலாய்க்கின்றார்.


"நாங்கள் அமைதிக்காகக் காத்திருந்தோம்: ஆனால் பயனேதும் இல்லை. நலம் பெறும் காலத்தை எதிர்ப்பார்த்திருந்தோம்: பேரச்சமே மிஞ்சியது." (எரே. 8:15)

திருவிவிலியம் அமைதியின் செய்தியை ஆணித்தரமாக எமக்கு எடுத்துரைக்கின்றது. இயேசு பிறந்தபொழுது இவ்வுலகில் ஒலித்த முதல் கிறிஸ்மஸ் செய்தி அமைதி, சமாதானம் பற்றியதாகும். *உலகிலே நல்மனத்தோருக்கு அமைதி உண்டாகுக* என்பதாகும். இயேசு உயிர்த்து காட்சி கொடுத்தபொழுது கூறிய முதல் வார்த்தை உங்களுக்கு சமாதானம் என்பதாகும்.

ஆம், அமைதி இழந்த இந்த மண்ணில் வாழும் நமக்கு அமைதியின் செய்தியையே ஆண்டவர் அருள்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவார்த்தை

– ***(லேவியர். 26:6)*** நாட்டிற்கு **அமைதி அருள்வேன்.** அச்சுறுத்துவாரின்றிப் படுத்துக்கொள்வீர்கள்.

– ***(யோசுவா. 1:13)*** உங்களுக்கு ஆண்டவரின் ஊழியர் மோசே கட்டளையிட்டதை நினைவுகொள்ளுங்கள். உங்கள் கடவுளாகிய ஆண்டவர் உங்களுக்கு **அமைதி அருள்வார்.** இந்நாட்டை உங்களுக்கு அளிப்பார்.

– ***(1 அரசர்கள். 5:4)*** இப்பொழுதோ, என் கடவுளாகிய ஆண்டவர் என் எல்லைகள் எங்கும் **அமைதி நிலவும்படி** செய்திருக்கிறார். எனக்கு எதிரியுமில்லை; இடையூறுமில்லை.

– ***(1 அரசர்கள். 8:56)*** தாம் வாக்களித்தபடியெல்லாம் தம் மக்களாகிய இஸ்ரயேலருக்கு **அமைதியை அருளிய** ஆண்டவர் போற்றி!

– ***(1 குறிப்பேடு 22:9)*** இதோ! உனக்கு ஒரு மகன் பிறப்பான்! அவன் அமைதியின் மன்னனாய் இருப்பான்! சுற்றிலுமுள்ள அவனுடைய பகைவர்களிடமிருந்து அவனுக்கு **அமைதியை அருள்வேன்!**

– ***(திருப்பாடல். 94:13)*** அவர்களின் துன்ப நாள்களில் அவர்களுக்கு **அமைதி அளிப்பீர்.**

– ***(திருப்பாடல். 147:14)*** அவர் உன் எல்லைப்புறங்களில் **அமைதி நிலவச் செய்கின்றார்;** உயர்தரக் கோதுமை வழங்கி உன்னை நிறைவடையச் செய்கின்றார்.

– ***(எசாயா. 9:6)*** ஏனெனில், ஒரு குழந்தை நமக்குப் பிறந்துள்ளார்;.... அவர் திருப்பெயரோ வியத்தகு ஆலோசகர், வலிமைமிகு இறைவன், என்றுமுள தந்தை, **அமைதியின் அரசர்** என்று அழைக்கப்படும்.

- ***(மாற்கு. 5:34)*** இயேசு அவரிடம், "மகளே, உனது நம்பிக்கை உன்னைக் குணமாக்கிற்று. **அமைதியுடன் போ**" என்றார்.

– ***(லூக்கா. 1:79)*** நம்முடைய கால்களை **அமைதி வழியில்** நடக்கச் செய்யவும் நம் கடவுளின் பரிவுள்ளத்தாலும் இரக்கத்தாலும் விண்ணிலிருந்து விடியல் நம்மைத் தேடிவருகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(லூக்கா. 2:14)*** உலகில் அவருக்கு உகந்தோருக்கு **அமைதி உண்டாகுக!** என்று கடவுளைப் புகழ்ந்தது.

– ***(லூக்கா. 7:50)*** இயேசு அப்பெண்ணை நோக்கி, 'உமது நம்பிக்கை உம்மை மீட்டது; **அமைதியுடன் செல்க** என்றார்.

– ***(லூக்கா. 24:36)*** சீடர்கள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோது இயேசு அவர்கள் நடுவில் நின்று, **'உங்களுக்கு அமைதி உரித்தாகுக!'** என்று அவர்களை வாழ்த்தினார்.

– ***(யோவான். 14:27)*** **'அமைதியை உங்களுக்கு விட்டுச் செல்கிறேன்;** என் **அமைதியையே** உங்களுக்கு அளிக்கிறேன். நான் உங்களுக்குத் **தரும் அமைதி உலகம் தரும் அமைதி போன்றது** அல்ல. நீங்கள் உள்ளம் கலங்க வேண்டாம்; மருள வேண்டாம்.'

– ***(யோவான். 16:33)*** 'என் வழியாய் நீங்கள் **அமைதி காணும்** பொருட்டே நான் இவற்றை உங்களிடம் சொன்னேன்.'

– ***(யோவான். 20:19)*** அப்போது இயேசு அங்கு வந்து அவர்கள் நடுவில் நின்று, **'உங்களுக்கு அமைதி உரித்தாகுக!'** என்று வாழ்த்தினார்.

– ***(யோவான். 20:21)*** இயேசு மீண்டும் அவர்களை நோக்கி, **'உங்களுக்கு அமைதி உரித்தாகுக!** தந்தை என்னை அனுப்பியது போல நானும் உங்களை அனுப்புகிறேன் என்றார்.

– ***(யோவான். 20:26)*** எட்டு நாள்களுக்குப்பின் அவருடைய சீடர்கள் மீண்டும் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடு இருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தும் இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவில் நின்று, 'உங்களுக்கு **அமைதி உரித்தாகுக!'** என்று வாழ்த்தினார்.

– ***(திருத்தூதர் பணி. 10:36)*** இயேசு கிறிஸ்து வாயிலாக **அமைதி உண்டு என்னும்** நற்செய்தியை அவர் இஸ்ரயேல் மக்களுக்கு அனுப்பினார். அவரே அனைவருக்கும் ஆண்டவர்.

– ***(கொலோசையர். 3:15)*** **கிறிஸ்து அருளும்** அமைதி உங்கள் உள்ளங்களை நெறிப்படுத்துவதாக!

– ***(1 தெசலோனிக்கர். 5:23)*** **அமைதி அருளும் கடவுள்தாமே** உங்களை முற்றிலும் தூய்மையாக்குவாராக.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 15

# வாழ்வு தருபவர்

கதை

## வாழ்வு அழிக்கப்படுவதை பார்த்துக்கொண்டிருந்தேனே!

கெவின் கார்டர் என்னும் திறமையான பத்திரிகைப் புகைப்படக் கலைஞர் ஒருவர் இருந்தார். அவர் ஒருமுறை ஒரு காட்சியைக் காண நேர்ந்தது.

ஒரு பச்சிளங் குழந்தையைக் கழுகு ஒன்று தன்னுடைய கூரிய நகங்களால் தூக்கிச் சென்று குத்திக் கொன்று தின்றது. அதை தத்ரூபமாக மிகுந்த சிரத்தையுடன் பல கோணங்களிலும் இருந்து புகைப்படங்களை எடுத்துத் தள்ளினார். அந்தப் படம் மிகவும் தத்ரூபமாக இருந்ததால் அவருக்கு மிக உயர்ந்த புலிட்சர் விருது வழங்கப்பட்டது.

ஆனால் அவர் சில நாட்களிலேயே தற்கொலை செய்து இறந்துவிட்டார். அதற்குக் காரணம், "அந்தச் சம்பவம் நடந்த இடத்திற்கு மிக அருகில் இருந்தும் புகைப்படம் எடுப்பதிலேயே கவனம் செலுத்தினோமே தவிர துடிதுடித்து இறந்த அந்தக் குழந்தையைக் காப்பாற்ற முயற்சி செய்யவில்லையே, நாம் நினைத்திருந்தால் அந்தக் குழந்தையைக் கழுகிடமிருந்து எளிதாகக் காப்பாற்றியிருக்கலாமே" என்னும் குற்ற உணர்வு அவர் பெற்ற பரிசைப் பார்க்கும் போதெல்லாம் அவருக்கு உறுத்தியது. "ஒரு வாழ்வு என் கண்முன்னால் அழிக்கப்படுவதை நான் பார்த்துக்கொண்டிருந்துவிட்டேனே" என்ற அந்தக் குற்ற உணர்வுதான் அவரைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டியது.

### கருத்து

### வாழ்வுக்கான தாகம்

வாழ்வுக்கான தாகம் மனிதரிடம் என்றுமே உண்டு. நிலையற்ற இந்த உலகில் மனிதன் நிலையான வாழ்வைத் தேடி ஓடுகின்றான்.

காயமே இது பொய்யடா வெறும் காற்றடைத்த பையடா" என்றும், "வாழ்வாவது மாயம் இது மண்ணாவது திண்ணம்" என்றும், சித்தர்களும் ஞானிகளும் மனித வாழ்வின் நிலையாமையை எடுத்துச் சொல்லிச் சென்றிருக்கின்றார்கள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மண்ணின்மீது மனிதனுக்காசை மனிதன்மீது மண்ணுக்காசை, மனந்தான் இறுதியில் ஜெயிக்கிறது" என்று தற்காலக் கவிஞர்கள் தங்கள் பங்கிற்கு வாழ்வின் நிலையாமையைப் பாடுகின்றார்கள்.

வாழ வேண்டும், மகிழ்ச்சியாக வாழவேண்டும், மனநிறைவோடு வாழ வேண்டும் என்ற ஆதங்கம் மனிதரிடம் இயல்பாக எழும் ஒரு வேட்கையாகும். அந்த வாழ்வை நாம் வாழாமல் தடை செய்யும் சக்திகள் இந்த உலகில் ஏராளம் ஏராளம்.

ஆனால் மனிதன் வாழும்வரை போராடி, வாழ்வுக்கான வழியைக் கண்டுபிடித்துக்கொண்டே இருக்கின்றான். இதோ இறைவன் அருளும் வாழ்வு தரும் வார்த்தைகள்!



## இறைவார்த்தை

– ***(எசாயா. 55:3)*** எனக்குச் செவிகொடுங்கள், என்னிடம் வாருங்கள்; கேளுங்கள்; அப்பொழுது **நீங்கள் வாழ்வடைவீர்கள்**.

– ***(எசாயா. 58:8)*** அப்பொழுது உன் ஒளி விடியல்போல் எழும்; விரைவில் **உனக்கு நலமான வாழ்வு துளிர்க்கும்.**

– ***(எசாயா. 66:12)*** ஆண்டவர் கூறுவது இதுவே; ஆறுபோல் **நிறைவாழ்வு** பாய்ந்தோடச் செய்வேன்; பெருக்கெடுத்த நீரோடைபோல் வேற்றினத்தாரின் செல்வம் விரைந்து வரச்செய்வேன்;

– ***(எரேமியா. 25:5)*** அவரது செய்தி இதுவே; ....... ஆண்டவர் உங்களுக்கும் உங்கள் மூதாதையருக்கும் எக்காலத்திற்குமெனக் கொடுத்துள்ள நாட்டில் **வாழ்வீர்கள்.**

– ***(எரேமியா. 29:11)*** ஏனெனில் உங்களுக்காக நான் வகுத்திருக்கும் திட்டங்கள் எனக்குத் தெரியும் அன்றோ! அவை வளமான எதிர்காலத்தையும் நம்பிக்கையையும் உங்களுக்கு அளிப்பதற்கான **நல்வாழ்வின்** திட்டங்களே அன்றி, கேடு விளைவிப்பதற்கான திட்டங்கள் அல்ல, என்கிறார் ஆண்டவர்.

– ***(எசேக்கியேல். 18:32)*** எவருடைய சாவிலும் நான் இன்பம் காண்பதில்லை என்கிறார் தலைவராகிய ஆண்டவர். எனவே மனம் மாறி **வாழ்வு பெறுங்கள்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(ஆமோஸ். 5:4)*** இஸ்ரயேல் வீட்டாருக்கு ஆண்டவர் இவ்வாறு கூறுகிறார்; என்னைத் தேடுங்கள், **நீங்கள் வாழ்வீர்கள்.**

– ***(மத்தேயு. 4:4)*** அவர் மறுமொழியாக, "மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் **ஒவ்வொன்றாலும் வாழ்வர்** என மறைநூலில் எழுதியுள்ளதே" என்றார்.

– ***(யோவான். 3:15)*** அப்போது அவரிடம் நம்பிக்கைகொள்ளும் அனைவரும் **நிலைவாழ்வு பெறுவர்.**

– ***(யோவான். 3:16)*** தம் ஒரே மகன்மீது நம்பிக்கை கொள்ளும் எவரும் அழியாமல் **நிலைவாழ்வு பெறும்**பொருட்டு அந்த மகனையே அளிக்கும் அளவுக்குக் கடவுள் உலகின்மேல் அன்பு கூர்ந்தார்.

– ***(யோவான். 4:10)*** இயேசு அவரைப் பார்த்து, "கடவுளுடைய கொடை எது என்பதையும் குடிக்கத் தண்ணீர் கொடும் எனக் கேட்பவர் யார் என்பதையும் நீர் அறிந்திருந்தால் நீரே அவரிடம் கேட்டிருப்பீர்; அவரும் உமக்கு **வாழ்வு தரும்** தண்ணீரைக் கொடுத்திருப்பார்" என்றார்.

– ***(யோவான். 4:14)*** நான் கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கும் எவருக்கும் என்றுமே தாகம் எடுக்காது; நான் கொடுக்கும் தண்ணீர் அதைக் குடிப்பவருக்குள் பொங்கி எழும் ஊற்றாக மாறி **நிலைவாழ்வு அளிக்கும்** என்றார்.

– ***(யோவான். 5:24)*** என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் **நிலை வாழ்வைக்** கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாகமாட்டார்கள்; ஏற்கெனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

– ***(யோவான். 5:25)*** காலம் வருகிறது; ஏன், வந்தே விட்டது. அப்போது இறைமகனின் குரலை இறந்தோர் கேட்பர்; **அதைக் கேட்போர் வாழ்வர்** என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

– ***(யோவான். 6:33)*** கடவுள் தரும் உணவு வானிலிருந்து இறங்கி வந்து **உலகுக்கு வாழ்வு அளிக்கிறது** என்றார்.

– ***(யோவான். 6:35)*** இயேசு அவர்களிடம், **வாழ்வு தரும் உணவு நானே.** என்னிடம் வருபவருக்குப் பசியே இராது. ...!

– ***(யோவான். 6:51)*** விண்ணகத்திலிருந்து இறங்கி வந்த **வாழ்வு தரும்** உணவு நானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– (யோவான். 6:57)** வாழும் தந்தை என்னை அனுப்பினார். நானும் அவரால் வாழ்கிறேன். அதுபோல் என்னை உண்போரும் என்னால் வாழ்வர்.

**– (யோவான். 6:58)** இவ்வுணவை உண்போர் என்றும் வாழ்வர்.

**– (யோவான். 6:63)** வாழ்வு தருவது தூய ஆவியே; ஊனியல்பு ஒன்றுக்கும் உதவாது. நான் கூறிய வார்த்தைகள் வாழ்வுதரும ஆவியைக் கொடுக்கின்றன.

**– (யோவான். 20:31)** இயேசுவே இறைமகனாகிய மெசியா என நீங்கள் நம்புவதற்காகவும், நம்பி அவர் பெயரால் வாழ்வு பெறுவதற்காகவுமே இந்நூலில் உள்ளவை எழுதப்பெற்றுள்ளன.

**– (திருத்தூதர் பணி. 7:38)** பாலைநிலத்தில் மக்கள் சபையாகக் கூடியபோது சீனாய் மலையில் தம்மோடு பேசிய தூதருக்கும் நம் மூதாதையருக்கும் இடையே நின்றவர் இவரே. வாழ்வளிக்கும் வார்த்தைகளை நமக்குப் பெற்றுத்தந்தவரும் இவரே.

**– (உரோமையர். 8:6)** ஊனியல் மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது சாவே; ஆவிக்குரிய மனநிலை கொண்டிருப்போருக்கு வருவது வாழ்வும் அமைதியும் ஆகும்.

**– (கொலோசையர். 3:4)** கிறிஸ்துவே உங்களுக்கு வாழ்வு அளிப்பவர். அவர் தோன்றும்பொழுது நீங்களும் அவரோடு மாட்சி பொருந்தியவராய்த் தோன்றுவீர்கள்.

**– (1 யோவான். 2:25)** அவரே நமக்கு வாக்குறுதி அளித்துள்ளார். அவ்வாக்குறுதி நிலைவாழ்வு பற்றியதாகும்.

**– (1 யோவான். 4:9)** நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார்.

**– (1யோவான். 5:16)** பாவம் செய்வோர் சாவுக்குரிய பாவம் செய்யவில்லை என்று கண்டால், அவர்களுக்காகக் கடவுளிடம் வேண்டுதல் செய்ய வேண்டும். கடவுளும் அவர்களுக்கு வாழ்வு அருள்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 16

# வெட்கமுறாதபடி செய்வார்

**கதை**

## சேர்ச்சில் கிடக்கிறான் ஏறுங்கள் வண்டியில்

பிரித்தானிய நாட்டின் பிரதமராக இருந்த வின்ஸ்டன் சேர்ச்சில் ஒருநாள் இரவு வானொலியில் உரையாற்ற இருந்தார். ஒரு ரக்ஸியில் ஏறிக்கொண்டு, "ரேடியோ ஸ்ரேஷனுக்கு வண்டியை விடு" என்றார். ரக்ஸி ஓட்டுனருக்கு சேர்ச்சிலை அடையாளம் கண்டுகொள்ள முடியவில்லை. "அவ்வளவு தூரம் நான் செல்லமுடியாது. வேறு வண்டியைப் பாருங்கள்" என்று அந்த ஓட்டுனர் சொல்ல, "ஏன்?" என ஆச்சரியத்துடன் கேட்டார் சேர்ச்சில். "இன்று சேர்ச்சில் ரேடியோவில் பேசுகிறார். நான் சீக்கிரம் வீட்டுக்குப்போய்க் கேட்கவேண்டும்" என்றார்.

சேர்ச்சிலுக்கு உச்சி குளிர்ந்தது. அவனிடம் பத்து டொலரை நீட்டினார். அதை வாங்கிக்கொள்ளும்போது, "சேர்ச்சில் கிடக்கிறான், ஏறுங்கள் வண்டியில்" என்றான் அந்த ஓட்டுனர்.

## மானமா? பருப்பு ரொட்டியா?

கிரேக்க தத்துவ ஞானி டயோஜினிஸ் மன்னரின் தயவை நாடாதவர். ரொட்டித் துண்டையும் பருப்பையும் உணவாகக் கொள்பவர். இன்னொரு தத்துவ ஞானி அரிஸ்டிப்பஸ். மன்னரின் துதிபாடி ஊழைக் கும்பிடு போடுபவர். அறுசுவை உணவுண்ணும் பணக்காரர்.

ஒருநாள் டயோஜினிஸ் வீட்டுக்கு விருந்துக்குப் போனார் அரிஸ்டிப்பஸ். பரிமாறப்பட்ட பருப்பு ரொட்டியைப் பார்த்து அறிவுரை கூறினார். "மன்னரிடம் நீ அனுசரித்துப்போகக் கற்றுக்கொள். இப்படிப் பருப்பைத் தின்று வாழ அவசியம் இருக்காது" சில நாள் கழித்து .... அரிஸ்டிப்பஸ் வீட்டுக்குப் போனார் டயோஜினிஸ். அவரோ .... மன்னர் மரியாதையில்லாமல் பேசிவிட்டதாக சோகத்தில் இருந்தார்.

அரிஸ்டிப்பஸ் அமைதியாய்ச் சொன்னார். "பருப்பைத் தின்று வாழக் கற்றுக்கொள். இப்படி மன்னரிடம் மானம் கெட்டு வயிறு வளர்க்கும் அவசியம் இருக்காது" அவர் தொடர்ந்தார். "மானமற்ற அறுசுவை உணவைவிட மானமுள்ள பருப்பு ரொட்டியே மேல் ..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து**

## அவமானப்படும் அவஸ்தை


தன் உடம்பிலிருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவர் என தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறுகின்றார்.

***“மயிர் நீர்ப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்.”***

ஒரு மயிரை இழந்தாலும் கவரிமான் உயிர் வாழாது என்று சொல்வார்கள். தனது மானத்தைக் காப்பாற்றிக்கொள்ள மனிதன் பாடாய் அலைகின்றான்.

பழிவாங்கலின் ஒரு பகுதியாக அவமானத்திற்கு உள்ளாக்கப்படும் நிலை இன்று உலகத்தில் காணப்படுகின்றது. அரசியலில் அவமானத்திற்கு உள்ளாகுதல், பொது வாழ்க்கையில் அவமானத்திற்கு உள்ளாகுதல், தனிமனிதத் தவறுகளினால் அவமானத்திற்கு உள்ளாகும் நிலைகள் என இந்தப் பட்டியல் தொடர்ந்து செல்கிறது.
மனிதர்கள் சக மனிதர்களை அவமானத்திற்கு உட்படுத்துகின்றனர். அவமானத்திற்கு உள்ளாவது அவஸ்தை மிக்கதொரு அனுபவம்.

இறைவனின் மக்கள் தம்மை வெட்கத்திற்கு ஆளாக்க வேண்டாம் என இறைவனிடம் மன்றாடுகின்றனர். அவரும் அவர்களுடைய நிந்தயை, சிறுமையை, இழிநிலையை நீக்குவதாக வாக்களிக்கின்றார்.



## இறைவார்த்தை

– ***(திருப்பாடல். 25:2)*** என் கடவுளே, உம்மில் நம்பிக்கை கொள்கின்றேன்; நான் வெட்கமுற விடாதேயும்; என் பகைவர் என்னைக் கண்டு நகைக்க விடாதேயும்.

– ***(திருப்பாடல். 71:1)*** ஆண்டவரே! உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; ஒருபோதும் நான் வெட்கமுற விடாதேயும்.

– ***(திருப்பாடல். 69:6)*** ஆண்டவரே! படைகளின் தலைவரே! உமக்காகக் காத்திருப்போர் என்னால் வெட்கமுறாதபடி செய்யும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(திருப்பாடல். 31:1)*** ஆண்டவரே, உம்மிடம் நான் அடைக்கலம் புகுந்துள்ளேன்; நான் ஒருபோதும் **வெட்கமடைய விடாதேயும்**; உமது நீதிக்கேற்ப என்னை விடுவித்தருளும்.

– ***(திருப்பாடல். 25:20)*** என் உயிரைக் காப்பாற்றும்; என்னை விடுவித்தருளும்; உம்மிடம் அடைக்கலம் புகுந்துள்ள **என்னை வெட்கமுற விடாதேயும்.**

– ***(திருப்பாடல். 31:17)*** ஆண்டவரே, உம்மை நோக்கி மன்றாடினேன்; என்னை **வெட்கமுற விடாதேயும்**; பொல்லார் வெட்கிப்போவார்களாக! பாதாளத்தில் வாயடைத்துப் போவார்களாக!

– ***(மத்தேயு. 5:11)*** என் பொருட்டு மக்கள் உங்களை இகழ்ந்து, துன்புறுத்தி, உங்களைப் பற்றி இல்லாதவை பொல்லாதவையெல்லாம் சொல்லும்போது நீங்கள் பேறுபெற்றவர்களே!

– ***(எசாயா. 49:23)*** நானே ஆண்டவர் என்பதையும், எனக்காகக் காத்திருப்போர் வெட்கமடையார் என்பதையும் அப்பொழுது நீ அறிந்து கொள்வாய்.

– ***(யோவேல். 2:26–27)*** நீங்கள் வேண்டிய மட்டும் உண்டு நிறைவடைவீர்கள்; உங்களை வியத்தகு முறையில் நடத்தி வந்த உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் பெயரைப் போற்றுவீர்கள்; இனிமேல் என் மக்கள் ஒருபோதும் **நிந்தைக்கு உள்ளாக மாட்டார்கள்.** இஸ்ரயேல் நடுவில் நான் இருக்கிறேன் என்றும், ஆண்டவராகிய நானே உங்கள் கடவுள் என்றும், என்னையன்றி எவரும் இல்லையென்றும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; இனிமேல் **என் மக்கள் ஒருபோதும் நிந்தைக்கு உள்ளாக மாட்டார்கள்.**

– ***(எரேமியா. 30:19)*** அவர்களிடமிருந்து நன்றிப் பாக்கள் எழும்பிவரும்; மகிழ்ச்சியுறுவோரின் ஆரவாரம் கேட்கும். அவர்களை நான் பல்கிப் பெருகச் செய்வேன்; அவர்கள் எண்ணிக்கையில் குறைய மாட்டார்கள். நான் அவர்களைப் பெருமைப்படுத்துவேன்; இனி அவர்கள் **சிறுமையுற மாட்டார்கள்.**

– ***(எசாயா. 61:7)*** அவமானத்திற்குப் பதிலாக நீங்கள் இருபங்கு நன்மை அடைவீர்கள்; **அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள்**; ஆதலால், நாட்டில் உங்கள் செல்வம் இருமடங்காகும்; முடிவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– *(செப்பனியா. 3:18)*** அது திருவிழாக் காலம்போல் இருக்கும். உனது துன்பத்தை அகற்றிவிட்டேன்; ஆகவே, இனி நீ **இழிவடையமாட்டாய்.**

**– *(எசாயா. 50:7)*** ஆண்டவராகிய என் தலைவர் துணை நிற்கின்றார்; நான் **அவமானம் அடையேன்;** என் முகத்தைக் கற்பாறை ஆக்கிக் கொண்டேன்; **இழிநிலையை நான் அடைவதில்லை** என்றறிவேன்.


**– *(எசாயா. 54:4)*** அஞ்சாதே, நீ **அவமானத்திற்குள்ளாக** மாட்டாய்; வெட்கி நாணாதே, இனி நீ இழிவாக நடத்தப்படமாட்டாய்; உன் இளமையின் மானக்கேட்டை நீ மறந்துவிடுவாய்; உன் கைம்மையின் இழிநிலையை இனி நினைக்கமாட்டாய்.

**– *(யோசுவா. 5:9)*** ஆண்டவர் யோசுவாவிடம், "இன்று எகிப்தியரின் **பழிச்சொல்லை உங்களிடமிருந்து நீக்கிவிட்டேன்"** என்றார். ஆகவே அந்த இடம் இந்நாள்வரை 'கில்கால்' என்று அழைக்கப்படுகின்றது.

**– *(திருப்பாடல். 27:6)*** அப்பொழுது, என்னைச் சுற்றிலுமுள்ள என் எதிரிகளுக்கு எதிரில் நான் **தலைநிமிரச் செய்வார்;** அவரது கூடாரத்தில் ஆர்ப்பரிப்புடன் பலிகளைச் செலுத்துவேன்; ஆண்டவரைப் புகழ்ந்து பாடல் பாடுவேன்.

**– *(செப்பனியா. 3:19)*** இதோ!, உன்னை ஒடுக்கியவர்களை அந்நாளில் நான் தண்டிப்பேன்; கால் ஊனமுற்றவர்களை ஒன்று சேர்ப்பேன்; அவமானமுற்ற அவர்களை **உலகெங்கும் பெயரும் புகழும் பெறச்செய்வேன்.**

**– *(எசாயா. 45:17)*** ஆண்டவர் என்றுமுள மீட்பை அளித்து இஸ்ரயேலை விடுவித்தருளினார்; என்றென்றும் நீங்கள் **வெட்கக்கேடு அடையமாட்டீர்கள்; அவமதிப்புக்கும் உள்ளாக மாட்டீர்கள்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 17

# தாழ்ந்தோரை உயர்த்துகிறவர்

கதை

## என்னிடம் உள்ளதை உம்மிடம் தருகின்றேன்

கவிஞர் டால்ஸ்டாய் தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஏழை தொழுநோயாளியைப் பார்த்தார். கொடுப்பதற்கு அவரிடம் அப்போது ஒன்றுமில்லை. இருப்பினும் அருகே சென்று அவனை உற்றுநோக்கி,

"நண்பா! உனக்கு உதவிசெய்ய தற்பொழுது என்னிடம் பணமோ, பொருளோ இல்லை. ஆனால் என்னிடம் உள்ள ஒன்றுமட்டும் தருகின்றேன்" என்று கூறி, அவனைக் கட்டித் தழுவி, அரவணைத்து முத்தமிட்டாராம். அதற்கு அவன் "நீர் கொடுத்திருக்கும் இந்த அரவணைப்பும், முத்தமும் எதற்கும் ஈடுசெய்ய முடியாது. என்னை மனிதனாக மதித்த முதல் மனிதர் நீர்தான்" எனச் சொல்லி ஆனந்தக் கண்ணீர் வடித்தான்.

## மரண வியாபாரி மனிதநல விஞ்ஞானியானார்

அல்பேட் நோபல்! டைனமைற் என்ற வெடிமருந்தைக் கண்டு பிடித்த அறிவு வித்தகர். ஒருநாள் காலை .... வழக்கம்போல செய்தித்தாளைப் புரட்டினார்.

"விஞ்ஞானி அல்பேட் நோபல் மரணம்!" அதிர்ச்சியில் உறைந்து போனார். தான் இறந்துபோனதை தானே வாசித்து அறிந்தார். உள்ளே சொல்லப்பட்டிருந்த குறிப்பு இன்னும் அவரை அதிரவைத்தது.

"..... பலரை அழிக்கும் டைனமற் என்ற வெடிமருந்தைக் கண்டுபிடித்ததால் இவரை ஒரு மரண வியாபாரி எனலாம் ....." நொந்து போனார் நோபல்! நான் இறக்கும்போது இப்படியொரு பட்டமா? இவ்வளவுதான் என் வாழ்க்கையா? சிந்தித்தார்.... செயற்பட்டார்..... பரிசுகளை நிறுவினார். அதுதான் இன்றைக்கும் உலகமே மதிக்கும் நோபல் பரிசுகள்! ஒன்று விஞ்ஞான முயற்சிகளுக்கு இன்னொன்று அமைதி முயற்சிகளுக்கு.

இன்று நோபல் .... ஒரு மரண வியாபாரியல்ல. மனிதநல விஞ்ஞானி. ஆம், தாழ்ந்துபோன அவரது வாழ்வு மீண்டும் உயர்த்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கருத்து**

## சுடுகாட்டில் மட்டும்தான் சமரசமா?

மனித வாழ்வில் தாழ்வுற்று கீழ்நிலைக்கு போகின்ற தருணங்களும் வரத்தான் செய்கின்றன. உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேறுபாடு நமது சமுதாயத்தில் புரையோடிப்போன ஒரு புண். படித்தவன் - படிக்காதவன்; ஏழை – பணக்காரன்; நாகரீகமுடையவன் - நாகரீகமற்றவன்; உயர்ந்த சாதிக்காரன் - தாழ்ந்த சாதிக்காரன் என இந்தப் பட்டியல் நீண்டுகொண்டே செல்கிறது. சுடுகாட்டில்தான் சமரசம் நிலவுவதாக கவிஞன் பாடுகின்றான்,

"சமரசம் உலாவும் இடமே - நம் வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே!
சாதியில் மேலோர் என்றும் தாழ்ந்தவர் கீழோர் என்றும் பேதமில்லாமல்
எல்லோரும் முடிவில் சேர்ந்திடும் காடு
தொல்லை இன்றியே தூங்கிடும் வீடு
உலகினிலே இதுதான் - நம்வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே!
ஆண்டி எங்கே அரசனும் எங்கே
அறிஞர் எங்கே அசடனும் எங்கே
ஆவி போனபின் கூடுவார் இங்கே
ஆகையினால் இதுதான் - நம்வாழ்வில் காணா
சமரசம் உலாவும் இடமே"

இறைவனை "பரலோகத்தில் இருக்கிற எங்கள் பிதாவே" என்று தான் அழைக்கின்றோம். இறைவனைத் தந்தை என அழைத்தால் நாம் அனைவரும் பிள்ளைகள்தானே? பிள்ளைகள் என்றால் சகோதரர்கள்தானே? அப்படியானால் சகோதரர்களாகிய நமக்குள்ளே ஏன் இந்த உயர்ந்தவர் தாழ்ந்தவர் வேறுபாடு?

உயர்ந்தவர்கள் தாழ்ந்தவர்களைத் தூக்கிவிட நினைப்பது அபூர்வம். படிப்பில், பதவியில், பட்டத்தில், பணத்தில், சாதியில் மற்றவன் தாழ்ந்தே இருக்க வேண்டும் என்பதே உயர்ந்தோரின் விருப்பமெல்லாம். ஆனால் நமது இறைவன் அப்படி நினைப்பவரல்ல. தாழ்ந்தோரை உயர்த்துகின்றவர். இன்று பல தொண்டர் ஸ்தாபனங்கள் தாழ்ந்தோரை உயர்த்தும் பணியில் முனைந்து செயலாற்றுகின்றன.

**சூரிய ஒளி பக்கமே மலர்ந்து நிற்கும் சூரியகாந்தி மலரைப்போல, ஆண்டவரின் இதயம் தாழ்ந்தோரின் பக்கமே உள்ளது.**

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை

– ***(திருப்பாடல். 146:8)*** (ஆ) தாழ்த்தப்பட்டோரை உயர்த்துகின்றார்; நீதிமான்களிடம் அன்பு கொண்டுள்ளார்.

– ***(திருப்பாடல். 145:14)*** (ஆ) தாழ்த்தப்பட்ட யாவரையும் தூக்கிவிடுகின்றார்.

– ***(சீராக்கின் ஞானம். 11:12)*** வேறு சிலர் மந்தமானவர்கள்; பிறர் உதவியால் வாழ்பவர்கள்; உடல் வலிமை இல்லாதவர்கள்; வறுமையில் உழல்பவர்கள். ஆண்டவர் அவர்களைக் கடைக்கண் நோக்குகின்றார்; தாழ்நிலையினின்று அவர்களை உயர்த்தி விடுகிறார்; அவர்களைத் தலைநிமிரச் செய்கிறார்; அவர்களைக் காணும் பலர் வியப்பில் ஆழ்கின்றனர்.

– ***(1 பேதுரு. 5:5–6)*** இளைஞர்களே, நீங்கள் முதியவர்களுக்குப் பணிந்திருங்கள். ஒருவர் மற்றவரோடு பழகும்போது எல்லாரும் மனத்தாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள். ஏனெனில், செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ்நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார். ஆகையால், கடவுளுடைய வல்லமைமிக்க கரத்தின்கீழ் உங்களைத் தாழ்த்துங்கள்; அப்பொழுது அவர் ஏற்ற காலத்தில் உங்களை உயர்த்துவார்.

– ***(லூக்கா. 1:48)*** ஏனெனில் அவர் தம் அடிமையின் தாழ்நிலையைக் கண்ணோக்கினார். இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்..... தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார்.

– ***(யோபு. 22:29)*** ஏனெனில், அவர் செருக்குற்றோரின் ஆணவத்தை அழிக்கின்றார்; தாழ்வாகக் கருதப்பட்டோரை மீட்கின்றார்.

– ***(திருப்பாடல். 149:4)*** ஆண்டவர் தம் மக்கள்மீது விருப்பம் கொள்கின்றார்; தாழ்நிலையிலுள்ள அவர்களுக்கு வெற்றியளித்து மேன்மைப்படுத்துவார்.

– ***(சீராக்கின் ஞானம். 35:17)*** தங்களைத் தாழ்த்துவோரின் வேண்டுதல் முகில்களை ஊடுருவிச் செல்லும்; அது ஆண்டவரை அடையும்வரை அவர்கள் ஆறுதல் அடைவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(மத். 23:12), (லூக் 14: 11), (லூக்க 18:14)*** தம்மைத்தாமே உயர்த்துகிறவர் எவரும் தாழ்த்தப்பெறுவர். தம்மைத்தாமே தாழ்த்துகிறவர் எவரும் உயர்த்தப்பெறுவர்.

– ***(நீதிமொழிகள். 22:4)*** தாழ்மையுள்ளவர்களுக்கும் ஆண்டவரிடம் அச்சம் உடையவர்களுக்கும் கிடைக்கும் பயன் செல்வமும் மேன்மையும் நீடித்த ஆயுளுமாகும்.

– ***(திருப்பாடல். 37:34)*** ஆண்டவருக்காகக் காத்திரு; அவர்தம் வழியைப் பின்பற்று: அப்பொழுது நீ நிலத்தை உடைமையாக்கிக்கொள்ளும்படி அவர் உன்னை உயர்த்துவார்.

– ***(நீதிமொழிகள். 18:12)*** முதலில் வருவது இறுமாப்பு; அதனை அடுத்து வருவது அழிவு; மேன்மை அடையத் தாழ்மையே வழி.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 18

# நமக்காகப் போராடுபவர்

கதை

## இறைவன் துடிக்கின்றார்

ஹிட்லரின் கொடுங்கோலாட்சியின்போது, ஒரு முகாமில் அடைக்கப்பட்டிருந்த கைதிகளுள் இரு முதியவர்களையும், ஒரு குழந்தையையும் தூக்கிலிடும்படி உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

குறிப்பிட்ட நாளில் அந்தத் தூக்குத் தண்டனையைப் பார்க்க அனைத்து கைதிகளும் கூடியிருந்தனர். மேலும் தவறுகள் நடக்காமலிருக்கவே அனைவர் முன்னும் அம்மூவரும் தூக்கிலடப்பட்டனர். உடலின் கனத்தால் முதியவர்கள் இருவரும் உடனே இறந்துவிட்டனர். ஆனால் அந்தக் குழந்தை மட்டும் நீண்ட நேரம் துடிதுடித்து, உயிருக்குப் போராடி, அணுவணுவாக இறந்தது.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த அனைவரும் துடித்துப் போயினர். ஒருவர் தன் அருகில் இருப்பவரைப் பார்த்து, "இச்சின்னஞ்சிறு குழந்தைக்கு இத்தனை கொடூரமா? இதையெல்லாம் பார்த்துக்கொண்டிருக்கும் இறைவன் எங்கே? எதற்காக இறைவன்?" என்றெல்லாம் கேட்டார்.
அருகில் இருந்தவர் அவரைப் பார்த்து, "இதோ அந்தக் குழந்தையில் இறைவன் துடித்துக்கொண்டு துன்பத்தை அனுபவிக்கிறார்" என்றார்.

## சுமக்கும் தந்தை

தந்தையும் மகனும் காட்டு வழியே சென்றுகொண்டிருக்கின்றனர். கல்லும் முள்ளும் நிறைந்த கரடு முரடான பாதை அது. மகன் அழ ஆரம்பித்தான். "அப்பா இனிமேல் என்னால் ஒரு அடிகூட எடுத்துவைக்க முடியாது." என்றான். தந்தையும் அதிகம் களைத்துப்போயிருந்ததால் மகனை தூக்கிச்செல்ல முடியாத நிலை. கல்லும் முள்ளும் நிறைந்த பாதையில் நடக்க மகனைக் கட்டாயப்படுத்தவும் விரும்பவில்லை.

சிறிது நேர ஓய்வுக்குப்பிறகு தந்தை, "மகனே நான் முதலில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்துசெல்கிறேன். என் காலடி பட்ட இடத்தில் நீ கால் வைத்து நடந்துவா. கல்லும் முள்ளும் குத்தாது" என்றார். தந்தை தன்னை மறந்து தன் மகனை மட்டும் நினைத்த நிலையிலே துன்பத்தைத் தாங்கிக்கொண்டு நடந்தார்.

தந்தை "இப்போது எப்படி இருக்கிறது? எனக் கேட்க, "சுகமாய் இருக்கிறது அப்பா" என்றான் மகன்.

**கருத்து**

## வேடிக்கை பார்க்கும் கடவுள் அல்ல

வாழ்க்கை என்பது ஒரு போர்க்களம். அதில் போராடித்தான் ஆகவேண்டும். துன்பங்கள், துயரங்கள் எம்மை வந்து நெருக்கும்போது நாம் சோர்ந்து போகின்றோம். தொடர்ந்து எதிர்நீச்சல்போட முடியாமல் சோர்ந்து போகின்றோம். ஆனால் போராடுவதும் எதிர்நீச்சல்போடுவதும்தான் வாழ்க்கை என்பதை நாம் பலதடவைகளில் மறந்துவிடுகின்றோம்.

"ஒவ்வொரு பூக்களுமே சொல்கிறதே
வாழ்வென்றால் போராடும் போர்க்களமே
ஒவ்வொரு விடியலுமே சொல்கிறதே
இரவென்றால் பகலொன்று வந்திடுமே"

ஆம், வாழ்க்கை ஒரு போர்க்களம்தான். அதுவும் இன்றைய ஈழத்து தமிழ் மண்ணில் இது இன்னும் நிஜமான உண்மை. தடைக்கற்களைப் படிக்கற்களாக்கி வாழ வேண்டிய சூழ்நிலை!

வாழ்வின் போராட்டவேளையில், "நமக்காக யார் உதவி செய்ய முன்வருவார்கள்?" என்று நாம் சிந்திக்கின்றோம்.

நம்மைப் படைத்த கடவுள் நமது துன்பங்களைக் கண்டு வேடிக்கை பார்க்கின்றவரல்ல. அவர் நம்மோடு சேர்ந்து துன்புறுகின்றார், நமக்காக துன்புறுகின்றார். நம் சார்பாகப் போராடுகின்றார்.

இஸ்ராயல் மக்கள் அந்நியர்களோடு போராடியபோதெல்லாம் ஆண்டவரும் இஸ்ராயல் மக்கள் சார்பாகப் போராடினார் என்பதை விவிலியம் நமக்கு தெளிவாகச் சொல்கிறது.

இஸ்ராயல் மக்களுடைய போர்களில் மட்டுமல்ல இன்றைய நமது வாழ்க்கைப் போரிலும் அவர் நமக்காகப் போராடுகின்றார்.

*"போராடும் என் நெஞ்சமே புகலிடம் மறந்தாயோ*
*பாராளும் இயேசு உண்டு பதறாதே மனமே."*

*தமிழ் நேசன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை

**– *(எசாயா. 49:25)*** ஆண்டவர் கூறுவது இதுவே: சிறைப்பட்டோர் வலியோனிடம் இருந்து விடுவிக்கப்படுவர்; கொள்ளைப்பொருள் கொடியவன் கையினின்று மீட்கப்படும்; உன்னை எதிர்த்துப் போராடுபவருடன நானும் போராடுவேன; உன் பிள்ளைகளை விடுவிப்பேன்.

**– *(1 குறிப்பேடு. 19:13)*** மன உறுதியுடன் இரு! நம் மக்களுக்காகவும் கடவுளின் நகர்களுக்காகவும் வலிமையுடன் போராடுவோம். ஆண்டவர் தமக்கு நலமாய்த் தோன்றுவதைச் செய்வாராக!' என்றார்.

**– *(2 குறிப்பேடு. 20:17)*** அங்கே நீங்கள் போரிட வேண்டியதில்லை; அணிவகுத்து நின்றாலே போதும்.
யூதாவே! எருசலேமே! உங்கள் சார்பாக ஆண்டவர் கொள்ளும் வெற்றியைக் காண்பீர்கள்! எனவே? அஞ்சாமலும் நிலைகுலையாமலும் இருங்கள்.....

**– *(விடுதலைப்பயணம். 14:14)*** "ஆண்டவரே உங்களுக்காகப் போரிடுவார்; நீங்கள் அமைதியாயிருங்கள்" என்றார்.

**– *(இணைச்சட்டம். 20:4)*** உங்களுக்காக உங்கள் பகைவருக்கு எதிராகப் போர்புரியவும், உங்களைக் காப்பாற்றவும் உங்கள் கடவுளாகிய ஆண்டவரே உங்களோடு செல்கிறார்.

**– *(சீராக்கின் ஞானம். 4:28)*** இறக்கும்வரை உண்மைக்காகப் போராடு; கடவுளாகிய ஆண்டவர் உனக்காகப் போரிடுவார்.

**– *(இணைச்சட்டம். 1:29, 30)***
ஆனால், நான் உங்களுக்குச் சொன்னேன்; நீங்கள் கலக்கமுற வேண்டாம், அவர்களுக்கு அஞ்சவும் வேண்டாம்.
உங்களுக்கு முன்னே செல்கின்ற உங்கள் கடவுளாகிய ஆண்டவர், நீங்கள் காண எகிப்தில் எல்லாவற்றிலும் அவர் செய்ததுபோலவே, இப்பொழுதும் உங்களுக்காகப் போர்புரிவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(இணைச்சட்டம். 3:22)*** நீ அவர்களுக்கு அஞ்சாதே. ஏனெனில், உங்கள் கடவுளாகிய ஆண்டவர் **உங்களுக்காகப் போர் புரிவார்.**

– ***(தானியேல். 3:17–18)*** (அ) அப்படியே எது நிகழ்ந்தாலும், நாங்கள் வழிபடுகின்ற எங்கள் கடவுள், எரிகின்ற தீச்சூளையினின்று எங்களை மீட்க வல்லவர். அவரே **எங்களை உம் கையினின்றும் விடுவிப்பார்.**

– ***(2 குறிப்பேடு. 20:15)*** (ஆ) கவனமாய்க் கேளுங்கள். ஆண்டவர் உங்களுக்குக் கூறுவது இதுவே; இப்பெரும் படையினரைக் கண்டு நீங்கள் அஞ்சவும் வேண்டாம்; நிலை குலையவும் வேண்டாம். **இப்போர் உங்களுடையது அல்ல, கடவுளுடையது.**

– ***(திருப்பாடல். 35:23)*** என் கடவுளே, கிளர்ந்தெழும்! என் தலைவரே, விழித்தெழுந்து **என் வழக்குக்கு நீதி கிடைக்கச் செய்யும்.**

– ***(திருப்பாடல். 35:1)*** ஆண்டவரே, எனக்கெதிராய் வழக்காடுவோருடன் வழக்காடும்; **என்மீது போர் தொடுப்போரோடு** போர் புரியும்.

– ***(திருப்பாடல். 108:12–13)*** எதிரியை மேற்கொள்ள எங்களுக்கு உதவும்; மனிதர் தரும் உதவியோ வீண். கடவுளின் துணையால் வீரத்துடன் போரிடுவோம்; அவரே நம் **எதிரிகளை மிதித்துவிடுவார்.**



தமிழ் நேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 19

# புடமிட்டுப் பரிசோதிப்பவர்

கதை

## தினகரன் குடும்பத்தில் வீசிய புயல்

இந்தியாவின் புகழ்பெற்ற நற்செய்திப்பணியாளர்களில் ஒருவர் டி. ஜி. எஸ் தினகரன். கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக அவர் நற்செய்திப் பணியாற்றி வருகின்றார். அவருடைய மனைவி ஸ்ரெல்லா தினகரன், மகன் போல் தினகரன், மருமகள் மற்றும் பேரப்பிள்ளைகள் என அனைவருமே நற்செய்தி அறிவிக்கின்றார்கள்.

1986ம் ஆண்டு மே மாதம் 21ந் திகதி, திடீரென்று அவருடைய குடும்பத்தில் ஒரு புயல்! ஆம். அவர்கள் சென்றுகொண்டிருந்த கார் பயங்கரமான விபத்துக்குள்ளாகியது. தினகரனின் அருமை மகள் ஏஞ்சல் அந்தக் கார் விபத்தில் பரிதாபமாக உயிர் இழந்தார். அவர்கள் குடும்பத்தை காரிருள் மூடிக்கொண்டதுபோல உணர்ந்தார்கள்.

"இனி அவ்வளவுதான். எங்களால் ஒன்றும் செய்யமுடியாது என்றுதான் நினைத்தோம்! ஆனால் அந்த நிலைமையிலும், நாங்கள் ஆண்டவரைப் பற்றிக்கொண்டிருந்ததால் அந்த பெருங்காற்றிலிருந்து, ஆண்டவர் எங்களைத் தப்புவித்து, தொடர்ந்து நற்செய்திப் பணியை செய்யும்படியான பலத்தையும், திடனையும் அருளினார். சில நாட்கள் நாம் வெறுமையை அனுபவித்தோம். கண்ணீரோடு காலத்தைக் களித்தோம். ஆனால் ஆண்டவ்ர் கண்ணீரைத் துடைத்தார். எங்களைப் புடமிட்டு பரிசோதித்தார்." என்று தமது சாட்சியத்தை அறிக்கையிட்டார்கள்.

## நான் என்ன குற்றம் செய்தேன்?

வேதகலாபனைக் காலத்திலே திருமறையை மறுதலிக்க மறுத்ததற்காக பீற்றர் என்ற இளைஞனை சிறையிலடைத்தனர். பல மாதங்கள் சிறையில் வேதனைகளை அனுபவித்தான்.

ஒருநாள் அளவுகடந்த வேதனை தாங்கமாட்டாமல் தனது கழுத்தில் அணிந்திருந்த பாடுபட்ட சுரூபத்தைப் பார்த்து, "ஆண்டவரே! நான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வளவு காலம் இந்தச் சிறையில் அவதிப்படும்படி என்ன தீமை செய்தேன்? எனக்கு ஏன் இந்தத் துன்பம்?" என்று ஆண்டவரிடம் முறையிட்டான். பீற்றரின் முறையீட்டைக் கேட்ட ஆண்டவர் இயேசு சொன்னார்,

"பீற்றர்! சிலுவையில் தொங்கிப் பாடுபடும்படி நான் என்ன குற்றம் செய்தேன் சொல்?" என்று கேட்டார்.

அதன்பிறகு பீற்றர் சிந்திக்கத் தொடங்கினார். ஆண்டவரின் பாடுகளைப்பற்றி சிந்தித்தார். பொறுமையின்றி இருந்ததற்காக ஆண்டவரிடம் மன்னிப்புக்கேட்டு மகிழ்ச்சியுடன் துன்பத்தை ஏற்றார். ஆண்டவர் அவரைப் புடமிட்டுப் பரிசோதித்த பின்னர் தனது அன்பை, இரக்கத்தை அவருக்கு நிறைவாகக் காண்பித்தார்.

**கருத்து!**

## பிழிந்தால் தான் பழச்சாறு

ஒரு பழத்தின் சாறு கிடைக்க வேண்டுமென்றால் அந்தப் பழத்தை வெட்டி அதைக் கசக்கி சாறு பிழிய வேண்டும். அப்போதுதான் அப்பழத்தின் சாறு நமக்குக் கிடைக்கும். அதுபோல ஒரு கிறிஸ்தவன் மேன்மை வெளிப்பட வேண்டுமானால் அவன் துன்பத்தில் புடமிடப்படவேண்டும்.

*"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி*
*வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி"*

வேதனையின் விளிம்பில் நின்றுகொண்டு ஒவ்வொரு மனிதனும் பாடும் முகாரி இராகம் இது.

முட்கள் கீறாமல் பூப்பறிக்க முடியாது, மூச்சு அடக்காமல் முத்து எடுக்க முடியாது. துன்பத்தைத் தாங்காமல் இன்பம் அனுபவிக்க முடியாது.

தண்ணீரில் மீன் அழுதால் அதன் கண்ணீரை யார் அறிவார்? இயேசுவின் துன்பத்தை இறைவன் நீக்கவில்லை. மாறாக அத்துன்பத்தை தாங்கிக்கொள்ள சக்தியைக் கொடுத்தார்.

பாலைவனத்தில் சாத்தானின் சோதனைக்குப் பின்னரே வானதூதர்கள் அவருக்கு பணிவிடை புரிந்தனர் (மத்.4:11). கெஸ்தமெனித் தோட்டத்தில் இயேசு துன்பங்களை அனுபவிக்கும்போது, அவருக்கு உதவமட்டுமே வானதூதர்கள் வந்தார்கள். (லூக்.22:43)

பழைய ஏற்பாட்டில் யோசேப்பு ஆண்டவரால் புடமிடப்பட்டு பரிசோதிக்கப்படுகிறார். அவர் எல்லாத் துன்பங்களையும் தாங்கி இறுதியில் வெற்றிவாகை சூடுகின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இறைவார்த்தை

***– (திருப்பாடல். 12:6)*** ஆண்டவரின் வாக்குறுதிகள் கலப்பற்ற வாக்குறுதிகள்; மண் உலையில் தூய்மையாக்கப்பட்ட வெள்ளி போன்றவை; ஏழுமுறை புடமிடப்பட்டவை.

***– (திருப்பாடல். 17:3)*** என் உள்ளத்தை ஆய்ந்தறியும்; இரவு நேரத்தில் எனைச் சந்தித்திடும்; **என்னைப் புடமிட்டுப் பார்த்திடும்;** தீமை எதையும் என்னிடம் காணமாட்டீர்; என் வாய் பிழை செய்யக்கூடாதென உறுதிகொண்டேன்.

***– (திருப்பாடல். 26:2)*** ஆண்டவரே, என்னைச் சோதித்து ஆராய்ந்து பாரும்; என் மனத்தையும் உள்ளத்தையும் **புடமிட்டுப் பாரும்;**

***– (திருப்பாடல். 66:10)*** கடவுளே! எங்களை ஆய்ந்து, வெள்ளியைப் **புடமிடுவதுபோல் புடமிட்டீர்.**

***– (எரேமியா. 9:7)*** எனவே, படைகளின் ஆண்டவர் இவ்வாறு கூறுகின்றார்; நான் அவர்களைப் **புடமிடுவேன்; பரிசோதிப்பேன்;** என் மகளாகிய மக்களுக்கு நான் வேறு என்னதான் செய்யமுடியும்?

***– (செக்கரியா. 13:9)*** இந்த மூன்றில் ஒரு பங்கினரையும் வெள்ளியை நெருப்பில் இட்டுத் தூய்மைப்படுத்துவதுபோல தூய்மைப்படுத்துவேன்; பொன்னைப் புடமிடுவதுபோல் **புடமிடுவேன்;** அவர்கள் என் பெயரை நினைத்து மன்றாடுவார்கள்; நானும் அவர்கள் மன்றாட்டிற்குச் செவி கொடுப்பேன்; இவர்கள் என் மக்கள் என்பேன் நான், 'ஆண்டவர் எங்கள் கடவுள்' என்பார்கள் அவர்கள்.

***– (மலாக்கி. 3:3)*** அவர் புடமிடுபவர் போலும் வெள்ளியைத் தூய்மைப்படுத்துபவர்போலும் அமர்ந்திருப்பார். லேவியின் புதல்வரைத் தூய்மையாக்கிப் பொன், வெள்ளியைப்போல் அவர்களைப **புடமிடுவார்.**

***– (சாலமோனின் ஞானம். 3:6)*** பொன்னை உலையிலிட்டுப் புடமிடுவதுபோல் அவர் அவர்களைப் **புடமிட்டார்;** எரிபலிபோல் அவர்களை ஏற்றுக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


– ***(சீராக்கின் ஞானம். 2:5)*** நெருப்பில் பொன் புடமிடப்படுகிறது; ஏற்புடைய மனிதர் மானக்கேடு எனும் உலையில் சோதித்துப் பார்க்கப்படுகின்றனர்.

– ***(எசாயா. 48:10)*** நான் உன்னைப் புடமிட்டேன்; ஆனால் வெள்ளியைப் போலல்ல; துன்பம் எனும் உலை வழியாய் உன்னைத் தேர்ந்தெடுத்தேன்.

– ***(தானியேல். 11:35)*** ஞானிகள் சிலர் கொல்லப்படுவர். இதன்மூலம் மக்கள் புடம்போடப்பட்டு தூய்மைப்படுத்தப்பட்டு வெண்மையாக்கப்பெறுவர். இறுதியாக, குறிக்கப்பட்ட முடிவு காலம் வரும்.

– ***(தானியேல். 12:10)*** பலர் தம்மைத் தூய்மைப்படுத்திக்கொள்வர்: புடம்போடப்படுவர்; தம்மை வெண்மையாக்கிக்கொள்வர்; பொல்லாதவர் தீய வழியில் நடப்பர்; அவர்கள் அதை உணரவும் மாட்டார்கள்; ஆனால் ஞானிகள் உணர்ந்துகொள்வார்கள்.

---






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கதை

# துன்பங்களைத் துடைப்பவர்

## துன்பங்கள் மத்தியில் தளராமல் பணி

கிழக்கு தீமோர், இயற்கை வளம் நிறைந்த அழகிய தீவு. இதில் கிறிஸ்தவர்கள் பெருமளவில் வாழ்கின்றனர். இது ஒரு தனிநாடாக விளங்கியது. 1975 ஆம் ஆண்டு இந்தோனேசியா கிழக்கு தீமோர்மீது படையெடுத்து, அதைத் தன் நாட்டோடு இணைத்துக்கொண்டது. அன்றிலிருந்து கிழக்குத் தீமோர் மக்கள் தங்கள் விடுதலைக்காகப் போராடி வருகின்றனர்.

இந்தப் போராட்டத்தில், தன்னையும் இணைத்துக்கொண்டு முழு மூச்சுடன் போராடி வருகிறார் ஆயர் கார்லோஸ் பேலோ. இப்பணிக்காக இறைவன் தன்னைச் சிறப்பாக அழைத்திருப்பதை நன்கு உணர்ந்தார்.

இந்தோனேசியா அரசின் கடுமையான எச்சரிக்கைகளையும், இராணுவ நடவடிக்கைகளையும், இன்னும் பலவிதமான அடக்குமுறைகளையும் கண்டு ஆயர் பேலோ அஞ்சவில்லை. பல துன்பங்கள் ஏற்பட்ட போதும், மனந்தளராமல், அமைதி வழியில் விடுதலைபெற மக்களை வழிநடத்தி வருகின்றார்.

அவரது அசைக்க முடியாத நம்பிக்கையையும், துன்பங்களைத் தாங்கும் உறுதியான மனத்திடனையும், மக்களை வழிநடத்திச்செல்லும் ஆற்றலையும் பாராட்டி, அவருக்கு 1996ஆம் ஆண்டின் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட்டது.

நோபல் பரிசு அறிவிப்பு வெளிவந்தவுடன், ஆயர் பேலோ நிருபர்களுக்கு அளித்த பேட்டியில்,
“இப்பரிசு மக்கள் நடத்தும் அறப்போராட்டத்திற்குக் கிடைத்துள்ள பரிசு. மக்களின் விடியல் அண்மித்துவிட்டது. இறைவன்மீது நான் கொண்டுள்ள உறுதியான நம்பிக்கைதான், துன்பங்கள் நடுவே தளரா உள்ளத்துடன் பணியாற்ற எனக்கு ஆற்றல் அளிக்கிறது” என்று கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்து

## அழுகைதான் வாழ்க்கையா?

"பிறக்கும்போதும் அழுகின்றான், இறக்கும்போதும் அழுகின்றான் ஒருநாள் ஏனும் கவலை இல்லாமல் சிரிக்க மறந்தாய் மானிடனே...!"

துன்பங்களே இல்லாத மனித வாழ்க்கை ஒரு கானல் நீர். ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருப்பதுபோல மனித வாழ்க்கைக்கு இன்பமும் துன்பமும் இரு பக்கங்கள். இவை இரண்டும் பதிந்த 'மனித நாணயம்' இருந்தால்தான் 'மனநிறைவை' வாங்க முடியும். கோதுமை மணி மண்ணில் விழுந்து மடிந்தால்தான் பலனைத் தரமுடியும்.

உண்மையில் நம் இறைவன் அன்பானவர். அதனால்தான் அவர் நம் துன்பங்களையும் பகிர்ந்துகொள்கிறார். உண்மையான அன்பு இன்பத்தை அனுபவிப்பதில் மட்டுமல்லாமல், துன்பத்தைப் பகிர்ந்து கொள்வதிலும் அடங்கியிருக்கிறது.

அதனால்தான் இறைவன் தன் அன்பை முழுமையாக வெளிப்படுத்த மனிதனாகப் பிறந்து, பாவம் தவிர மற்ற அனைத்திலும் நம்மைப் போல மனிதனாக வாழ்ந்தார். மனிதனுடைய இன்பதுன்பங்களைப் பகிர்ந்துகொண்டார். துன்பத்தைப் பகிர்ந்துகொண்டதோடு, அத்துன்பத்திலிருந்து விடுதலைபெற வழியைக் காட்டி இறுதியில் அத்துன்பத்தையும் வென்று உயிர்த்தார்.

துன்பப்படுவோருக்கு இரக்கம் காட்டினார். நயின் நகரத்துக் கைம்பெண்ணின் மகனுக்கு உயிரளித்தார் (லூக்.7:11-16). விபச்சாரத்தில் பிடிபட்ட பெண்ணை ஆபத்திலிருந்து காப்பாற்றி மறுவாழ்வு தந்தார் (யோவா.8:1:11).

துன்பப்படுவோருக்கு தன்னால் இயன்ற உதவிகளைச் செய்தார்: குருடருக்குப் பார்வை தந்தார். (லூக்.18:5-43) நோயாளிகளைக் குணப்படுத்தினார். (லூக்.4:40)
தானே துன்பத்தை அனுபவித்தார். தன் சொந்த ஊரிலே தன் சொந்த மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டார் (லூக்கா 4:16-30). லாசர் இறந்தபோது அழுதார் (யோவா.11:1-16).

ஓர் ஊரில் ஒரு தாராள மனம் படைத்த பணக்காரர் ஒருநாள், "காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை என் அலுவலகத்திற்கு தாங்கள்பட்ட கடன்களுக்கான சான்றுகளைக் காண்பித்தால் அவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு ரூபாய் எத்தனை பேரிடம் கடன்பட்டிருந்தோம் என்பதை முழுவதுமாக அடைக்க பண உதவி செய்யப்படும்" என விளம்பரம் செய்தார்.

மறுநாள் அவர் தனது அலுவலகத்தினை திறந்து, வைத்துக் காத்திருந்தார். மணி பதினொன்றரை எட்டிவிட்டது. மக்கள் விளம்பரத்தை படித்துவிட்டு, நம்பமாட்டாமல் சிரித்துக்கொண்டே சென்றனர்.

இறுதியாக ஒருவர் மெதுவாக எட்டிப் பார்த்து, "நீங்கள் உண்மையாகவே என் கடன்களை எல்லாம் அடைத்துவிடுவீர்களா?" எனக் கேட்டார். அதற்கு அந்த பணக்காரர் "நீங்கள் உங்கள் கடனுக்கான பத்திரங்கள் மற்றும் ஆதாரங்களைக் காட்டினால் எல்லா பணத்தையும் தந்துவிடுகின்றேன்" என்றார். வந்தவர் தான்பட்ட கடன் பற்றிய விவரங்களை அவரிடம் காண்பித்து எல்லா கடன்களையும் அடைப்பதற்குத் தேவையான பணத்தைப் பெற்றுக்கொண்டு சென்றார். செய்தியைக் கேள்வியுற்று, மற்றவர்கள் வந்தபோது, காலம் கடந்துவிட்டது. கதவும் அடைக்கப்பட்டுவிட்டது.

ஆம், ஆண்டவர் நமது துன்பங்களை துடைக்கத் தயாராக இருக்கின்றார். ஆனால் நாம்தான் அவரை அண்டிச் செல்லாமல் இருக்கின்றோம்.



## இறைவார்த்தை

– ***(திருப்பாடல். 94:12–13)*** ஆண்டவரே! நீர் கண்டித்து உம் திருச்சட்டத்தைப் பயிற்றுவிக்கும் மனிதர் பேறுபெற்றோர்; பொல்லார்க்குக் குழி வெட்டப்படும்வரை, அவர்களின் துன்ப நாள்களில் அவர்களுக்கு அமைதி அளிப்பீர்.

– ***(திருப்பாடல். 77:2)*** (அ) என் துன்ப நாளில் என் தலைவரை நாடினேன்; இரவில் அயராது கைகூப்பினேன்.

– ***(திருப்பாடல். 81:7)*** துன்ப வேளையில் என்னை நோக்கி மன்றாடினீர்கள்; நான் உங்களை விடுவித்தேன; இடிமுழங்கும் மறைவிடத்தினின்று நான் உங்களுக்கு மறுமொழி கூறினேன்; மெரிபாவின் நீரூற்று அருகில் உங்களைச் சோதித்தேன்.

– ***(திருப்பாடல். 86:7)*** என் துன்ப நாளில் உம்மை நோக்கி மன்றாடுகின்றேன்; நீரும் எனக்குப் பதிலளிப்பீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– *(திருப்பாடல். 107:6)* தம் நெருக்கடியில் ஆண்டவரைக் கூவியழைத்தனர்; அவர்களுக்குற்ற **துன்பங்களிலிருந்து அவர்களை அவர் விடுவித்தார்.**

– *(திருப்பாடல். 50:15)* **துன்ப வேளையில் என்னைக் கூப்பிடுங்கள்; உங்களைக் காத்திடுவேன்;** அப்போது, நீங்கள் என்னை மேன்மைப்படுத்துவீர்கள்.

– *(எசாயா. 63:9)* **துன்பங்கள் அனைத்திலும் அவர்களின் மீட்பர் ஆனார்;** தூதரோ வானதூதரோ அல்ல, அவரே நேரடியாக அவர்களை விடுவித்தார்; தம் அன்பினாலும் இரக்கத்தினாலும் அவர்களை மீட்டார்; பண்டைய நாள்கள் அனைத்திலும் அவர்களைத் தூக்கிச் சுமந்தார்.


– *(நாகூம். 1:7)* ஆண்டவர் நல்லவர்; **துன்பநாளில் அவர் காவலரண் ஆவார்;** அவரிடம் அடைக்கலம் புகுந்தோரை அவர் அறிவார்.

– *(நாகூம். 1:12)* (ஆ) உன்னை நான் இதுவரை துன்புறுத்தியிருந்தாலும் இனிமேல் **உன்னைத் துன்புறுத்தமாட்டேன்.**

– *(திருப்பாடல். 18:6)* என் நெருக்கடிவேளையில் நான் ஆண்டவரிடம் மன்றாடினேன்; என் கடவுளை நோக்கிக் கதறினேன்; தமது கோவிலினின்று **அவர் என் குரலைக் கேட்டார்;** என் கதறல் அவர் செவிகளுக்கு எட்டியது.

– *(திருப்பாடல். 37:39)* நேர்மையாளருக்கு மீட்பு ஆண்டவரிடமிருந்து வருகின்றது, **நெருக்கடியான நேரத்தில்** அவர்களுக்கு வலிமையும் அவரே.

– *(திருப்பாடல். 46:1)* கடவுள் நமக்கு அடைக்கலமும் ஆற்றலுமாய் உள்ளார்; இடுக்கணுற்ற வேளைகளில் நமக்கு உற்ற துணையும் அவரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 21

# துணம் அளிப்பவர்

## கதை

ஒரு மனிதர் பெயரளவில் கிறிஸ்தவராக வாழ்ந்து வந்தார்! அவர் திருவிவிலயத்தைத் தொட்டதே கிடையாது. ஒரு நாள் அவர் அதிக சுகவீனமடைந்தார். குடும்பத்தார் அவரைக் கொண்டுபோய், மருத்துவமனையில் சேர்த்தார்கள். மருத்துவர் எல்லா பரிசோதனைகளையும் செய்துவிட்டு, “இவர் அதிக நாட்கள் உயிரோடு இருக்கமாட்டார்” என்று கைவிட்டுவிட்டார்கள்.

அப்பொழுது அவர் மனமுடைந்த நிலையில், என்ன செய்வதென்று தெரியாமல், “ஐயோ, நான் இறந்து போவேன்போல் இருக்கிறதே’ என்று கலங்கினார். ஒருநாள் அவர் தனிமையில் மருத்துவமனையில் இருக்கும்பொழுது, தனக்கு அருகில் இருந்த திருவிவிலியத்தைக் கையில் எடுத்து, பக்கங்களைப் புரட்டினார்! அப்பொழுது அவரது கண்களில் நீதிமொழிகள் 4:20 -22 பளிச்சிட்டது.

“பிள்ளாய், என் வார்த்தைகளுக்கு செவிகொடு. நான் சொல்வதைக் கவனி. உன் கவனத்தில் நின்று அவை விலகாதிருக்கட்டும். உன் உள்ளத்தில் அவற்றைப் பதித்துவை. அவற்றைத் தேடிப் பெறுவோருக்கு அவை உயரளிக்கும். அவர்களுக்கு உடல் நலமும் தரும்.”

இந்த வசனங்களை வாசித்தவுடன், அவருக்கு வேடிக்கையாக இருந்தது. மேலும் மேலும் வாஞ்சையோடு விவிலியத்தை வாசித்தார். அப்பொழுதுதான் வேதத்தின் மேன்மையை உணர்ந்தார். அதன் பின்பு, எப்பொழுதும் விவிலியமும் கையுமாக வாசித்துக்கொண்டேயிருப்பார். ஆண்டவர் இறைவார்த்தை மூலமாக அவரோடு பேசினார்.

நாட்கள் நகர்ந்தன. மருத்துவர்கள் மறுபடியும் அவரைப் பரிசோதித்துப் பார்த்துவிட்டு ஆச்சரியமடைந்தனர். “இவர் இறந்துவிடுவார் என்றல்லவா எண்ணினோம். ஆனால், இவரை உடனே வீட்டிற்கு அனுப்புகின்ற அளவிற்கு சுகமாயிருக்கிறாரே! “என்ன மருந்து சாப்பிட்டீர்கள்? நாங்கள் கொடுத்தது தவிர, வேறு ஏதாவது மருந்து சாப்பிட்டீர்களா?” என்று கேட்டார்கள். ‘ஆம்’ என்று சொல்லி திருவிவிலியத்தை எடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காண்பித்து, "இதுதான் நான் சாப்பிட்ட மருந்து" என்றார். குணமாக்க முடியாது என்று மருத்துவர்கள் கைவிட்ட உடலுக்கு உயிருள்ள இறைவார்த்தை முழுமையான ஆரோக்கியத்தைக் கொடுத்தது.

**கருத்து**

## நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்று நம் மூதாதையர் கூறிச்சென்ற வார்த்தையில்தான் எத்தனை உண்மைகள் ஒழிந்து கிடக்கின்றன!


மனித வாழ்வை அலைக்களிக்கும் தீமைகளில் ஒன்று நோய்! மனிதனுக்கு 4444 நோய்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது.

"காய்ச்சலும் தலையிடியும் தனக்கு தனக்கென வந்தால்தான் தெரியும்" என்பார்கள். சிறிய வருத்தமாக இருந்தாலும் பெரிய வருத்தமாக இருந்தாலும் எல்லாமே வேதனை தரும் அனுபவமாகவே இருக்கின்றது. முன்பு இல்லாத புதிய புதிய ஆட்கொல்லி நோய்கள் நாம் வாழும் இக்காலத்தில் மக்களின் உயிரை வகைதொகையின்றி உறிஞ்சிக் குடிக்கும் நிலையை இன்றைய உலகில் காண்கின்றோம்.

அறிவியலில் உச்சாணிக் கொப்பில் நிற்பதாக உரக்கக் கத்தும் மனிதன், எத்தனையோ உயிர்க் கொல்லி நோய்களுக்கு இன்னும் மருந்து கண்டுபிடிக்கவில்லை என்பது கவலையான செய்தி.

எந்தத் திறமையான மருத்துவரும்கூட ஒரு கட்டத்தில், "என்னால் செய்யக்கூடியதைச் செய்துவிட்டேன். இனி இறைவன்தான் துணை" என்றுதான் கூறுகின்றார்.

இறைவன் தன்னைக் "குணமாக்கும் ஆண்டவர்" என விவிலியத்தில் வெளிப்படுத்துகின்றார்.



**இறைவார்த்தை**

– ***(விடுதலைப் பயணம். 15:26)*** மேலும் அவர், "உன் கடவுளாகிய ஆண்டவரின் குரலுக்கு நீ அக்கறையுடன் செவி சாய்த்து, அவர் பார்வையில் நலமாகத் தோன்றுவதைச் செய்து, அவர் கட்டளைகளைப் பின்பற்றி, அவர் சட்டங்கள் அனைத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைக்கொண்டால், நான் எகிப்திற்கு வரச்செய்த கொள்ளை நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன். ஏனெனில் நானே **உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்**" என்றார்.

– ***(விடுதலைப் பயணம். 23:25)*** நீ உன் கடவுளாகிய ஆண்டவரை வழிபடவேண்டும். அவர் உன் உணவு தண்ணீர் இவற்றின்மேல் ஆசி வழங்குவார். அவர் உன் நடுவினின்று **நோயை அகற்றிவிடுவார்.**

– ***(திருப்பாடல். 107:20)*** தம் வார்த்தையை அவர் அனுப்பி **அவர்களைக் குணப்படுத்தினார்;** அழிவினின்று அவர்களை விடுவித்தார்.

– ***(சாலமோனின் ஞானம். 16:12)*** பச்சிலையோ களிம்போ அவர்களுக்கு நலம் அளிக்கவில்லை; ஆனால், ஆண்டவரே, உமது **சொல்லே எல்லா மனிதர்க்கும் நலம் அளிக்கிறது.**

– ***(மத்தேயு. 8:8)*** (இ) ஒரு வார்த்தை மட்டும் சொல்லும்; **என் பையன் நலமடைவான்.**

– ***(லூக்கா. 5:17)*** (இ) **பிணி தீர்ப்பதற்கான ஆண்டவரின்** வல்லமையை அவர் (இயேசு) கொண்டிருந்தார்.

– ***(மத்தேயு. 8:16)*** பேய் பிடித்த பலரை மாலை வேளையில் இயேசுவிடம் கொண்டுவந்தனர். அவர் ஒரு வார்த்தை சொல்ல அசுத்த ஆவிகள் ஓடிப்போயின. மேலும் எல்லா **நோயாளர்களையும் அவர்** குணமாக்கினார்.

– ***(மத்தேயு. 8:17)*** இவ்வாறு, "அவர் நம் **பிணிகளைத் தாங்கிக்** கொண்டார்; நம் துன்பங்களைச் சுமந்துகொண்டர்" என்று இறைவாக்கினர் எசாயா உரைத்தது நிறைவேறியது.

– ***(திருப்பாடல். 4:10)*** நாசரேத்து இயேசுவின் பெயரால் இவர் நலமடைந்து நம்முடன் நிற்கிறார். இது உங்கள் எல்லாருக்கும், இஸ்ரயேல் மக்கள் அனைவருக்கும் தெரிந்திருக்கட்டும்.

– ***(இணைச்சட்டம். 7:15)*** (அ) எல்லா நோய்களும் உங்களிடமிருந்து **அகலும்படி ஆண்டவர் செய்வார்.**

– ***(எசாயா. 53:5)*** அவரோ நம் குற்றங்களுக்காகக் காயமடைந்தார்; நம் தீச்செயல்களுக்காக நொறுக்கப்பட்டார்; நமக்கு நிறைவாழ்வை அளிக்க அவர் தண்டிக்கப்பட்டார்; **அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***– (1 பேதுரு. 2:24)*** சிலுவையின்மீது தம் உடலில் நம் பாவங்களை அவரே சுமந்தார். நாம் பாவங்களுக்கு இறந்து, நீதிக்காக வாழ்வதற்கே இவ்வாறு செய்தார். **அவர்தம் காயங்களால் நீங்கள் குணமடைந்துள்ளீர்கள்.**


***– (சாலமோனின் ஞானம். 16:10)*** ஆனால் நச்சுப் பாம்புகளின் பற்களால்கூட உம் மக்களை வீழ்த்த முடியவில்லை. **உமது இரக்கம் அவர்களுக்குத் துணைநின்று நலம் அளித்தது.**

***– (திருப்பாடல். 103:3)*** அவர் உன் குற்றங்களையெல்லாம் மன்னிக்கின்றார்; **உன் நோய்களையெல்லாம் குணமாக்குகின்றார்.**

***– (சீராக்கின் ஞானம். 38:9)*** குழந்தாய், நீ நோயுற்றிருக்கும்போது கவலையின்றி இராதே; ஆண்டவரிடம் மன்றாடு. அவர் உனக்கு நலம் அருள்வார்.

***– (யாக்கோபு. 5:15)*** நம்பிக்கையோடு இறைவனிடம் வேண்டும்போது நோயுற்றவர் குணமாவார். ஆண்டவர் அவரை எழுப்பி விடுவார்.

***– (திருப்பாடல். 41:1,3)*** எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறுபெற்றவர்; துன்பநாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார். **படுக்கையில் அவர் நோயுற்றுக் கிடக்கையில் ஆண்டவர் அவருக்குத் துணைசெய்வார்; நோய் நீங்கிப் படுக்கையினின்று அவர் எழும்பும்படிச் செய்வார்.**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 22

# துயரத்தை மகிழ்ச்சியாக்குபவர்

கதை

## கறுப்புப் புள்ளியா? கலைவண்ண ஓவியமா?

ஒரு இளம்பெண் தான் மிகவும் விரும்பி நெய்த வெண்ணிறக் கைக்குட்டை ஒன்றை விலைமதிப்பற்ற உயரிய பொருளாக வைத்துக்கொண்டு அதன் அழகையும், வெண்மையையும், அடிக்கடி இரசித்து பெருமைப்பட்டுக்கொண்டாள். ஒரு நாள் அந்த வெண்ணிறக் கைக்குட்டையில் ஒரு துளி கறுப்பு மை புள்ளியாகப் பதிந்துவிட்டது. அதைப் பார்த்து மனம் பொறுக்க முடியாமல் அழுது புலம்பிக்கொண்டிருந்தாள். "என் காதலனுக்காக நெய்த இந்தக் கைக்குட்டை பாழாகிவிட்டதே" என்று மிகவும் மனம் வருந்தினாள்.

அவளுடைய காதலன் ஓர் ஓவியன். அவளின் வருத்தத்தைத் தணிக்க அக்கைக்குட்டையை எடுத்துச்சென்று அக்கறுப்புப் புள்ளியை மையமாகக்கொண்ட ஒரு அழகிய ஓவியத்தை அதில் வரைந்து அதை அந்தப் பெண்ணிடம் கொடுத்தான்.

என்ன ஆச்சரியம்! அவளால் அக்கைக்குட்டையில் பதிந்துள்ள ஓவியத்தின் அழகையும், அந்தக் கறுப்புமைப் புள்ளியால் அக்கைக்குட்டைக்குக் கிடைத்த அழகையும் கண்டு பேரானந்தம் அடைந்தாள். முன்பு வெண்ணிறத்தை மட்டுமே இரசித்துக்கொண்டிருந்த அவள், இப்போது பல வண்ணங்களையும் இரசிக்க ஆரம்பித்துவிட்டாள்.

## கூரை நெருப்பா? கலங்கரை விளக்கா?

போருக்குச் சென்ற தங்கள் கணவர்கள் வருகிறார்கள் என்ற செய்தி கேட்டு அந்த ஊர்ப் பெண்கள் குழந்தைகளுடன் துறைமுகத்தில் காத்துக்கொண்டிருக்கின்றனர். தன்னுடைய கணவன் உயிருடன் திரும்பி வருவாரா? அல்லது போரில் இறந்துவிட்டாரா? என்ற எண்ணம் அப்பெண்களின் மனதை வாட்டுகிறது.

அதேநேரத்தில் எதிர்பாராதவிதமாக அந்த ஊர் முழுவதும் தீப்பிடித்து எரிகிறது. துறைமுகத்தில் இருந்த பெண்கள் அனைவரும் ஓடிச்சென்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடித் தீயை அணைத்துக்கொண்டிருக்கையில் கப்பல் வந்துவிட்டது என்ற செய்தியைக் கேட்டு அனைவரும் துறைமுகத்திற்கு ஓடுகின்றனர்.

கூட்டத்தின் நடுவே தன் கணவனைத் தேடிச் சென்ற பாத்திமா தன் கணவனைக் கண்டதும் கட்டி அணைத்து முத்தமிட்டு ஆனந்தம் அடைகின்றாள். பின்னர் உரையாடும்போது, சற்று முன் நடந்த தீ விபத்தால் தங்கள் வீடும் பொருட்களும் சொத்துக்களும் அழிந்து விட்டன என்று தன் கணவனிடம் கூறுகின்றாள். அதற்கு அவளின் கணவன் "கண்ணே... நடுக்கடலில் நாங்கள் தவித்துக்கொண்டிருக்கும் போது அந்த நெருப்புதான் எங்களுக்கு கலங்கரைத் தீபமாக இருந்து வழிகாட்டியது' என்று கூறினான்.

**கருத்து**

## வாழ்வுக்கான தாகம்

துன்பமான நேரங்கள் வாழ்க்கையை உலுக்கும்போது பலவீனமான மனிதர்கள் கீழ்நிலைக்குத் தள்ளப்பட்டு மடிந்துவிடுகிறார்கள். ஓரளவு சமாளிப்பவர்கள் நடுவில் சிக்கிக்கொள்கிறார்கள். துன்பங்களை எதிர்நோக்கும் சக்தியும், உறுதியும் உள்ளவர்கள் மட்டுமே உயர்ந்த இடத்தை அடைகிறார்கள்.

எதையாவது நீங்கள் பெறவேண்டுமென்றால் எதையாவது கொடுத்துத்தான் ஆகவேண்டும். சிரிக்கும்போதே முட்டாளாகப் புரிந்துகொள்ளப்படும் ஆபத்து இருக்கிறது. காதலிக்கும்போது காதலிக்கப்படாமல் இருக்கும் ஆபத்து இருக்கிறது. முயற்சிக்கும்போதே தோற்றுபோகிற ஆபத்து இருக்கிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டத்திலும் 'சாவு' என்ற ஆபத்து இருந்துகொண்டே இருக்கிறது.

இவைபோன்ற பல அன்றாட நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது அல்லது அத்துன்பங்களை நாமே அனுபவிக்கும்போது பெரும்பாலான மக்களின் மனதில் 'எங்கே இறைவன்?' என்ற கேள்விதான் எழுகிறது.

இறைவன் அன்பானவர், கருணையுள்ளவர் என்றெல்லாம் கூறினால் இக்கொடூரமான துன்பங்கள் ஏன் நிகழ்கின்றன? இத்துன்பங்களை மேலோட்டமாக கவனியாமல் ஆழ்ந்து அதன் வேர்க்காரணங்களை ஆராய்ந்து பார்ப்போமானால் பெரும்பாலான துன்பங்களுக்கு மனிதனேதான் காரணம்.

**உண்மையில் ஆழ்ந்து சிந்திப்போமானால் கல்லானது கடவுளா? அல்லது மனிதர்களா? என்பது புலனாகும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயேசுவின் பாடுகள் மரணம் உயிர்ப்பு நமக்கு எதைச் சொல்கிறது? பாடுகளோடு, கொடூர மரணத்தோடு யேசுவின் வாழ்வு முற்றுப்பெற்று விடவில்லை. அவர் மரணத்தை வென்று உயிர்த்தார். இயேசுவைப் பொறுத்தவரை மரணம் முடிவல்ல. அது அவருடைய மகிமையின் ஆரம்பம். இயேசுவின் பிள்ளைகளாகிய நமக்கும் துன்பங்கள் தம்மிலேயே முடிவானவை அல்ல.
துயரங்களை மகிழ்ச்சியாக மாற்றுபவர், தீமைகளை நன்மைகளாக மாற்றுபவர் இதோ நம்மத்தியில் இருக்கிறார். வாருங்கள் அவருடைய வார்த்தையில் இருந்து வாழ்வைப் பெறுவோம்.



## இறைவார்த்தை

– ***(2 கொரிந்தியர். 4:10)*** இயேசுவின் வாழ்வே எங்கள் உடலில் வெளிப்படுமாறு நாங்கள் எங்கு சென்றாலும் அவருடைய சாவுக்குரிய **துன்பங்களை எங்கள் உடலில் சுமந்து செல்கிறோம.**

– ***(கொலோசையர். 1:24)*** இப்பொழுது, உங்கள் பொருட்டுத் துன்புறுவதில் நான் மகிழ்ச்சிகொள்கிறேன். கிறிஸ்து தம் உடலாகிய திருச்சபைக்காக வேதனையுற்றார். அவர் மேலும் படவேண்டிய வேதனையை **என் உடலில் ஏற்று நிறைவுசெய்கிறேன்.**

– ***(எபேசியர். 2:14)*** ஏனெனில் அவரே நமக்கு அமைதி அருள்பவர். அவரே இரண்டு இனத்தவரையும் பிரித்து நின்ற பகைமை என்னும் சுவரை, **தமது உடலில் ஏற்ற துன்பத்தின் வழியாயத்** தகர்த்தெறிந்து, அவர்களை ஒன்றுபடுத்தினார்.

– ***(எசாயா. 38:17)*** இதோ, **என் கசப்புமிகு அனுபவத்தை நலமாக மாற்றினீர்;** மனங்கனிந்து அழிவின் குழியிலிருந்து என் உயிரைக் காத்தீர்; என் பாவங்கள் அனைத்தையும் உம் முதுகுக்குப் பின்னால் எறிந்து விட்டீர்.

– ***(யோவான். 16:20)*** உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்: நீங்கள் அழுவீர்கள், புலம்புவீர்கள்; அப்போது உலகம் மகிழும். **நீங்கள் துயருறுவீர்கள்; ஆனால் உங்கள் துயரம் மகிழ்ச்சியாக மாறும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– *(எரேமியா. 31:13)*** அவர்களுடைய அழுகையை நான் மகிழ்ச்சியாக மாற்றுவேன்; அவர்களுக்கு ஆறுதல் அளிப்பேன்; **துன்பத்திற்குப் பதிலாக இன்பத்தை அருள்வேன்.**

**– *(எசாயா. 30:20)*** என் தலைவராகிய உங்கள் போதகர் உங்களுக்கு துன்பமெனும் அப்பத்தையும் ஒடுக்குதலெனும் நீரையும் கொடுத்திருந்தாலும், **இனித் தம்மை மறைத்துக்கொள்ள மாட்டார்;** உங்கள் போதகரை நீங்கள் கண்ணால் காண்பீர்கள்.

**– *(திருப்பாடல். 119:71)*** எனக்குத் துன்பம் விளைந்தது **என் நன்மைக்காகவே;** அதனால், உம் விதிமுறைகளை நான் கற்றுக்கொண்டேன்.

**– *(2 கொரிந்தியர் 4:15)*** இவையனைத்தும் **உங்கள் நன்மைக்கே** நிகழ்கின்றன. இறையருள் பெறுவோரின் தொகை பெருகப்பெருக அவர்கள் கடவுளுக்குச் செலுத்தும் நன்றியும் பெருகும். இதனால் கடவுள் போற்றிப் புகழப்படுவார்.

**– *(உரோமையர். 8:18)*** இக்காலத்தில் நாம் படும் துன்பங்கள் எதிர்காலத்தில் நமக்காக வெளிப்படப்போகிற **மாட்சியோடு ஒப்பிடத் தகுதியற்றவை** என நான் எண்ணுகிறேன்.

**– *(2 கொரிந்தியர். 4:17)*** நாம் அடையும் இன்னல்கள் மிக எளிதில் தாங்கக்கூடியவை. அவை சிறிது காலம்தான் **நீடிக்கும்.** ஆனால் அவை ஈடுஇணையற்ற மாட்சியை விளைவிக்கின்றன. அம்மாட்சி என்றென்றும் நிலைத்திருக்கும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 23

# ஒடுக்கப்பட்டவரை விடுவிப்பவர்

கதை

## அசடு வழிந்த முதலாளி

கடவுள்மீது அசையாத நம்பிக்கைகொண்ட ஒரு ஏழைப் பாட்டியின் வீட்டருகில் கடவுளை நம்பாத நாத்திக முதலாளி ஒருவர் இருந்தார். செபம்தான் பாட்டியின் வாழ்வு. அந்த நாத்திக முதலாளியோ பாட்டியை ஏளனம் செய்துவந்தார்.

ஒருநாள் பாட்டி "கடவுளே! எனக்கு உணவில்லை. உணவு தாரும்" என உரக்கச் செபித்தாள். இதைக் கேட்ட முதலாளி ஒரு ரொட்டியைப் பாட்டி வீட்டுக் கதவருகில் வைத்துவிட்டு ஒளிந்துகொண்டார். கதவைத் திறந்த பாட்டி ரொட்டியைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தார். அதை எடுத்து இறைவனுக்கு நன்றி கூறினார்.

இதைப் பார்த்துப் பொறுக்க முடியாத முதலாளி, "ஏ கிழட்டுப் பிணமே! உன் கடவுளல்ல. நான்தான் ரொட்டியை உன் கதவருகில் வைத்தேன்" எனக் கத்தினான். பாட்டி அமைதியாக அவனிடம், "கடவுளுக்கு நன்றி சொல்வோம். ஏனெனில் ஏழைகளின் செபத்திற்கு பதில் சொல்ல கடவுள் இப்படிப்பட்ட மனிதர்களைக்கூட பயன்படுத்துகிறார்" என்றார். முதலாளி அசடு வழிந்தார்.

## கருத்து

## வாழ்வுக்கான தாகம்

இன்றைய உலகில் ஒடுக்கப்பட்ட, அடக்கப்பட்ட, நசுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளை வென்றெடுக்கப் போராட்டாங்களை நடாத்துகின்றனர். அகிம்சை வழியிலும் போராடுகின்றனர். வேலை நிறுத்தப் போராட்டம், ஒத்துழையாமைப் போராட்டம், பணிப் புறக்கணிப்புப் போராட்டம் என அகிம்சைப் போராட்ட வடிவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அடக்குமுறையாளர்கள் இந்த அகிம்சைப் போராட்டங்களை அங்கீகரிக்காமல் தொடர்ந்தும் ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடும்போது வன்முறைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராட்டங்களைக் கையிலெடுக்க ஒடுக்கப்படுவோர் பின்னிற்பதில்லை. இதற்கு நமது நாட்டு நிலையும் இன்னும் உலகின் பல்வேறு இடங்களில் நடைபெறும் உரிமைகளுக்கான வன்முறைப் போராட்டங்களும் சான்று பகர்கின்றன.

இனக்குழுக்கள், சமூகக்குழுக்கள், பெண்கள், சிறுவர்கள் மட்டுமல்ல தனிமனிதர்களும்கூட மற்றவர்களால் அறியப்படாத நிலையில் ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாகி பல்வேறு நிலைகளில் அடிமைப்பட்டுக்கிடக்கின்றனர். இவர்களை விடுவிக்கின்றவராக, இவர்களின் கட்டுக்களை அவிழ்க்கின்றவராக நம் ஆண்டவர் இருக்கின்றார்.

தன் சகோதரர்களாலேயே யோசேப்பு தண்ணீரில்லாத ஆழ்குழியில் போடப்பட்டார். பின்னர் யூதாவின் ஆலோசனையின் பேரில் இஸ்மயேலருக்கு 20 வெள்ளிக்காசுக்கு விற்கப்படுகின்றார். மிதியானியர் எகிப்தில் உள்ள பார்வோனின் அதிகாரிகளுள் ஒருவனும் மெய்க்காப்பாளர் தலைவனுமான போத்திபாரிடம் யோசேப்பை விற்றுவிடுகின்றனர்.


புத்திபாரின் இடத்தில் யோசேப்புவுக்கு நல்வாழ்வு காத்திருந்தது. “ஆண்டவர் யோசேப்புடன் இருந்தார். எனவே அவர் சிறப்புற்றவராகத் தம் தலைவனின் இல்லத்தில் வாழ்ந்து வந்தார். ஆண்டவர் அவரோடு இருந்ததையும் அவர் தொட்ட காரியமனைத்தையும் ஆண்டவர் துலங்கச்செய்ததையும் அவர் தலைவன் கண்டான். எனவே அவனுடைய தயை யோசேப்புக்கு கிடைத்தது. அவன் அவரைத் தன் சிறப்புப் பணியாளராகம் வீட்டின் மேலாளராகவும் நியமித்து தனக்கிருந்த அனைத்தையும் அவர் பொறுப்பில் ஒப்படைத்தான்.” ***(தொடக்க நூல் 39: 2 - 5).***

இயேசுவும தனது 3 வருட பகிரங்கப் பணிவாழ்வின்போது ஏழைகள் ஒடுக்கப்பட்டவர்கள், சமூகத்திலே ஓரங்கட்டப்பட்டவர்கள் சார்பாகவே செயலாற்றினார். அவர்களுக்காக குரல் கொடுத்தார். அவர்களோடு உறவாடினார். அவர்களை விடுதலை வாழ்வுக்கு அழைத்து வந்தார்.

இஸ்ராயல் மக்கள் ஒடுக்கப்பட்டு, அடிமைப்பட்டுக் கிடந்தபோது ஆண்டவர் அவர்கள் சார்பாகப் போராடி அவர்களை விடுவித்தார். இவ்வாறு ஆண்டவர் ஒடுக்கப்பட்டவர்கள் சார்பாக - அது மக்கள் குழுவாக இருந்தாலும், தனி மனிதர்களாக இருந்தாலும் - அவர்கள் சார்பாக இறைவன் செயலாற்றி அவர்களை விடுவிக்கின்றார் என்பதை விவிலியம் நமக்கு விளக்கமாக எடுத்துரைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## இறைவார்த்தை

– ***(திருப்பாடல். 68:10)*** உமக்குரிய உயிர்கள் அதில் தங்கியிருந்தன; கடவுளே! நீர் நல்லவர்; எனவே **ஒடுக்கப்பட்டோர்க்கு மறுவாழ்வு அளித்தீர்.**

– ***(எசாயா. 61:1)*** ஆண்டவராகிய என் தலைவரின் ஆவி என்மேல் உளது; ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்; **ஒடுக்கப்பட்டோருக்கு நற்செய்தியை அறிவிக்கவும்,** உள்ளம் உடைந்தோரைக் குணப்படுத்தவும், சிறைப்பட்டோருக்கு விடுதலையைப் பறைசாற்றவும், கட்டுண்டோருக்கு விடிவைத் தெரிவிக்கவும் என்னை அனுப்பியுள்ளார்.

– ***(திருப்பாடல். 146:7)*** ஆண்டவர் ஒடுக்கப்பட்டோர்க்கான நீதியை நிலைநாட்டுகின்றார்; பசித்திருப்போர்க்கு உணவளிக்கின்றார்; சிறைப்பட்டோர்க்கு விடுதலை அளிக்கின்றார்.

– ***(எசாயா. 54:14)*** நேர்மையில் நீ நிலைநாட்டப்படுவாய்: **ஒடுக்கப்பட்ட நிலை உன்னைவிட்டு அகன்றுபோம்;** நீ அஞ்சாதே! திகில் உன்னை அணுகாது.

– ***(திருப்பாடல். 10:18)*** நீர் அனாதைகளுக்கும் ஒடுக்கப்படுகிறவர்களுக்கும் நீதி வழங்குகின்றீர்; மண்ணினின்று தோன்றிய மனிதர் இனியும் அவர்களைத் துன்புறுத்த மாட்டார்.

– ***(திருப்பாடல். 103:6)*** ஆண்டவரின் செயல்கள் நீதியானவை; ஒடுக்கப்பட்டோர் அனைவருக்கும் அவர் உரிமைகளை வழங்குகின்றார்.

– ***(யோபு. 36:6)*** கொடியவரை அவர் வாழவிடார்; **ஒடுக்கப்படுவோர்க்கு உரிமையை வழங்குவார்;**

– ***(எரேமியா. 49:11)*** அனாதைகளைப் பற்றிக் கவலைகொள்ளாதே. நான் அவர்களை வாழவைப்பேன். உன் விதவைகள் என்னில் நம்பிக்கை வைக்கட்டும்.

– ***(சீராக்கின் ஞானம். 35:14)*** கைவிடப்பட்டோரின் வேண்டுதலைப் புறக்கணியார். தம்மிடம் முறையிடும் **கைம்பெண்களைக் கைவிடார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***– (எசாயா. 54:4)*** அஞ்சாதே, நீ அவமானத்திற்குள்ளாக மாட்டாய்; வெட்கி நாணாதே, இனி நீ இழிவாக நடத்தப்படமாட்டாய்; உன் இளமையின் மானக்கேட்டை நீ மறந்துவிடுவாய்; உன் கைம்மையின் இழிநிலையை இனி நினைக்கமாட்டாய்.

***– (திருப்பாடல். 68:5)*** திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தையாகவும் கணவனை இழந்தாளின் காப்பாளராகவும் இருப்பவர், தூயகத்தில் உறையும் கடவுள்!

***– (யூதித் து. 9:11ஆ)*** நீர் தாழ்ந்தோரின் கடவுள்; ஒடுக்கப்பட்டோரின் துணைவர்; நலிவுற்றோரின் ஆதரவாளர்; கைவிடப்பட்டோரின் காவலர்; நம்பிக்கையற்றோரின் மீட்பர்;

***– (எஸ்தர் (கிரேக்கம்). 4:17 (வ))*** ஆண்டவரே, உமது கைவன்மையால் எங்களைக் காப்பாற்றும், ஆதரவற்றவளும் உம்மைத்தவிர வேறு துணையற்றவளுமாகிய எனக்கு உதவி செய்யும்.

***– (திருப்பாடல். 146:9)*** ஆண்டவர் அயல் நாட்டினரைப் பாதுகாக்கின்றார்; அனாதைப் பிள்ளைகளையும் கைம்பெண்களையும் ஆதரிக்கின்றார்.

***– (இணைச் சட்டம். 10:18)*** அனாதைகளுக்கும் கைம்பெண்களுக்கும் நீதி வழங்குபவர் அவரே. அன்னியர்மேல் அன்புகூர்ந்து அவர்களுக்கு உணவும் உடையும் கொடுப்பவர் அவரே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தக்கவேளையில் பதில் அளிப்பவர்

**கதை**

## உரிய நேரத்தில் ஏணி இறங்கி வரும்

ஒரு தடவை ஒரு அதிகாரி இலண்டன் மாநகருக்குச் சென்று கொண்டிருந்தபோது, அவர் சென்ற விமானம் அரைமணி நேரத்திற்கு முன்பாகவே சென்றுவிட்டது. விமான நிலையத்தில் விமானம் நிற்க வேண்டிய இடத்தில் ஏணி போன்ற ஓர் சாதனம் (Aero bridge) இறங்கி வரும். அப்பொழுதுதான் அதன் வழியாக இறங்கி வரமுடியும். அந்த நேரத்தில் அது இறங்கி வரவேயில்லை.

அரைமணி நேரம் அவ்விமானத்தில் இருந்தவர்களை அப்படியே விமானத்தில் காக்கவிட்டுவிட்டார்கள்! "எதற்காக எங்களைக் காக்க விட்டிருக்கின்றீர்கள்?" என்று அந்த அதிகாரி கேட்டார். அதற்கு "ஐயா, எல்லாமே கம்பியூட்டர் மூலமாக இயங்குகிறது. இந்த விமானம் எத்தனை மணிக்கு வரவேண்டும்? எப்பொழுது ஏணி திறக்கப்பட வேண்டும்? என்று கம்பியூட்டரில் நியமித்து வைத்திருக்கின்றோம். அந்த நேரம் வந்தால்தான் அந்த ஏணி இறங்கி வருமே தவிர, மற்றப்படி வரவே வராது" என்றார்.

## உத்தியோக உயர்வு வரவில்லை!

என் நண்பர் ஒருவர் விமானப் போக்குவரத்தில் வேலைபார்த்து வந்தார். அவர் மிகவும் பக்தியுள்ளவர்! ஆனால், உத்தியோக உயர்வு அறிவிக்கப்பட்டபொழுது, அவர் பெயர் மட்டும் உத்தியோக உயர்வு பட்டியலில் இடம்பெறவில்லை. மிகவும் மனமுடைந்து போனார்.

அவரோடு வேலை பார்த்தவர்களும்கூட, "நண்பா, ஏன் உனக்கு மட்டும் உத்தியோக உயர்வு வரவில்லை" என்று வேதனைப்பட்டார்கள். இறுதியில் அவர், "எல்லாம் நன்மைக்கேதுவாகவே நடக்கும்" என்று தன்னைத் தேற்றிக்கொண்டார்.

நாட்கள் நகர்ந்தன! திடீரென்று "விமானப் போக்குவரத்து நஷ்டத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. ஆகவே, ஒரு குறிப்பிட்ட அளவிற்குமேல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பளம் பெறும் அதிகாரிகளை வேலையிலிருந்து நீக்கிவிட வேண்டும்'' என்று தீர்மானித்து வேலைநீக்கம் செய்துவிட்டார்கள். அந்த நேரத்தில் அவருக்கு முன் உத்தியோக உயர்வு பெற்றிருந்த, அனைவரும் தங்கள் வேலையை இழந்துவிட்டார்கள்.

அப்போதுதான் அவர், ''நல்ல வேளையாக எனக்கு உத்தியோக உயர்வு வரவில்லை'' என்று சொல்லி ஆண்டவரைத் துதித்தார். சிறிது நாட்கள் கழித்து அவருக்கு உத்தியோக உயர்வும் வந்தது. அவரது வேலையும் பறிபோகாமல் நிலைத்து நின்றது.

**கருத்து**

## இறைவனுக்கென்று நேரமும் காலமும் உண்டு!

*''காலத்தி னால்செய்த நன்றி சிறிதுஎனினும்*
*ஞாலத்தின் மாணப் பெரிது''*

என்கிறார் பொய்யாமொழிப் புலவர் வள்ளுவர். உற்ற காலத்தில் ஒருவன் செய்த உதவி சிறதளவாக இருந்தாலும், அதன் தன்மையை ஆராய்ந்தால் அதன் தன்மை கடலைவிடப் பெரியதாகும் என்பது இதன் கருத்து.


''நல்ல வேளை அந்த நேரத்தில் நீ வந்தது. அந்த நேரத்தில் நீ அந்த உதவியை செய்யாமல் இருந்திருந்தால் என் பாடு அதோ கெதிதான்''
''நான் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை. அவர் சரியாக அந்த நேரத்தில் எனக்கு உதவி செய்வார் என்று'' இதுபோன்ற வார்த்தைகளை நாம் அடிக்கடி சொல்லக் கேட்டிருக்கின்றோம்.

நம் ஆண்டவரும்கூட இது போன்றே நாம் எதிர்பாராத தக்க நேரத்தில் நமக்கு உதவியாக வருகின்றார். நாம் எதிர்பார்க்கும் விடயங்கள் உடனே நடந்தேறாவிட்டால் நாம் சலிப்படைகின்றோம், சோர்ந்து போகின்றோம், சிலவேளை குழம்பிப்போகின்றோம்.

ஆனால் நம்முடைய தேவைகளை எப்போது நிறைவேற்ற வேண்டும் என்பது குறித்து இறைவனுக்கென்று நேரமும், காலமும் இருக்கின்றது. நமது நன்மைக்கு ஏதுவாகவே அவர் காரியங்களை வாய்க்கச்செய்யும் இறைவன்! தக்கவேளையில் பதில் அளிப்பார்.
இதோ அவருடைய வார்த்தைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவார்த்தை

– *(திருப்பாடல். 145:15 (ஆ))* தக்கவேளையில நீரே அவற்றிற்கு உணவளிக்கின்றீர்.

– *(2 கொரிந்தியர் 6:2)* "தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன" எனக் கடவுள் கூறுகிறார். இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!

– *(எசாயா. 49:8 (அ))* ஆண்டவர் கூறுவது இதுவே: தகுந்த வேளையில் நான் உமக்குப் பதிலளித்தேன்; விடுதலை நாளில் உமக்குத் துணையாய் இருந்தேன்;

– *(சீராக்கின் ஞானம் 8:9)* முதியோரின் உரைகளைப் புறக்கணியாதே; அவர்களும் தங்கள் முன்னோரிடமிருந்தே கற்றுக்கொண்டார்கள்; அவர்களிடமிருந்து நீயும் அறிவுக் கூர்மை பெறுவாய்; தகுந்த நேரத்தில் தக்க விடைகூற அறிந்துகொள்வாய்.

– *(திருப்பாடல் 69:13)* ஆண்டவரே! நான் தக்க காலத்தில் உம்மை நோக்கி விண்ணப்பம் செய்கின்றேன்; கடவுளே! உமது பேரன்பின் பெருக்கினால் எனக்குப் பதில்மொழி தாரும்; துணை செய்வதில் நீர் மாறாதவர்.

– *(திருப்பாடல். 75:2)* நான் தகுந்த வேளையைத் தேர்ந்துகோண்டு, நீதியோடு தீர்ப்பு வழங்குவேன்.

– *(சீராக்கின் ஞானம். 39:16)* "ஆண்டவருடைய செயல்களெல்லாமே மிக நல்லவை; அவருடைய கட்டளையெல்லாம் குறித்த நேரத்தில் நிறைவேறும." 'இது என்ன? ; அது எதற்கு?' என யாரும் கூறக்கூடாது; எல்லாவற்றுக்கும் குறித்த நேரத்தில் விளக்கம் கொடுக்கப்படும்.

– *(சீராக்கின் ஞானம் 39:33)* ஆண்டவருடைய செயல்களெல்லாம் நல்லவை. ஒவ்வொரு தேவையையும் குறித்த காலத்தில் அவர் நிறைவுசெய்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**– (சீராக்கின் ஞானம். 39:34)** 'இது அதைவிடக் கெட்டது' என யாரும் சொல்ல முடியாது. எல்லாம் அதனதன் காலத்தில் நல்லவை என விளங்கும்.

**– (அபக்கூக்கு. 2:3)** குறித்த காலத்தில் நிறைவேறுவதற்காகக் காட்சி இன்னும் காத்திருக்கின்றது; முடிவை நோக்கி விரைந்து செல்கின்றது. ஒருக்காலும் பொய்க்காது. அது காலந்தாழ்த்தி வருவதாகத் தோன்றினால், எதிர்பார்த்துக் காத்திரு: அது நிறைவேறியே தீரும்; காலம் தாழ்த்தாது.

**– (சபை உரையாளர் 3:1)** ஒவ்வொன்றுக்கும் ஒரு நேரமுண்டு. உலகில் நடக்கும் ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் ஒரு காலமுண்டு:

**– (எபிரேயர் 4:16)** எனவே, நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்றவேளையில் உதவக்கூடிய அருளைக் கண்டடையவும், அருள் நிறைந்த இறை அரியணையைத் துணிவுடன் அணுகிச் செல்வோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல் 25

# வியத்தகு செயல்கள் செய்பவர்

கதை

## பழைய மனிதனாக இருந்திருந்தால் ...!

சாது சுந்தர்சிங் என்ற ஒரு பக்தன் இருந்தார். ஒரு தடவை அவர் இமயமலைச் சரிவில் தனிமையாக நடந்து போய்க்கொண்டிருக்கும்போது, திருடன் ஒருவன் அவரைப்பிடித்து, தன்னுடைய குகைக்கு அழைத்துக்கொண்டு சென்றான்.

இரவு நேரம் வந்தது. அத்திருடன் தூங்குவதுபோல் பாவனை செய்தான். ஆனால், சாது சுந்தர் சிங் முழங்காற்படியிட்டு செபத்தில் ஆண்டவரோடு உறவாடிக்கொண்டிருந்தார்.

காலையில் எழுந்ததும் அந்தத் திருடன், சாது சுந்தர்சிங் அவர்களிடம் "நீர் இரவு முழுவதும் யாரிடம் பேசிக்கொண்டிருந்தீர்?" என்று கேட்டான். அப்பொழுது அவர், "நான் ஆண்டவரோடு பேசிக்கொண்டிருந்தேன்" என்றார். "யார் அந்த ஆண்டவர்?" என்று கேட்டான் திருடன்.

அப்பொழுது அவர், இறைவன் மனிதனாக இறங்கி வந்ததையும், சிலுவையில் தனக்காக மாண்டதையும் விளக்கிக் கூறினார். இந்த உண்மையைத் தான் உணர்ந்தபோது, தன் வாழ்க்கை மாறினதையும், அவனுக்கு விவரித்துக் கூறினார்.

அப்பொழுது அந்தத் திருடன், "நான் காண்பிக்கும் இடத்துக்கு நீர் வரவேண்டும்" என்று அவரைக் கூட்டிக்கொண்டு போய், ஓர் ஆழமான குகையைக் காண்பித்தான். அதில் ஏராளம் எலும்புக்கூடுகள் கிடந்தன. "ஐயா, இத்தனை பேரைக் கொன்று குவித்த என்னை ஆண்டவர் மன்னிப்பாரா? நானும் உம்மைப்போல ஆண்டவருடன் பேச முடியுமா?" என்று கண்ணீரோடு கேட்டான்.

உடனே சாது சுந்தர்சிங் அவனைப் பார்த்து, "ஆண்டவரே, நான் இத்தனை பேரைக் கொன்றது உண்மைதான். இந்தக் கொலை வெறியிலிருந்து எனக்கு ஒரு விடுதலை தாரும், இந்தக் கொடூர எண்ணத்தை என்னைவிட்டு எடுத்துப்போடும், எனக்கு ஒரு புதிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருதயத்தைத் தாரும். எனக்காகவே நீர் சிலுவையில் மரித்தது உண்மையானால், இப்பொழுதே எனக்கு விடுதலை தாரும் என்று கேள்" என்று சொன்னார். அப்படியே அவன் மண்டியிட்டு, ஒரு குழந்தையைப்போல கதறியழுதான். அன்றே அவன் வாழ்க்கை மாறியது.

அடுத்த நாள் சாது சுந்தர்சிங் அவர்களோடு மலையிலிருந்து இறங்கி நல்ல உடையணிந்து, சமவெளிக்கு அவன் வந்தபோது, அங்குள்ள மக்கள் அவனை அடையாளம் கண்டுகொண்டார்கள். பலர் அவன்மீது கற்களை வீசினார்கள்.

சிலர், "ஐயா இவன்தான் என் தகப்பனாரைக் கொன்றவன். நாங்கள் இவனை விடமாட்டோம்" என்று கூச்சலிட்டார்கள். ஆனால், அவனோ பேசாமல் இருந்தான்.

சாது குறுக்கிட்டு, அவனது உயிரைக் காப்பாற்றினார்! வரும் வழியில் சாது சுந்தர்சிங் அவனைப் பார்த்து, "மக்கள் உனக்கு எதிராக எழுந்த வந்தபோதும், உனக்குக் கோபமே வரவில்லையா?" என்று கேட்டார்.

"அதுதான் எனக்கும் ஆச்சரியமாயிருக்கிறது! நான் பழைய மனிதனாக இருந்திருந்தால் சீறிப்பாய்ந்து, அவர்களை கொன்று குவித்திருப்பேன். ஆண்டவர் என்னில் ஓர் வியத்தகு மாற்றத்தை ஏற்படுத்தி உள்ளார். எப்படி என் இதயத்தில் இந்தச் சாந்தம் வந்தது என்று எனக்கே விளங்கவில்லை." என்றான்.

### கருத்து

## வகைதொகையற்ற வியத்தகு செயல்கள்!

மனிதர்கள் உயிரைக்கூட பணயம் வைத்து வீரதீரச் செயல்களைச் செய்கின்றனர். காளை அடக்குதல், மலை ஏறுதல், கார்ச் சாவாரியில் பங்கேற்றல் என இந்த வியத்தகு வீரதீரச் செயல்களை சொல்லிக்கொண்டே போகலாம். மனிதர்களின் வியத்தகு செயல்களுக்கு வரம்பு உண்டு, வரையறை உண்டு.

விவிலியம் எங்கும் இறைவனின் வியத்தகு செயல்கள் வியாபித்துக் கிடக்கின்றன. இயற்கையின் மாற்றங்களைத தன் மக்களுக்கு சாதகமாக்கி, அவர்களைச் சாதாரண வழிகளில் நடத்தும் வரலாற்று இறைவன், தேவை ஏற்படுகின்றபோது அசாதாரண வழிகளிலும் அதாவது வியத்தகு வழிகளிலும் உதவ முன்வருகின்றார்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு விடுதலைதர பார்வோன் மன்னன் மறுத்தபோது, பத்துவித கொடிய நோய்களை அனுப்பி வதைத்தார். ஆறு லட்சத்திற்கு மேற்பட்ட இஸ்ரயேல் மக்களை வழிநடத்திச் சென்ற மோசே, ஆண்டவருடைய கட்டளைப்படி சீறிவந்த செங்கடலை நோக்கி, கையை நீட்டவே, கடல் இரண்டாகப் பிளந்து, வழிவிட்டது. நடுவில் உண்டான கட்டாந்தரையில் இஸ்ராயல் மக்கள் நடந்து சென்றார்கள். ஆண்டவர் பகலில் மேகத்தூணாகவும், இரவில் நெருப்புத் தூணாகவும் நின்று வழிநடத்திச் சென்றார். (வி.ப. 14:22)

தன் வாழ்வில் எண்ணிறந்த வல்ல செயல்களைச் செய்பவராக நற்செய்தியில் இயேசுவை நாம் சந்திக்கின்றோம். பார்வையற்றவர்களுக்கு பார்வை கொடுக்கின்றார். கால் ஊனமுற்றவர்களை நடக்கச் செய்கின்றார். தொழுநோயாளிகளுக்கு நலம் அளிக்கின்றார். இறந்தவர்களை உயிர்ப்பிக்கின்றார். காற்றையும் கடலையும் அடக்குகின்றார். அதிசயிக்கத்தக்க மீன்பாட்டை அருளுகின்றார். கடலின்மேல் நடக்கின்றார்....

இப்படி அவருடைய வியத்தகு செயல்களை வகை தொகையின்றித் தொடர்கின்றன.



## இறைவார்த்தை

– ***(விடுதலைப் பயணம் 15:11)*** ஆண்டவரே, தெய்வங்களுள் உமக்கு நிகரானவர் எவர்? தூய்மையில் மேலோங்கியவர், அஞ்சத்தக்கவர், புகழ்ச்சிக்குரியவர். அருஞ்செயல் ஆற்றுபவர் ஆகிய உமக்கு நிகர் யார்?"

– ***(எரேமியா 32–27)*** நானே ஆண்டவர்; எல்லா மக்களுக்கும் கடவுள் நானே. அப்படியிருக்க **எனக்குக் கடினமானது எதுவும் உண்டோ?**

– ***(திருப்பாடல் 105: 5)*** அவர் செய்த வியத்தகு செயல்களையும் அவர்தம் அருஞ் செயல்களையும் நினைவில் கொள்ளுங்கள்!

– ***(மீக்கா. 7:15)*** எகிப்து நாட்டிலிருந்து நீங்கள் புறப்பட்டுவந்து நாளில் நடந்ததுபோல நான் அவர்களுக்கு **வியத்தகு செயல்களைக் காண்பிப்பேன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

– ***(திருப்பாடல். 98:1 (அ))*** ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்; ஏனெனில், அவர் வியத்தகு செயல்கள் புரிந்துள்ளார்.

– ***(திருப்பாடல். 92:4)*** ஏனெனில், ஆண்டவரே! உம் வியத்தகு செயல்களால் என்னை மகிழ்வித்தீர்; உம் வலிமைமிகு செயல்களைக் குறித்து நான் மகிழ்ந்து பாடுவேன்.

– ***(திருப்பாடல். 86:10)*** ஏனெனில், நீர் மாட்சி மிக்கவர்; வியத்தகு செயல்கள் புரிபவர்; நீர் ஒருவரே கடவுள்!

– ***(சீராக்கின் ஞானம். 36:5)*** புதிய அடையாளங்களை வழங்கும்; வியத்தகு செயல்களை நிகழ்த்தும்; உம் கையினை, வலக்கையினை மாட்சிமைப்படுத்தும்.

– ***(திருப்பாடல். 9:1)*** ஆண்டவரே, என் முழு இதயத்தாலும் உம்மைப் புகழ்வேன்; வியத்தகு உம் செயல்களையெல்லாம் எடுத்துரைப்பேன்.

– ***(திருப்பாடல். 40:5)*** ஆண்டவரே! எண்ணிறந்தவற்றை நீர் எமக்கெனச் செய்துள்ளீர்; உமக்கு நிகரானவர் எவரும் இலர்; என் கடவுளே! உம் அருஞ்செயல்களும் திட்டங்களும் எங்களுக்காகவே; அவற்றை நான் எடுத்துரைக்க விரும்புவேனாகில் அவை எண்ணிலடங்கா.

– ***(சீராக்கின்ஞானம். 17:9)*** தம் வியத்தக செயல்கள் பற்றி என்றும் பெருமைப்படும் உரிமையை அவர்களுக்கு அளித்தார்.

– ***(பாரூ. 2:11)*** "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரே! கை வன்மையாலும் அடையாளங்களாலும் வியத்தகு செயல்களாலும மாபெரும் ஆற்றலாலும் ஓங்கிய புயத்தாலும் எகிப்து நாட்டிலிருந்து உம் மக்களை அழைத்து வந்தீர்;...

– ***(யோபு 5:9)*** "ஆராய முடியாப் பெரியனவற்றையும், எண்ணிலடங்கா வியக்கத்தக்கனவற்றையும் செய்பவர் அவரே."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நிறைவுரை

## ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது

சுமார் 20 ஆண்டுகளுக்கு முன் ஒருசில கல்லூரி மாணவர்கள் பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவுக்கு சுற்றுப்பயணமாக வந்தனர். அதில் ஒரு மாணவனின் ஒரே நோக்கம் தாஜ்மகாலைப் பார்க்க வேண்டும் என்பது.

பம்பாய் நகரிற்கு வந்திறங்கிய அந்தச் சுற்றுலாக் குழுவினர் சென்னை திருவனந்தபுரம், கல்கத்தா, டில்லி ஆகிய நகரங்களைப் பார்த்துவிட்டு அங்கிருந்து ஒரு வாடகைப் பேருந்தில் தாஜ்மகாலைப் பார்க்கவென ஆக்ரா புறப்பட்டனர்.

திடீரென்று ஒரு விபத்து ஏற்பட்டது! நல்லவேளை ஒருசில காயங்களுடன் அவர்கள் உயிர் தப்பினர். எனவே தாஜ்மகாலைப் பார்க்கின்ற திட்டம் கைவிடப்பட்டது. விபத்தைக்கூட பெரிதாகக் கருதாமல் தாஜ்மகாலைப் பார்க்க முடியாமல் போனதை மிகப்பெரிய இழப்பாகக் கருதினான் அந்த மாணவன். எனவே மற்ற நண்பர்கள் ஒன்றுசேர்ந்து தாஜ்மகாலைப் பற்றிய ஒரு புத்தகத்தை வாங்கி அன்பளிப்பாகக் கொடுத்து தாஜ்மகாலைப்பற்றி நன்கு படித்து அறிந்துகொள்ளச் செய்தனர். அந்த மாணவன் மிக்க மகிழ்ச்சியோடு பெற்றுக்கொண்டு அப்புத்தகத்தை ஒரு வரிவிடாமல் பலமுறை படித்து முடித்தான்.

தன் வீட்டிற்குச் சென்றவுடன் அம்மாணவனின் தாய் தாஜ்மகால் எப்படி இருந்தது என்று கேட்டார். அம்மாணவன் உடனே, தாஜ்மகால் கட்ட எத்தனை கலைஞர்கள், கூலியாட்கள் எத்தனை நாட்கள் வேலை செய்தனர் என்றும், எத்தனை டன் கற்கள் மணல் தேவைப்பட்டது என்றும் மிகத் துல்லியமாகப் பதிலளித்தான். ஆனால் இவ்வளவு உண்மையைத் தெரிந்திருந்தும் தாஜ்மகாலை நேரில் பார்த்த அனுபவம் அவனுக்கு இல்லை.

இறைவனின் இனிய இயல்புகளை நாம் எந்த அளவுக்கு விவிலியத்தில் இருந்து அறிந்து வைத்திருந்தாலும், நம் வாழ்வில் இறைவனை அனுபவிக்காவிடில் அது வெறுமனே ஏட்டுச் சுரக்காய்தான்.

மாம்பழத்தை ஒருநாளும் அறியாத, அறியாத தெரியாத ஒரு மனிதனுக்கு முன்னாள் நின்றுகொண்டு, "இதோ பார் இந்த மாம்பழம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு சுவையானது என்று தெரியுமா? ஆ.... என்ன ... ருசி! என்ன ... ருசி!" என்று நான் சொன்னால் அவனால் அதன் சுவையை, ருசியை உணர முடியுமா? அவன் அந்த மாப்பழத்தை தனது கையில் எடுத்துச் சாப்பிட்டால் அன்றி அதன் ருசியை, சுவையை உணரவோ அனுபவிக்கவோ முடியாது.

இந்த நூலில் நான் ஆண்டவரின் இனிய இயல்புகளை விவிலியத்தின் வெளிச்சத்தில் வெளிக்கொணர்ந்து காட்ட முயன்றிருக்கின்றேன். இதை வெறுமனே வாசிப்பதென்பது மாம்பழத்தின் சுவையை ருசிக்காமல் அதை வெறுமனே பார்ப்பதற்கு மட்டும் சமனாகும். எனவே நீங்கள் வாசித்த இந்நூல் உங்கள் வாழ்வாக மாற என் வாழ்த்துக்களும் செபங்களும்.

***ஆண்டவர் எவ்வளவு இனியவர் என்று சுவைத்துப் பாருங்கள்!***

*குறிப்பு :*

***இந்நூல் பற்றிய உங்கள் எண்ணங்களை, கருத்துக்களை அறிய விரும்புகின்றோம். எனவே எமக்கு எழுதுங்கள் :***

*முகவரி*
***அருட்பணியாளர் தமிழ் நேசன்***
***மறைக்கல்வி நிலையம்,***
***புனித செபஸ்ரியார் பேராலய வீதி,***
***மன்னார்.***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## நூல் ஆசிரியர் தமிழ் நேசன்

தமிழ் நேசன் என்னும் பெயரில் எழுத்துலகில் வலம் வந்துக்கொண்டிருக்கும் அருட்பணியாளர் பாவிலு கிறிஸ்து நேசரெட்னம் அடிகளார் முருங்கன் கிராமத்தில் 1969ல் பிறந்தவர். மன்/ முருங்கன் மகா வித்தியாலயத்தில் ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியையும், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியில் உயர்தரக் கல்வியையும் கற்ற இவர், 1986ம் ஆண்டில் யாழ் புனித மாட்டீனார் ஆரம்பக் குருமடத்தில் இணைந்து தனது குருத்துவ உருவாக்கத்தை ஆரம்பித்தார். கண்டி அம்பிட்டிய தேசிய குருத்துவக் கல்லூரியில் மெய்யியல் கல்வியையும், யாழ் புனித பிரான்சிஸ் சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில் இறையியல் கல்வியையும் நிறைவு செய்தார்.

மன்னார் மறைமாவட்டக் குருவாக 1997ல் திருநிலைப்படுத்தப்பட்ட இவர், வங்காலை புனித ஆனாள் ஆலயம் (1997-1998), மன்னார் புனித செபஸ்தியார் பேராலயம் (1998-2000) ஆகிய இடங்களில் உதவிப் பங்குத்தந்தையாகவும், தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் பங்குத் தந்தையாகவும் (2000-2003) பணியாற்றினார். கடந்த ஏழு வருடங்களாக (2000 - இன்றுவரை) 'மன்னா' என்ற மன்னார் மறைமாவட்டப் பத்திரிகையின் ஆசிரியராகப் பணியாற்றி வருகின்றார். கடந்த நான்கு வருடங்களாக (2003 - இன்றுவரை) மன்னார் மறைமாவட்டத்தின் மறைக்கல்வி, கல்வி, விவிலியப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனராகவும் கடந்த வருடத்தில் இருந்து (2006) மன்னார் மறைமாவட்டத்தின் மறைத்தூதுப் பணிகள் ஆணைக்குழுவின் இயக்குனராகவும் பணியாற்றி வருகின்றார்.

இவர் கடந்த 20 வருடங்களாக கவிதை, சிறுகதை, விழிப்புணர்வுக் கட்டுரைகள் போன்ற ஆக்க இலக்கியங்களை பாதுகாவலன், மன்னா, தொண்டன், நான், இறையியல் கோலங்கள் போன்ற கத்தோலிக்க கிறிஸ்தவ சஞ்சிகைகளில் படைத்துவருகின்றார். இதைவிட தமிழில் பல்வேறு ஆய்வுக் கட்டுரைகளை தினகரன், வீரகேசரி போன்ற தேசிய நாளேடுகளிலும், மல்லிகை போன்ற தேசிய கலை இலக்கிய சஞ்சிகைகளிலும், ஆங்கிலத்தில் சில ஆய்வுக் கட்டுரைகளை மெசஞ்சர் என்ற ஆங்கில வாரப்பத்திரிகையிலும் எழுதியுள்ளார்.

மறையாசிரியர்கள், கத்தோலிக்க ஆசிரியர்கள், பொதுநிலைப் பணியாளர்கள், தன்னார்வ இறைவார்த்தைப் பணியாளர்கள், அன்பிய ஊக்குவிப்பாளர்கள் என பல்வேறு குழுவினருக்கு கருத்தமர்வுகளையும், தியானங்களையும் நடாத்தி வருகின்றார்.

## இந்நூல் பற்றி இவர்கள் இப்படிச் சொல்கிறார்கள்...

- தமிழ் நேசன் அடிகளார் சிறிய கதைகளுடன் சிந்தனைகளையும் இறைவார்த்தைகளையும் அழகுற இணைத்து இறைவனின் இனிய இயல்புகளை மகிழ்வாகவே சுவைக்க இந்த நூலில் வழிசெய்திருக்கின்றார். மறையுரைகளைத் தயார் செய்யவும், தியானங்களை நடத்தவும் பெரும் துணைபுரியும் இந்நூலை அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும் என அழைப்புவிடுக்கின்றோம்.

*மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, யாழ் ஆயர், யாழ் மறைமாவட்டம்.*

- இறைவனை அறிந்து, இறைவார்த்தையில் மறைந்துள்ள மறையுண்மைகளைக் கற்று, நமது வாழ்வை இறைவழியில், இறைப்பிரசன்னத்தில் இட்டுச்செல்ல இந்நூல் சிறப்பான ஓர் வழிகாட்டியாக அமையும் என நான் உளமார நம்புகின்றேன்.

*அருட்பணியாளர் அ. விக்ரர் சோசை, குருமுதல்வர், மன்னார் மறைமாவட்டம்.*

- மக்கள் அரசியல் சூறாவளியில் அல்லலுற்ற அகதிகளாகி ஆதங்கப்பட்டு வாழும் இக்காலத்திலே ஆண்டவர் தமது மக்களை இன்றும் கைவிடவில்லை என்கிற நம்பிக்கை ஒளி இந்நூலைப் படிப்பவரிடத்தே நிச்சயமாகத் தோன்றும் என்பது என் எண்ணம்.

*ஜே. பெஞ்சமின், பொதுநிலை இறைபணியாளர்.*

- கணனித் தொழில்நுட்ப அறிவும், இணையத்தளத்தின் வேகமான வளர்ச்சியும், பல்வேறு சமூகத்தொடர்பாடல் ஊடகங்களும் மலிந்து மனிதர்களைத் திசைதிருப்பி பல தடவைகளில் மனித மாண்பினை இழக்கச் செய்கின்ற நிலையில், 'இறைவனின் இனிய இயல்புகளை' தாங்கிய பேழையாகிய இந்நூல் நம் மக்களுக்கு ஒரு வரப்பிரசாதம் என்றே கருதுகின்றேன். மனிதம் புனிதம் பெற, நம்பிக்கை இழந்தவர்கள் நல்வாழ்வும் நம்பிக்கையும் பெற விவிலியக் கண்ணோட்டத்தில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

*திருமதி. பெப்பி விக்ரர் லெம்பேட், ஆசிரிய ஆலோசகர், மன்னார்.*

ISBN: 955-1627-00-8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org